யுனெஸ்கோ கூரியர்

ஏப்ரல் 1984—தனிப்பிரதி ரூ. 2-00

எழுத்தறிவு
சாதனையின் ஏணி

நட்புக் கரம்

யுனெஸ்கோ
பொது—இயக்குநர்

அச்சமூட்டும் உறுதியின்மையும் மாபெரும் நம்பிக்கையும் மிகுந்த காலத்தில் வாழ்கிறோம். முதன் முறையாக உலக நாடுகள் அளவளாவி உறவு கொண்டாடும் ஒரே அமைப்பாக இணையும் காலம். இது இனிமேல் அவற்றின் எதிர்காலம் ஒன்றையொன்று சார்ந்திருக்கும். அவை பெற்றுள்ள அறிவியல், தொழில்நுட்ப வளங்கள் தம் உடனடியான பிரச்சினைகள் பலவற்றைத் தீர்க்க உதவும்.

ஆனால் இதைச் செய்வதற்கு அவை தம் நோக்கத்தில் ஒன்றுபட்டு, பொதுவான ஓர் எதிர் காலத்தை எதிர்நோக்கியிருப்பதால் தம் முயற்சிகளிலும் ஒன்றுபடவேண்டும். அதாவது, ஒன்றையொன்று சார்ந்திருப்பதைவிட ஒன்றுபட்டுச் செயல்பட முடியுமென மனுக்குலம் எண்பிக்க வேண்டும்.

எவ்வளவு தொலைவிலிருந்தாலும், அவர்களையும் அருகிலிருப்பவராகக் கருதி உதவுவதே ஒன்றுபடும் பழக்கமாகும்.

இவ்வொற்றுமையைத் திணிக்க முடியாது; அதை வாழ்ந்து காட்டவேண்டும்.

ஒற்றுமையைச் செயல்படுத்துவதே யுனெஸ்கோவின் முக்கிய பணிகளுள் ஒன்று. ஒற்றுமையினால்தான் நகர்கள், நாடுகள், கண்டங்கள் ஆகியவற்றிலுள்ள மக்களையும் தனிமனிதரையும் இணைக்கவல்ல நட்பை உருவாக்க முடியும்.

ஆகவே, 'யுனெஸ்கோ கூரியர்' ஈடுபட்டுள்ள ஒற்றுமை இயக்கத்தில் பங்கு பெறுமாறு இன்று உங்கள் ஒவ்வொருவரையும் வேண்டுகிறேன்.

'*யுனெஸ்கோ கூரியர்*, வாசகரான நீங்கள், உங்களுக்குத் தெரியாத, ஆனால் உங்கள் உடன்பிறப்பான ஒருவரை, வாழ்க்கை நிலைமையின் காரணமாக உங்களுக்கு அந்நியராகத் தோன்றும் ஒருவரை, உங்களை ஒன்றாக இணைக்கும் பிணைப்புகளை எல்லாம் *யுனெஸ்கோ கூரியர்*, வாயிலாகக் காட்டக் கூடிய ஒருவரை நினைத்துக் கொள்ளுங்கள். அவருக்காகச் சந்தாச் செலுத்தி, மனிதரிடையே அமைதியையும் நட்பையும் வளர்க்க முயலும் யுனெஸ்கோவிற்கு உதவுங்கள்.

இவ்வாறு செய்வதன் மூலம் '*யுனெஸ்கோ கூரியர்*, அனைத்துலக ஒற்றுமையின் உண்மையான குரலாக உதவ முடியும்.

A. M'Bow

அமது மஹ்தார் எம்'போ

(நட்புச் சந்தா அனுப்பும் விவரங்களுக்கு எதிர்ப்புறச் சீட்டைப் பார்க்கவும்)

UNESCO

நட்புக்கரம்

''நட்புக்கரம்'' என்பது ஓர் ஒருமைப்பாட்டு இயக்கத்தின் பெயர். யுனெஸ்கோ கூரியரின் வாசகர்களுக்கு, அவர்கள் அறிந்துள்ள ஆனால் ஒரு சந்தாதாரராகச் சேர இயலாதிருக்கிற ஒருவருக்கு நன்கொடைச் சந்தா அளிப்பதற்கு இது வாய்ப்பளிக்கிறது. யுனெஸ்கோ மன்றங்கள் மற்றும் சங்கங்களின் உலக இணையம், உலகெங்கும் பன்னாட்டுப் பரிமாற்றங்களை ஊக்குவிக்கும் தனது முயற்சியின் ஒரு பகுதியாக இவ்வியக்கத்திற்குத் துணை நிற்கிறது. இன்றைய வாசகர்களுக்கும் எதிர்கால வாசகர்களுக்குமிடையிலான ஒருமைப்பாட்டுப் பிணைப்பை இவ்விணையம் ஏற்படுத்தும். அவர்கள் பின்னர் தமக்குள் தொடர்பு கொண்டு நண்பர்களாவார்கள்.

நட்புக்கரம்

''நட்புக்கரம்'' இயக்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, நான் அறிந்திராத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நண்பர்களுக்கு ''யுனெஸ்கோ கூரியர்'' அனுப்புவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஓராண்டுச் சந்தாக்கள் அளிக்க விரும்புகிறேன்.

ஒருமைப்பாட்டு இயக்க சிறப்பு விகிதம்

- ☐ 1 ஓராண்டுச் சந்தா : ரூ 21
- ☐ 2 ஓராண்டுச் சந்தாக்கள் : ரூ 42
- ☐ 3 ஓராண்டுச் சந்தாக்கள் : ரூ 63
- ☐ 4 ஓராண்டுச் சந்தாக்கள் : ரூ 84
- ☐ 5 ஓராண்டுச் சந்தாக்கள் : ரூ 105
- ☐ 10 ஓராண்டுச் சந்தாக்கள் : ரூ 210
- ☐ 20 ஓராண்டுச் சந்தாக்கள் : ரூ 420

'நேசக்கரம்' சந்தாத் திட்டத்தில் ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ் அராபிக் இதழ்களுக்கு சந்தாச் செலுத்த விரும்புவோர் 'நேசக்கரம்' 7, பிளேஸ் தெ ஃபோந்தனோ, பாரிஸ், ஃபிரான்ஸ் என்ற முகவரிக்கு எழுதுக.

பெரிய எழுத்துகளில் எழுதுக.

என் பெயர்

என் முகவரி

பின்கோடு நகரம்

நாடு

☐ நான் 'யுனெஸ்கோ கூரியர்' சந்தாதாரர் அல்லன்.

☐ நான் ஒரு சந்தாதாரர்; எனது எண்:

ரூபாயில் அல்லது மாற்றக்கூடிய மற்றொரு செலாவணியில் அல்லது பன்னாட்டு பணவிடை மூலம் செலுத்தம் செய்ததற்கான செலுத்துச் சீட்டினை இத்துடன் இணைத்துள்ளேன்.

அனுப்பவேண்டிய முகவரி :
'யுனெஸ்கோகூரியர்'– தமிழ்ப்பதிப்பு
18 கிழக்கு ஸ்பர்டாங் சாலை,
சேத்துப்பட்டு, சென்னை-600 040
தமிழ்நாடு, இந்தியா

உங்களுடைய நன்கொடையைப் பெற்ற மூன்று மாதங்களுக்குள், உங்களுடைய பெயரையும் முகவரியையும் யுனெஸ்கோ மன்றங்கள் மற்றும் சங்கங்களின் இணையம் உங்கள் எதிர்கால நண்பருக்கு அல்லது நண்பர்களுக்குத் தெரிவிக்கும்.

நீங்கள் அளிக்கும் சந்தா அல்லது சந்தாக்கள் முடிவுறும்போது, சந்தாவைப் புதுப்பிப்பதற்கான வேண்டுகோள் உங்களுக்கு அனுப்பப்படவேண்டுமா எனக் குறிப்பிடுக.

☐ ஆம் ☐ வேண்டாம்.

உரிய செலுத்தம் இன்றிவரும் வேண்டுகோள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

யுனெஸ்கோ கூரியர்

உலகைக் காட்டும் பலகணி
ஏப்ரல்—1984

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்து கொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினால் இருபத்தியேழு மொழிகளில் வெளியிடப்படுகிறது.

தமிழ்	ஹிந்தி	கொரியன்
ஆங்கிலம்	ஹீப்ரு	சுவாஹிலி
ஃபிரெஞ்சு	பெர்சியன்	கிரோடே-செர்ப்
ஸ்பானிஷ்	டச்சு	மாசிடோனியன்
ரஷ்யன்	போர்த்துகீஸ்	செர்போ-கிராட்
ஜெர்மன்	துர்க்கிஸ்	ஸ்லோவேன்
அராபிக்	உருது	சீனம்
ஜப்பானிஸ்	கட்டலான்	பல்கேரியன்
இத்தாலியன்	மலேசியன்	கிரீக்

விற்பனை, விநியோக அலுவலகம்:
18, கிழக்கு ஸ்பர்டங்க் சாலை, சென்னை-600 031
ஆண்டுச் சந்தா ரூ. 21

ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளாஸ் தெ போந்தனோ,
பாரிஸ்-7ஃபிரான்ஸ்.

பிரதம ஆசிரியர் : எதுவார்து கிளிசான்

தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியர் :

மீ. முகம்மது முஸ்தபா (மணவை முஸ்தபா)

April 1984. No. 189

ISSN 30304-3177

பக்கம்

4 அறநெறிக் கட்டளை
-அமது மஹ்தார் எம்'போ

6 எழுத்தறிவின் பண்பாட்டு வேர்கள்
-மார்கோஸ் கெரா

9 மனமிருந்தால்...
மாறி வரும் சமூகங்களும் கற்கும் ஊக்கமும்
-மார்செல் தெ கிளர்க்

12 அடுத்தது என்ன?
புதிதாக எழுத்தறிவு பெற்றோர் மேலும் பயிலும் உலக நூல்களின் காட்சி
-ஆதாமா உவான்

15 எழுத்தறிவுப் பயிற்சியின் அரசியல் பொருளாதாரம்
-ஹெர்பர்ட் கின்டிஸ்

17 உலக முழுவதுமிருந்து அறிக்கைகள்

22 'நான்காம் உலகி'ல் எழுத்தறிவின்மை
செல்வ நாடுகள் கவலை தரும் ஒரு நிலையை உணர்கின்றன
-அலி ஹமதாஷ்

26 அயல் நிலத்தில் சிறுவர்
குடிபுகுந்த இரண்டாம் தலை முறையினரின் பிரச்சினை
-சோனியா அபதிர் ரம்ஸி

29 உலகினுள்ளே உள்ள சொல்
அனைத்துலகை ஆய்ந்து படித்தல்
-பாவ்லோ ஃப்ரேர்

33 யுனெஸ்கோவும், எழுத்தறிவின்மைக்கு எதிரான போராட்டமும்

34 எழுத்தறிவுப்பணி விருதுகள்—1983

VII- நட்புக்கரம்
(நட்புக்கர இயக்க துண்டு வெளியீடு 2/3 மற்றும் 34/35 பக்கங்களில் இணைக்கப்பட்டுள்ளது.)

ஆசிரியர் மடல்

தனிமனிதன் ஒருவன் அறிவு உலகிலிருந்து ஒதுக்கப்பட்டு, தன் வாழ்வைப் பாதிக்கும் முக்கிய முடிவுகளை எடுக்கும் வாய்ப்பிழந்து நிற்கும் வரையில், எழுத்தறிவின்மைக்கு எதிரான போராட்டம் தொடர வேண்டும், தொடரும் என்று உறுதியாகக் கூறலாம்.

ஆயினும், எழுத்தறிவின்மை தனி மனிதனின் குறைபாடு மட்டுமன்று; வளரும் நாடுகளின் சமூக, தொழில் நுட்ப விடுதலைக்குப் பெருந்தடையாக இருக்கிறது எனலாம். அது தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குமுள்ள இடைவெளியைப் பெருக்கும் முக்கிய காரணங்களுள் ஒன்று.

இறுதியாக, வெவ்வேறு பண்பாடுகள் ஒன்றையொன்று ஊடுருவி வளப்படுத்துவதையும் அது தடுக்கிறது. எழுதப் படிக்கக் கற்றல் ஒருவனது பண்பாட்டு அடிப்படைகளை உறுதிப்படுத்துவதுடன், பிற பண்பாடுகளை அறியும் வாய்ப்பையும் தருகின்றது.

செல்வ நாடுகளிலும் எழுத்தறிவின்மையின் விளைவுகளைக் காண முடிகின்றது. அன்றாடம் பெருகிவரும் அவற்றின் சிக்கலான அமைப்புகள் எழுத்தறிவு பெறாதவரின் இடர்பாடுகளைப் பெருக்குகின்றன.

தொடக்கத்திலிருந்தே யுனெஸ்கோ எழுத்தறிவின்மைக்கு எதிராக உலகம் நடத்திவரும் போராட்டத்தை வளர்த்து அதற்கு வழிகாட்டி வந்துள்ளது. சில துறைகளில் ஓரளவு வெற்றி கிடைத்துள்ள போதிலும், எழுத்தறிவின்மைப் பெருக்கம் ஓரளவு தடுக்கப்பட்டுள்ள போதிலும், உலக மக்கள் தொகை பெருகிவருவதால், எழுத்தறிவற்றோரின் தொகையும் வளர்ந்துவருகின்றது.

ஆகவே, எழுத்தறிவுத் திட்டங்கள் மிக அவசரமாகத் தேவைப்படுகின்றன. 'யுனெஸ்கோ கூரியரின்' இவ்விதழில், ஓரளவாயினும், உலக முழுவதும் செயல்படும் எழுத்தறிவுத் திட்டங்களை விளக்கி, அவற்றைப் பயனுறுதியுடன் வெற்றிகரமாகச் செயல்படுத்தும் தேவைபற்றி எடுத்துக் கூற முயல்கின்றோம். இவற்றுள் மிகவும் முக்கியமானது, எழுத்தறிவுத் திட்டங்களை வகுக்கும்போது சூழ்நிலை மரபுகள், பண்பாட்டுச் சூழலின் தனிப்பட்ட நலன்கள் ஆகியவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகளைக் கவனிக்க வேண்டும். நமது கட்டுரையாளர் ஒருவர் கூறுவது போல், "நாம் மக்களுக்கு எழுத்தறிவு வழங்குவதில்லை; அவர்களே எழுத்தறிவு பெறுகின்றனர்"

அட்டை: மெக்ஸிகோ நகரின் டெப்பிட்டோ மாவட்டத்திலுள்ள சுவரோவியம்.

நிழற்படம் © பாபுலார் ஊலின், ஃபிரான்ஸ்

‘அறநெறிக் கட்டளை’

அமது-மஹ்தார் எம்'போ

எழுத்தறிவின்மையை ஒழித்தல் பன்னாட்டுச் சமுதாயத்தின் அறநெறிக் கடப்பாடாகும். இதற்குரிய காரணங்கள் மிகத் தெளிவானவை; 1980இல் 82.4 கோடி, அதாவது வயது வந்தோருள் 29 சதவீதம் பேர் எழுத்தறிவற்றோர் என்பதை எண்ணிப் பார்த்தாலே போதும். எழுத்தறிவின்மையின் வீதம் படிப்படியாகக் குறைந்து வந்த போதிலும், இத்தொகை இடையறாது வளர்ந்து வருகின்றது.

இப்போக்கு தொடருமானால், இந்நூற்றாண்டின் இறுதியில் 90 கோடிப் பேர் எழுத்தறிவற்றோராக இருப்பர். எழுத்தறிவின்மை வறுமையுடன் நெருங்கிய தொடர்புடையது. வளங்குன்றிய நாடுகளிலும், போதுமான உணவு, உடல் நலம், உறைவிடம் இல்லாமலோ, வேலை இல்லாமலோ வாடி வருந்தும் மக்களிடையேயும் எழுத்தறிவின்மை பரவலாக இருக்கின்றது.



எழுத்தறிவின்மை பரவலாக நிலைபெற்றிருத்தல் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருக்கின்றது; பல்லாயிரம் மக்கள் தம் வாழ்வை வளுக்கவிடாது தடுக்கின்றது. இது வறுமைக்கெதிரான போராட்டத்தையும், ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதையும், தனிமனிதரிடையேயும் நாடுகளிடையேயும் சமத்துவ, நீதி உறவுகளை நிறுவும் முயற்சிகளையும் தோல்வியடையச் செய்கிறது.

கடந்த பல ஆண்டுகளாக எழுத்தறிவை வளர்க்க யுனெஸ்கோ செய்துவரும் திட்டங்களும் முயற்சிகளும் யுனெஸ்கோவும் அதன் உறுப்பு நாடுகளும் பெற்றுள்ள அனுபவத்தைக் காட்டுகின்றன. அண்மையில் முடிவுற்ற 1984-1985 ஆம் ஆண்டுகளுக்கான பொது மாநாட்டின் 22ஆம் கூட்டம் நிறைவேற்றிய திட்டத்தில் பல சிறப்பான புது முயற்சிகள் உள்ளன.

இவற்றுள் முக்கியமானது உலகளாவிய திட்டமாகும். இதில் தொடக்கக் கல்வியைப் பரவலாகப் புதுப்பிக்கும் முயற்சி இளைஞருக்கும் முதியோருக்கும் வழங்கப்படும் எழுத்தறிவுக் கல்வியுடன் இணைக்கப்பட்டுள்ளது. போதுமான தொடக்கக் கல்வி இல்லையெனில், எழுத்தறிவின்மை பெருகுகிறது என்பது உண்மை. தொடக்கப்பள்ளி செல்லும் வயதுள்ள 12 கோடி சிறுவர் இன்று பள்ளி செல்லும் வாய்ப்பைப் பெறவில்லை. போதிய முயற்சி எடுக்கவில்லையெனில், வருங்காலத்தில் எழுத்தறிவற்ற முதியோரின் தொகை பெருகிவிடும். பள்ளி செல்லாத இச்சிறுவருள் 60 சதவீதம் பேர் சிறுமியர். வருங்கால மங்கையரும் அன்னையருமான இவர்கள வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பெறப்போகும் பங்கு மிக முக்கியமானதாகும்.

பள்ளி செல்லும் வாய்ப்பு பெற்றோரில் பலர் நீண்ட காலம் தொடர்ந்து கல்வி பயிலாதிருக்கலாம்; அல்லது நிலையான எழுத்தறிவைப் பெறத் துணை செய்யும் தரமான, வாழ்க்கையோடியைந்த கல்வியைப் பெறாமலிருக்கலாம். ஆகவே, எழுத்தறிவின்மையைப் போக்கும் எந்தத் திட்டத்திலும் தொடக்கக் கல்வியைப் பரப்பி, சீர்திருத்துதல் இன்றியமையாத இயல்பாகும்.

பல இளைஞரும் முதியோரும் திரும்பவும் எழுத்தறிவை இழக்கும் அபாய நிலை பற்றியும் யுனெஸ்கோ திட்டம் உடனடியாக கவனம் செலுத்துகிறது. இச்சிக்கலான பிரச்சினையின் காரணத்தை முறையாகக் கண்டுபிடிக்க ஆராய்ச்சிகள் நடத்தவேண்டும்.

எழுத்தறிவின்மைப் பிரச்சினையின் மற்றோர் இயல்பு ஆராய்ச்சியாளரின் கவனத்தை அண்மையில் ஈர்த்துள்ளது. அதுதான் ''செயல்முறை எழுத்தறிவின்மை'' அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ந்துள்ளதால், சமூக, பொருளாதார வாழ்க்கையின் தேவைக்கேற்ற எழுத்தறிவுத் தரமும் உயர்ந்துள்ளது. ''செயல்முறை எழுத்தறி''வின் அளவு இன்னும் அறுதியிடப் பெறவில்லை. ஆனால், அது தொடர்ச்சியாக உயர்ந்து வருகின்றது. எடுத்துக்காட்டாக, கடந்த காலத்தில் வேலைத் தகுதி தந்த கல்வியின் தரம் வருங்காலத்தில் போதுமானதாக இராது.

எழுத்தறிவுத் திறமைகளைப் பெறுவதனால் மட்டுமே ஒருவன் தனது பண்பாட்டின் முழு, செயல்திறமிக்க உறுப்பினறாக முடியும். அப்போதுதான் திரண்ட அறிவினாலும் தொழில் திறமைகளினாலும் பயன் பெறமுடியும்; தனது சமூக வளர்ச்சி பற்றிய கூட்டுச் சிந்தனையில் பங்கு பெற இயலும். சுருங்கச் சொல்லவேண்டுமானால், அப்போதுதான் முழு வளர்ச்சி பெற்ற குடியாக முடியும்.

எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கு முதன் முதலாக நாட்டளவில் வலுவான முயற்சி தேவையெனினும், உண்மையில் அது உலகம் தழுவிய பிரச்சினையாகும். அதை ஒழிக்க உலகளாவிய முயற்சி தேவை. குறிப்பாக, பன்னாட்டுக் கூட்டுறவு தேவை. இதற்கு உண்மையான வளர்ச்சிக்கேற்ற அடிப்படை மனித தேவைகளில் கடந்த காலத்தைவிட மிகுந்த அக்கறை காட்டவேண்டும்.

எழுத்தறிவுப் பணிக்கு வழங்கும் மொத்த உதவியைப் பெருக்குமாறு எல்லா அதிகாரிகளுக்கும் திரும்பவும் வேண்டுகோள் விடுக்கிறேன். இந்நூற்றாண்டின் இறுதிக்குள், எழுத்தறிவற்றோரின் பெருகிவரும் தொகையை நிறுத்தவும், அதைக் குறைக்கவும் இது பயன்படும் சுதந்திரம், படைப்பாற்றல், அனைவருக்கும் முன்னேற்றம் ஆகிய சூழ்நிலையில் புதிய கி.பி. 2000ஆம் ஆண்டைத் தொடங்குவதற்கு இது வழிவகுக்கும்.



நிழற்படம் © ஹெலேன் பாரா, பாரிஸ்

எழுத்தறிவின் பண்பாட்டு வேர்கள்

மார்கோஸ் கெரா

மக்களுக்கு எழுத்தறிவிக்கும் முறையோடு அவர்களுடைய பண்பாட்டுத் தற்பண்புக் கூறுகள் ஒருங்கிணைக்கப்படவேண்டும் என்பது எல்லோரும் நன்கறிந்த உண்மை. எனினும், இந்தக் கொள்கை இன்று திட்டமிட்டு முறையாகக் கையாளப்படாததற்கு என்ன காரணம்?

மூன்றாம் உலக நாடுகளும், தொழில் வளமடைந்த நாடுகளும் தம் நாட்டு இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் எழுத்தறிவித்துக் கல்வியூட்டுவதில் ஈடுபட்டுள்ளன. மக்களின் பண்பாட்டு நெறிமுறைகளை மதிக்காததன் காரணமாக எத்தனையோ கல்வி நடவடிக்கைகள் தோல்வியடைந்தன, இதே காரணத்தால், எத்தனையோ அரசியல் நடவடிக்கைகளும், எத்தனையோ வளர்ச்சித் திட்டங்களும் பாதிக்கப்பட்டன.

கல்வி நடவடிக்கைகள் அனைத்துமே பண்பாடு சார்ந்தவைதாம் என்று பிரேசிலியக் கல்வி அறிஞர் பாலோ ஃபிரேர் கூறியுள்ளார் (14ஆம் பக்கக் கட்டுரையைப் பார்க்கவும்), பண்பாட்டுத் தற்பண்பினை "மதித்தால்" மட்டும் போதாது. நாம் வாழும் பண்பாட்டின், நாகரிகத்தின், சமுதாயத்தின் நெறிமுறைகளை, இயன்ற அளவுக்கு, கல்வி முறையுடன் முழுமையாக ஒருங்கிணைப்பதற்கு நாம் முயலவேண்டும். கல்வி, பொருளாதார, உளவியல் அல்லது அரசியல் காரணங்களுக்காகவோ, காலத்தைமிச்சப்படுத்துவதற்காகவோ, இந்த ஒருங்கிணைப்பு தேவையெனக் கூறவில்லை. மாறாக, இந்த நெறிமுறைகள் கல்வி முறையின் இணைபிரியா அங்கம் என்பதாலும், இவை இன்றி கல்வி முழுமை அடையாது என்பதாலும் இந்த ஒருங்கிணைப்பு இன்றியமையாததாகும். மேலும், கல்வி முறையில் பண்பாட்டு நெறிமுறைகள் ஒருங்கிணைக்கப்படாவிட்டால், அந்தக் கல்வி முறைக்குக் கற்பவர்களுக்கு எதிர்ப்பு தோன்றக் கூடும்.

தேவையான அரசியல் ஈடுபாடும், சீரான கொள்கைகளும் இருக்குமாயின், சில நாடுகள் இந்நூற்றாண்டின் இறுதிக்குள் படிப்பறிவின்மையை அடியோடு ஒழித்துவிடலாம்; அல்லது மிகச் சொற்பமான அளவுக்குக் குறைத்துவிடலாம். ஆனால், மற்ற நாடுகளிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் இன்னும் எழுத்தறிவில்லாமல் இருப்பார்கள். இதனால், அன்றாட வாழ்வில் அவர்களுக்கு இன்னல்கள் அதிகமாகும். அவர்கள் வாழும் சமுதாயங்களுடன் முழுமையாக ஒழுங்கிணைவது அவர்களுக்குக் கடினமாக இருக்கும், இந்தச் சமுதாயங்கள் வழங்கும் வேலைவாய்ப்புகளைப் பெறவும் அவர்களால் இயலாது. பொறுப்புகளையும், உரிமைகளையும், செல்வத்தையும் பகிர்ந்துகொள்ளவும் அவர்களுக்கு முடியாது. மக்கள் வாழ்க்கையை எளிதாக வாழ்வதற்கு வாய்ப்புப் பெறுவதும், சமுதாயத்தின் அடித்தளத்

மார்கோஸ் கெரா வடகிழக்கு பிரேசிலைச் சேர்ந்தவர்; யுனெஸ்கோ, பிற ஐ. நா. நிறுவனங்கள் பல ஐரோப்பிய அரசாங்கம் சாரா நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு கல்வி, வளர்ச்சிபற்றி அறிவுரையாளர்; பிரேசிலில் எழுத்தறிவு இயக்கங்களில் பங்குபெற்றவர்; நைஜரிலும் ஐவரி கோஸ்டிலும் மேற்பார்வையாளர் பயிற்சித் திட்டங்களை இயக்கியவர்.

செனகாலில் தூபாவில் நிகழ்ந்த ஆண்டு விழாவின்போது கூடிய சந்தையில் தானியங்களை இடிக்கும் உரலும் உலக்கையும் வாங்குவோரைக் கவர்கின்றன. மூன்றாம் உலக நாடுகளில் வணிகர்களும் வாங்குவோரும் பெரும்பாலும் எழுத்தறிவற்றோராக இருப்பினும், விரைவில் விலையைக் கணிப்பதில் வியத்தகு திறமையைக் காட்டுகின்றனர்.

நிழற்படம் © டெனிஸ் ஃபேபக்ஷெல்கொசாங், மெட்ஸ், ஃபிரான்ஸ்

எழுத்தறிவு பெறத் தேவையான முயற்சியெடுத்து அதில் நிலை நிற்கும் ஊக்கத்தை வயது வந்தோருக்கு ஊட்டுவதற்கு பெரும் தூண்டுதல்கள் தேவைப்படுகின்றன. பண்பாட்டு, சமய, பொருளாதார, அரசியல் போன்ற பல்வேறு தூண்டுதல்கள் தேவைப்படலாம். கீழே: வட பிரேசிலில் நோயாளிகள் அம்மைகுத்தப் பதிவு செய்கின்றனர். அடியில்: இந்தியாவில் இமாலயப் பிரதேசத்தில் மாமலியிலுள்ள புத்த மடாலயத்தில் திபேத் இனத் துறவிகள் எழுதக் கற்கின்றனர்.

நிழற்படம்: ரெனே ப்யூரி © மாக்னம்; பாரிஸ்

மேலே: நாணல், பட்டை கசந்த மூலிகை ஆகியவை பிணைந்து 'செய்தி முடிச்சு' ஆகின்றன. இது நியூ காலடோனியாவிலுள்ள இரு இனத்தவரிடையே ஏற்பட்ட அமைதி உடன்படிக்கையைக் குறிக்கின்றது. "உங்கள் வீடு கட்ட இதோ ஓலையும் பட்டைகளும் உள்ளன. நமக்கிடையே இனிப் பகை இல்லை" என்று முடிச்சு அறிவிக்கின்றது. மனப்பாடம் செய்யவும், ஏற்பாடுகள் செய்யவும், கருத்தை வெளியிடவும் வாய்மொழி நாகரிகங்கள் பயன்படுத்திய எழுத்தற்ற முறைகளுக்கு இஃதோர் எடுத்துக்காட்டு.



நிழற்படம் ஃப்ராசுவா த்யுப்வி, பாரிஸ்

நிழற்படம் லெம்ஸஊதா © மனித அருங்கட்சியகம் பாரிஸ்

திற்குத் தள்ளப்படுவதும், சிறந்த கல்விக் கொள்கைகளைத் தேர்ந்தெடுப்பதையும் இக்கொள்கைகளில் பண்பாட்டு நெறி முறைகளை ஒருங்கிணைப்பதையுமே பொறுத்திருக்கிறது.

எழுத்தறிவின்மை என்பது பண்பாடின்மைக்குச் சமமானது என்ற தவறான கருத்தின் அடிப்படையில் தொடக்கால எழுத்தறிவுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இன்றும் இதன் அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆனால், இன்று வேறு வகையான பண்பாட்டு எதிர்ப்புத் தோன்றியுள்ளது. இந்த எதிர்ப்புத்தான் இலத்தீன் அமெரிக்க நாகரிகங்களை இனப்படுகொலையிலிருந்து காப்பாற்றியிருக்கிறது.

எழுத்தறிவு கற்பிக்கப்படும் மொழி, எழுத்து வழிக் கணக்கீடுகள் செய்யப்படும் முறைகள், பண்பாட்டு நடவடிக்கையின் வகைகள் மற்றும் உள்ளடக்கங்கள் ஆகியவை தொடர்பான முடிவுகள், பண்பாடுகளுக்கான மதிப்புடனும், அவற்றின் நெறிமுறைகளை ஒருங்கிணைப்பதுடனும் நேரடியாக இணைந்துள்ளன. தேர்ந்தெடுத்த உத்திகளும், கற்பிக்கும் சாதனங்களும், எழுத்தறிவுக்குப் பிந்திய திட்டங்களும், தேசியப் பண்பாடுகளின் முக்கியமான அம்சங்களை ஒருங்கிணைப்பதற்கு அல்லது விலக்குவதற்கு வாய்ப்பளிக்கிறது. இதற்கு, திட்டங்களையும், கொள்கைகளையும் வல்லுநர்கள் மட்டுமே வகுத்தலாகாது: தங்கள் பண்பாட்டைப் பாதுகாக்க விரும்பும் குழுமத்தினருக்கும் இப்பணியில் பங்களிக்க வேண்டும்.

எந்த நாட்டிலும் எழுத்தறிவுப்பணி இடைவிடாத தீவிர ஆக்கப்பணிகளைத் தூண்டிவிடுகிறது. ஓர் அரசியல் கட்சி நடவடிக்கைகளை விட ந்தப் பணியில் ஆர்வமும் ஈடுபாடும் அதிகம் ஏற்படுகிறது. இளைஞர்களும், முதியோரும் கல்வி கற்பதற்காக ஒருங்கு கூடும்போது, வேறெந்த பொதுப் பணிகளையும்விட அதிக ஆர்வம் கொள்கின்றார்கள். ஆனால், எழுத்தறிவிக்கும் பணி மேலிருந்து இறங்குமுகமாகவே நடைபெறுகின்றது. மேல்மட்டத்தில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, கீழ்மட்டத்திற்கு அனுப்பப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. கீழ்மட்டத்திலிருந்து மக்கள் எழுதவும் படிக்கவும் கற்கிறார்கள். கீழ்மட்டத்திலிருந்து செய்திகள் மேல்முகமாகச் செல்வதற்கான வழிகள் அதிகம் இல்லை. எனவே, மக்கள் நிலையிலிருந்து பண்பாட்டு நெறிமுறைகள் மேல்முகமாகச் சென்று திட்டம் வகுப்பவர்களின் கவனத்தைக் கவர முடியவில்லை. அப்படி ஏதேனும் வழி இருந்தாலும், அது எழுத்தறிவுப்பணித்துறைக்குப் புறம்பானதாக இருக்கிறது. அதனால், கல்வி முறையில் இது எவ்வித முக்கியத்துவத்தையும் பெற இயலவில்லை.

கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் நடைமுறைக்கு ஏற்றனவாகவும், காலத்தோடு ஒட்டியனவாகவும் இருக்கவேண்டும். பெரும் மாற்றங்கள் நடைபெற்றுவரும் புரட்சிகரச் சமுதாயங்களில், முன்னோடிப் புரட்சிக்காரர்களே எழுத்தறிவுத் திட்டங்களைச் செயற்படுத்துகிறார்கள். ஆனால், இவர்கள் பயன்படுத்தும் பாடநூல்கள், பத்தாண்டுகளாக மாற்றம்பெறாத பழைய நூல்களாக இருக்கின்றன.

ஆஃப்ரிக்காவில் இன்னும் எழுத்தறிவு திட்டங்களுடன் பண்பாட்டுத் தற்பண்புக் கோட்பாடுகள் ஒருங்கிணைக்கப்படவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, இவ்வாறு ஒருங்கிணைக்க வேண்டுமென்ற எண்ணம் அண்மையில்தான் தோன்றியது. இரண்டாவதாக, தேசியக் கொள்கைகளை வகுத்த வல்லுநர்கள் இந்த அம்சத்தைக் கவனத்தில் கொள்ளவில்லை. மூன்றாவதாக, எழுத்தறிவை எந்த மொழியில் கற்பிப்பது எனத் தீர்மானிக்கப்படாததால், ஒருங்கிணைந்த கொள்கையை வகுப்பது கடினமாக இருக்கிறது. ஒரு நாட்டில் பல மொழிகள் வழங்குவதால், எந்த ஒரு மொழியையும் தேர்ந்தெடுப்பது சிரமமாக இருக்கிறது. அப்படி ஒரு மொழியைத் தேர்ந்தெடுத்தாலும், மொழிப்பூசல்கள் தோன்றி நாட்டின் ஒற்றுமை சீர்குலைகின்றன. இதைத் தவிர்க்க, ஏதாவதொரு தேசியமொழியைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்த மொழி பெரும்பாலும் முன்னாள் குடியேற்ற ஆதிக்கவாதிகளின் மொழியாகவே இருக்கிறது.

பண்பாட்டையும் நாகரிகத்தையும் வெளிப்படுத்துவதற்கும், செய்தித்தொடர்புக்கும் இன்றியமையாததாக விளங்குவது மொழி. எனவேதான், இளைஞர்களுக்கும் முதியோர்க்குமான எழுத்தறிவுப் பணியிலும் கல்வியிலும் மொழி தலையாய இடம் வகிக்கிறது. தாய்மொழி அல்லாத வேறு மொழியில் எழுத்தறிவு பெறுவதாயின், பண்பாட்டு வெளிபாட்டுக்கு வேறு வடிவங்களை நாடவேண்டியிருக்கிறது. இது எழுத்தறிவை வளர்க்கவோ அதன்பலன்களைப்பெருக்கவோ துணை செய்யாது. ஆனால் பண்பாட்டுத் தற்பண்பினை வலுப்படுத்தும்.

எழுதவும் படிக்கவும் அறிந்து கொண்டவர்களின் துணிவும், விடாமுயற்சியும் நினைவாற்றலும் உலகறிந்த உண்மை. அவர்களுடைய பண்பாட்டுத் தற்பண்புகூறுகளையும் ஒருங்கிணைத்துவிட்டால், இவர்களுடைய பணிக்கு மேலும் ஊக்கம் கிடைக்கும். கல்விக் கொள்கைகளும், திட்டங்களும், மக்களாட்சி முறைப்படி எழுத்தறிவில்லாத மக்களின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கு ஏற்ப வகுக்கப்படவேண்டியது இன்றியமையாததாகும்.

தமிழில்: இரா. நடராசன்

நிழற்படம் © பாவ்லோ கோச் © ராஃபோ, பாரிஸ்

பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட பலகையில் கொட்டைகளை அல்லது காய்ந்த மொச்சைகளை வைத்து ஆடும் 'வாரி' எனும் ஆட்டமாடும் இவ்விரு கென்யா நாட்டவரும் அடுத்த காய் நகர்த்துவது பற்றிய சிந்தனையில் ஆழ்ந்துள்ளனர். உலகின் பல பகுதிகளில் ஆடப்பெறும் ஆட்டங்களுள் 'வாரி'யும் ஒன்று. 'மன்காலா' ஆட்டங்கள் எனப்படும் இவை எகிப்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக ஆடப்பெற்றுவருகின்றன. ஆசியாவிலும் ஆஃப்ரிக்காவிலும் பரவிய இவை, ஆஃப்ரிக்க அடிமைகளின் வாயிலாக மேற்கிந்தியத் தீவுகளுக்கும் பரவின.

மனமிருந்தால்...

மாறிவரும் சமூகங்களும் கற்கும் ஊக்கமும்

நிழற்படம் © பெர்னார்து குயுஸியன்/தெர் லோய்ந்தேதன்ஸ், பாரிஸ்

மேலே: கிணற்றிலிருந்து நீரிறைக்கும் நைஜர் மகளிர் சங்கிலித் தொடராக நிற்கின்றனர். உல்கில் மிக வளர்ச்சி குன்றிய 31 நாடுகளுள் நைஜர் ஒன்று. இவற்றுள் 11 நாடுகளில் மகளிருள் 10%க்கு குறைந்தவர்களும், 4 நாடுகளில் 0.6% குறைந்தவர்களும் எழுத்தறிவு பெற்றோர். இவற்றில் எல்லாம் எழுத்தறிவு பெறாத ஆண்களைவிட பெண்களே மிகுதி.

மார்செல் தெ கிளர்க்: பெல்ஜியர்; யுனெஸ்கோவில் நீண்டகாலம் கல்வியாளராகவும் கிராம வளர்ச்சி வல்லுநராகவும் பணிபுரிந்தார். எழுத்தறிவு புகட்டும் ஆசிரியருக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பை யுனெஸ்கோ தலைமையகத்தில் ஏற்குமுன், பாங்காக்கிலுள்ள யுனெஸ்கோவின் ஆசிய மண்டல அலுவலகத்தில் முதியோர் கல்வி பற்றிய மண்டல அறிவுரையாளராக இருந்தார். 'தி ஆப்பரேஷனல் செமினார்: எ பயோனியரிங் மெதட் ஆஃப்ட்ரெயினிங் ஃபார் டெவலப்மெண்ட்' (யுனெஸ்கோ, 1976) இவ்வாண்டின் இறுதியில் வெளியிடப் பெறும் 'லெதுகாத்தெர் எ லெவிலாஷ்வா, தெ லெதுகாசியோன் தெ பாஸ் ஆலால் ஃபாபெத்திகேசியோன் ஃபோங்கியோனெல் (கல்வியாளரும் கிராமவாசியும்), அடிப்படை கல்வி முதல்செயல் முறை எழுத்தறிவுவரை ஆகியவை இவருடைய நூல்கள்.

மார்செல் தெ கிளர்க்

எழுத்தறிவிப்பு இயக்கங்களை நடத்துகின்றவர்கள் இருபதாம் நூற்றாண்டில் ஒருவர் எழுத்தறிவில்லாதவராக இருப்பது ஒரு பெரிய கொடுமை எனக் கருதுகிறார்கள். எனவே, எழுத்தறிவின்மையை ஒழிப்பது சமூக நீதியின்பாற்பட்ட ஒரு செயலாகும். ஆனால், இது பற்றி எழுத்தறிவில்லாதவர்கள் என்ன நினைக்கிறார்கள்? எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வது முக்கியமானது. அவசியமானது, விரும்பத்தக்கது என அவர்கள் கருதுகிறார்களா? எழுத்தறிவிப்புத் திட்டங்களை அவர்கள் எவ்வாறு வரவேற்கிறார்கள்? அவர்களுடைய நன்மைக்காக நடத்தப்படும் வகுப்புகளுக்கு அவர்கள் அனைவரும் ஆர்வத்துடன் செல்கிறார்களா? அல்லது இந்த இயக்கத்தை ஆர்வத்துடன் நடத்துபவர்களின் முயற்சிகளை வெறுத்து ஒதுக்குகிறார்களா? எழுத்தறிவைப் பெறுவதில் ஆர்வங்கொள்ளச் செய்வதற்கு என்ன செய்யலாம்?

எழுத்தறிவிக்கும் நடவடிக்கை எதிலும், அது மேற்கொள்ளப்படும் சமுதாயக் குழுமம் மிக முக்கியமான காரணியாகும். எழுத்தறிவுப் பயிற்சி குறித்து ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்களின் மனப்போக்கும் நடத்தைமுறையும் அச்சமுதாயத்தின் படிப்பறிவின்மை விகிதத்தை நேரடியாக நிருணயிக்கின்றன.



மாலி அரசாங்கம் 1973–1978இல் உலக வங்கியின் இணை நிறுவனமான பன்னாட்டு வளர்ச்சி சங்கத்தின் உதவியுடன் கிராம வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாம் பகுதியைத் தொடங்கியது. இத்திட்டத்தில் உழவருக்கு கருவி வழங்குதல், பயிர் ஆராய்ச்சி, மருத்துவ, கால்நடைப் பணிகள் முன்னேற்றம், நடைமுறை எழுத்தறிவுப் பெருக்கம் ஆகியவை அடங்கும். வலப்புறம்: கிட்டா பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் மாலி கிராமவாசிகள் எழுத, வாசிக்க கற்கின்றனர்.

நிழற்படம் © ரே விட்லின், உலக வங்கி/பவச

எழுத்தறிவின்மை பெருமளவில் நிலவுகின்ற குழுமத்தைச் சேர்ந்தவர்களிடம் எழுத்தறிவு பற்றி நிலவும் மனப்போக்கு, சிறிதளவே படிப்பறிவின்மை நிலவும் குழுமத்தைச் சேர்ந்தவர்களின் மனப்போக்கிலிருந்து வேறுபட்டிருக்கிறது. எளிதான பகுப்பாய்வுக்காக, எழுத்தறிவின்மை பொறுத்த நான்கு வேறுபட்ட சமுதாயக் குழுமங்களை இப்போது ஆராயலாம்.

முதலாவதாக, எழுத்தறிவுக்கு முந்திய குழுமம் இந்தக் குழுமத்தினர் எழுத்தையும் அச்சிடுவதையும் அறியாதவர்கள். அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள் அனைத்தையும் இவர்கள் வாய்மொழி வாயிலாகவே நடத்துகின்றார்கள். எழுத்தறிவு பெற்ற ஒரு சிலர்கூட இக்குழுமத்தில் தாங்கள் படிக்கத் தெரியாதவர்களைப் போல் நடந்து கொள்கின்றார்கள். இந்தக் குழுமத்தில் படிப்பறிவின்மை விகிதம் 75 சதவிகிதத்திற்கும் அதிகம். இங்கே, எழுத்தறிவுத் திட்டங்களில் ஆர்வங்கொள்ளும்படி செய்வதற்குப் போதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தக் குழுமம், எந்தவித எழுத்தறிவிப்பு இயக்கமும் ஊடுருவமுடியாத ஒன்று என எண்ணிவிடலாகாது. சாட் நாட்டில் மத்திய சாரி பகுதியிலுள்ள சாரா மக்களிடையே மிக அதிக அளவுக்குப் படிப்பறிவின்மை காணப்படுகிறது. இங்கு ஆண்களில் 83% பேரும், பெண்களில் 99% பேரும் படிப்பறிவின்றி இருக்கின்றார்கள். எனினும், இவர்களுக்கு எழுத்து, கணிதம் கற்பிக்க செயற்படுத்தப்பட்ட திட்டம் இருபாலாரிடமும் பெரும் வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது குழுமத்தில் பெரும்பான்மையோர் எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள்; ஒரு சிறுபான்மையினரோ எழுத்தறிவுடையவர்கள். இதில் வயது வந்தவர்களில் 50%—75% பேர் படிப்பறிவில்லாதவர்கள். எழுத்தறிவுக்கு முந்திய குழுமத்தில் எழுத்தறிவுள்ளவர்கள்கூட எழுத்தறிவில்லாதவர்கள் போல் நடப்பதைக் கண்டோம். ஆனால், இதற்கு நேர் மாறாக. இக்குழுமத்தில் எழுத்தறிவில்லாதவர்களும் எழுத்தறிவுடையவர்கள்போல் நடந்து கொள்கிறார்கள். இங்கு படிப்பதற்குக் கற்பிப்பதற்கு மட்டுமே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எழுதுவதற்குக் கற்பிக்க முயற்சி எதுவும் தொடங்கப்படவில்லை.

இந்த வகைக் குழுமத்தில் மரபுமுறை எழுத்தறிவிப்புப் பயிற்சித் திட்டம் எதுவும் வெற்றி பெறுவதில்லை. எனினும். மேம்பாட்டு நோக்குடன் சமூக—பொருளாதார–அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமைந்த ஒரு எழுத்தறிவிப்புத் திட்டம் சீராக நடத்தப்பட்டால், வெற்றி பெற வாய்ப்பு உண்டு என்பதற்கு தான்சானியாவின் 'உஜாமா' திட்டம் ஒரு சான்று. இத்திட்டத்தினால் வயது வந்த மக்களில் படிப்பறிவின்மை விகிதம் 1967இல் 67 சதவிகிதத்திலிருந்து 1976இல் 39 சதவிகிதமாகக் குறைந்தது. இப்பொழுது இந்த விகிதம் 10 சதவிகிதத்திற்கும் குறைவு.

மூன்றாவது வகைக் குழுமம் எழுத்தறிவு பெறுகின்றவர்களைக் கொண்டதாகும். இதில், பெரும்பாலானவர்கள், தனிப்பட்ட அல்லது கூட்டு நோக்கங்களுக்காகப் படிக்கவும் எழுதவும் பயில்கின்றனர். இந்தக் குழுமத்தில் படிப்பறிவின்மை விகிதம் 25%முதல்50% ஆகும். இதில் எழுத்தறிவில்லாதவர்களில் பெரும்பாலோர் முதிய பெண்கள். எழுத்தறிவு பெறுவதற்கான நோக்கம் ஆளுக்கு ஆள் வேறுபடுகிறது.

வியட்னாமில் கான் ஹான் கிராமத்தில் 1958இல் நடத்தப்பட்ட எழுத்தறிவு பயிற்சி குறித்து ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அங்கு ஏற்கெனவே படிப்பறிவு விகிதம் 70% அளவுக்கு இருந்தது. அங்கு எழுத்தறிவில்லாதிருந்த 30% பேர்கூட தாங்கள் அவ்வாறு இருப்பதற்காக் வெட்கமடைந்தார்கள். தங்களின் படிப்பறிவின்மை காரணமாகத் தாங்கள் கேலி செய்யப்படக்கூடும் என்ற அச்சத்தில் இவர்கள் சமுதாயத்தின் பொதுத் நடவடிக்கைகளில்கூடப் பங்கு கொள்வதில்லை. இந்தக் கிராமத்தில், எழுத்தறிவில்லாதவர்கள், தங்களைச் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டவர்களாக — மன ஊனமுடையவர்களாக—கருதினார்.

1970இல் உலகில் மிக வளர்ச்சி குன்றிய நாடுகளுள் பத்தில்தான் எழுத்தறிவு 20 சதவீதமாக இருந்தது. 1980இல் இவற்றுள் 19 நாடுகள் இவ்வீதத்தை விஞ்சின. இவற்றுள் 10 நாடுகளில் 40% பேர் எழுத்தறிவு பெற்றனர். மேலே: பங்களாதேஷில் பள்ளிப் பெண்.

தான்ஸானிய ஐக்கிய குடியரசின் தேசிய உற்பத்தித்திறன் நிலையம், மேலாளர் பயிற்சி வழங்குவதற்காகப் பன்னாட்டுத் தொழில் நிறுவனம் (ஐ.எல்.ஓ) ஐ.நா. வளர்ச்சித் திட்டம் (யு.என்.டி.பி.) ஆகியவற்றின் உதவியுடன் நிறுவப் பெற்றது. இடப்புறம்: பயிற்சி பெறும் மேற்பார்வையாளர்கள் தார் எஸ் சலாம் கிடங்கில் இழைகள் அடுக்கிவைப்பதைப் பார்வையிடுகின்றனர்.

நிழற்படம் © ஐ.எல்.ஓ, ஜெனீவா,

நிழற்படம் © பங்களாதேஷ் தேசிய யுனெஸ்கோ குழு

இறுதியாக எழுத்தறிவு பெற்ற குழுமம் ஆகும். இக்குழுமத்தில் படிப்பறிவில்லாதவர்களின் விகிதம் 25சதவிகிதத்திற்கும் குறைவு. இதில், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மிகச் சிலரே அல்லது ஒரு சிறு குழுவினரே எழுத்தறிவில்லாமலிருக்கின்றனர். இந்தக் குழுமத்தில் செய்தித்தொடர்பு பெரும்பாலும் எழுத்து மொழி அல்லது அச்சுமொழி வாயிலாகவே நடைபெறுகிறது. ஒவ்வொரு கட்டத்திலும், எழுத்தறிவில்லாதவருக்கு எழுத்துகளை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எல் சால்வடாரில், எழுத்தறிவிப்பு வகுப்புகளுக்குப் பெருங்கூட்டம் வருகிறது. இவ்வகுப்புகளில் சேரவிரும்புகின்றவர்களில் காத்திருப்போரின் பட்டியல்களில் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. சிலர் ஓராண்டு வரைக் காத்திருக்க வேண்டியுள்ளது, இத்தனைக்கும், இந்த வகுப்புகள் அனைத்தும் மரபுமுறைப்படி நடத்தப்படுவனவாகும்.

ஒரு குறிப்பிட்ட குழுமத்தின் படிப்பறிவின்மை விகிதம், எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கு உகந்த உத்தியைத் தீர்மானிப்பதற்குத் தேவையான தகவலை அளிக்கிறது. 20% அல்லது 15% படிப்பறிவின்மையை விட 80% படிப்பறிவின்மைக்கு வேறு வகை நடவடிக்கை தேவைப்படுகிறது. எழுத்தறிவிப்பு இயக்கம் ஒவ்வொன்றுக்கும், சூழ்நிலை தனித் தேவைகளுக்கேற்ற கொள்கையும், நோக்கங்களும், அணுகுமுறையும், கால அட்டவணையும் முறைமையும் தேவை. . .

தான்சானியாவில் செயற்படுத்தப்பட்டு வரும் 'உஜாமா' கிராம கோட்பாட்டு திட்டத்தின் தலையாய நோக்கமாக அமைந்திருப்பது எழுத்தறிவிப்பேயாகும். இதன்படி அரசியல் விழிப்புணர்ச்சியைத் தூண்டவும், அரசியலில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், உற்பத்தித் திறனைப் பெருக்கவும் இன்றியமையாத திறன்களால் எழுதுதல், படித்தல், கணக்கிடுதல் ஆகிய மூன்றும் ஒவ்வொரு குடிமகனுக்கும் தேவை. சமுதாயச் செயற்பாடுகளிலும், குடியியலிலும். சமூக - பொருளாதாரப் பயிற்சியிலும் அடிப்படை அறிவைப் பெறுவது எழுத்தறிவிப்புத் திட்டத்தில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

எத்தியோப்பியாவிலும் தேசிய எழுத்தறிவிப்பு இயக்கம் பெரும் வெற்றி பெற்றுள்ளது, இதற்குக் காரணம் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கும் பெரிய திட்டத்துடன் இது இணைந்திருப்பதேயாகும். 1974இல், அதாவது புரட்சிக்கு முன்பு மக்கள் தொகையில் 93% எழுத்தறிவில்லாதவர்களாக இருந்தனர். 1980இல், இந்த இயக்கத்தின் மூன்றாம் கட்டத்தில், படிப்பறிவின்மை விகிதம் 65 சதவிகிதமாகக் குறைந்தது,

மற்ற நாடுகளில், குறிப்பாக ஆஃப்ரிக்காவில். எழுத்தறிவிப்பு நடவடிக்கையானது, மேம்பாட்டுத் திட்டங்களுடன் இணைக்கப்பட்டிருக்கிறது மாலியல், நிலக்கடலை, மீனள வளர்ப்பு போன்ற வேளாண்மை வளர்ச்சித் திட்டத்துடன் எழுத்தறிவிப்பு இயக்கம் இணைக்கப்பட்டுள்ளது. மேல் வால்ட்டாவில், கிராமச் சமூதாயங்களுக்கான ஊரக வளர்ச்சித் திட்டத்துடன் எழுத்தறிவிப்புத் திட்டம் இணைந்துள்ளது.

எழுத்தறிவிப்பு இயக்கம் வெற்றி பெறுவதற்குச் சமுதாய மாறுதல்கள் இன்றியமையாதவை என்பதை மேற்சொன்ன எடுத்துக்காட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்த மாறுதலை நாம் மேம்பாடு என்கிறோம். மேம்பாட்டு நடவடிக்கையில் மக்கள் தீவிரமாகப் பங்குகொள்வதன் மூலமாகத்தான் இந்த மாறுதல் ஏற்படும்.

மேம்பாட்டு நடவடிக்கையின் பயனாளியும் குறியிலக்கும் தனிநபர் அல்லது குழுமம் ஆகும். எனினும், ஆசியாவிலும், ஆஃப்ரிக்காவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் கிராமவாசிகளில் மிகச் சிலர்தான் அடிப்படைக் கல்வியை முடித்திருக்கிறார்கள் கிராமப் பள்ளிக்குச் செல்லும் வாய்ப்புப் பெற்றவர்களில் பெரும்பாலானவர், மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் மட்டுமே பள்ளி சென்றுள்ளனர். மூன்றாம் உலக வேளாண் மக்களில் பெரும்பாலோர் எழுத்தறிவில்லாதவர்கள் அல்லது அரைகுறைஎழுத்தறிவுள்ளவர்கள். இவர்களுக்குப் படிக்கத் தெரியாது. எனவே உரங்களை அல்லது பூச்சி மருந்துகளை பயன்படுத்துவது பற்றிய அறிவுரைகளை புரிந்துகொள்ள இவர்களால் இயலாது. இவர்களுக்கு அடிப்படைக் கணிதம் கூடத் தெரியாது.

இங்குதான் செயல்முறை எழுத்தறிவிப்புப் பயிற்சி முக்கியத்துவம் பெறுகிறது. செயல்முறை எழுத்தறிவானது, குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் துணைபுரிகிறது. சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் பயன்படக்கூடிய அளவுக்குத் தனிப்பட்டவர்கள் கல்வியறிவு பெறும்படி செய்வதே செயல்முறை எழுத்தறிவிப்பு இயக்கத்தின் நோக்கமாகும். மாறுதலுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளவும், மாறுதலைச் செய்யவும் தனி நபரைத் திறனுடையவராக்குவது இந்த இயக்கத்தின் மற்றொரு நோக்கமாகும். இவ்வாறாக மாறுதலும், எழுத்தறிவும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. உண்மையில், மக்கள் எழுத்தறிவிக்கப்படவில்லை; தாங்களே எழுத்தறிவைக் கற்றுக்கொள்கின்றார்கள். தாங்கள் எண்ணும் எழுத்தும் அறியாதவர்களாக இருப்பதுதான் தங்களுடைய முன்னேற்றத்திற்குத் தடங்கலாக இருக்கிறது என்பதை எழுத்தறிவில்லாதவர்கள்—ஆண்களும் பெண்களும்—உணர்ந்து கொள்வார்களானால், அவர்கள் எழுத்தறிவு பெறுவதில் ஆர்வங்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

தமிழில்: இரா. நடராசன்

அடுத்தது என்ன?

புதிதாக எழுத்தறிவு பெற்றோர் மேலும் பயிலும் உலக நூல்களின் காட்சி

ஆதாமா உவான்



நிழற்படம் © ஆல்மாசி, பாரிஸ்.

புதிதாக எழுத்தறிவு பெற்றோர் தாம் வருந்திப் பெற்ற திறமைகளைப் பேணி வளர்க்க வேண்டுமெனில், கவர்ச்சியான நூல்கள் அவர்களுக்கு கிடைக்கவேண்டும். மேலே: தாய்மொழி நூல்கள் மிகுந்துள்ள இயங்கும் நூலகம் அல்லது 'நூல் பேருந்து' வருவது ஐவரி கோஸ்டில் சமுதாய வாழ்க்கையில் கிளர்ச்சி மிகு நிகழ்ச்சியாகும்

கற்பிக்கும் சாதனங்களைத் தயாரிப்பதும், ஈட்டுவதும். முறையாகப் பயன்படுத்துவதும், மக்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதில் எழும் அடிப்படைச் சிக்கல்களுள் ஒன்றாகும். இந்தச் சாதனம் அச்சடித்த நூலாக இருக்கலாம்; அல்லது வானொலி, தொலைக்காட்சி, நவீன செய்தித்தொடர்பு சார்ந்ததாக இருக்கலாம்; அல்லது நாடகம், நாட்டுப்புறக்கலை, பல்வேறு விளையாட்டுகள் போன்ற மரபுவழிச் சாதனங்களாக இருக்கலாம். நூலகங்கள், கண்காட்சிகள் போன்ற கற்பிக்கும் சாதனங்களை எளிதாக அணுகுவதற்கு ஏற்ற வசதிகளைச் சிலநாடுகள் செய்திருக்கின்றன. கல்வி நிகழ்ச்சிகளைக் குழுமங்களாகச் சேர்ந்து கேட்டுக் கலந்துரையாடி அவற்றின் பலன்களை அதிக அளவு மக்கள் முழுமையாகப் பெறுவதற்கும் வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன.

அச்சடித்த சாதனங்களை பாடநூல்கள், படிப்பதற்கேற்ற வேறுபாடுகள் என ஒரு பிரிவாகவும், ஊரக நாளிதழ்கள், சுவரொட்டி இதழ்கள் என இன்னொரு பிரிவாகவும் பிரிக்கலாம். முதற் பிரிவைச் சேர்ந்த சாதனங்கள்தாம் வளர்முக நாடுகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். மக்களின் படிப்பறிவை வளர்ப்பதும், அவர்களிடம் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதும், அவர்களின் ஆர்வத்திற்கும் தேவைகளுக்கும் ஏற்ப போதுமான அளவு நூல்களை வெளியிடுவதும் இதன் நோக்கமாகும்.

இந்த நூல்களின் பொருளடக்கங்கள், பல்வேறு படிப்பறிவு நிலைகளுக்கேற்பு அமைக்கப்பட்டுள்ளன. சில நாடுகளில் பள்ளிகளின் வாயிலாகவே எழுத்தறிவூட்டுவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வேறு சில நாடுகளில், அதிகார முறையான கல்வி முறைக்கு அப்பாற்பட்ட நிலையில், புறப்பள்ளிக் கல்வி முறையில் படிப்பறிவூட்டும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. கியூபாவிலும், வெனிசூலாவிலும் இந்த முறை செயற்படுகிறது. வியட்னாம் சோசலிசக் குடியரசிலும், சீன மக்கள் குடியரசிலும், முறை சார்ந்த கல்விக்கு இணையாகத் தொழிலாளர்களுக்கும் கிராம மக்களுக்கும், பல்வேறு நிலை நிருவாகிகளுக்கும் பகுதிநேரப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இளம் வயதிலேயே பள்ளியிலிருந்து நின்றுவிடும் இளைஞர்களுக்கு இரண்டாம் முறை கல்விகற்க வாய்ப்பளிப்பதே இப்பள்ளிகளின் நோக்கமாகும்.

நிழற்படம் © சு.எஸ். நாகராஜன், யுனெஸ்கோ

ஆதாமா உவான்: மாலி நாட்டு மொழியியல் வல்லுநர்; ஹாம்பர்கில் (ஜெர்மானியக்கூட்டாட்சிக் குடியரசு) யுனெஸ்கோ கல்வி நிலையத்தில் இப்போது ஆராய்ச்சி செய்து வருகிறார். பாமாக்கோவில் தேசிய நடைமுறை எழுத்தறிவு, மொழியியல் இயக்கத்தில் முன்னாள் துணைப் பொது இயக்குநரான இவர், எழுத்தறிவு இயக்கத்தில் தேசிய மொழிகளைப் பயன்படுத்துவது பற்றிப் பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

இத்தகைய கல்வி முறைக்குத் துணை நூல்கள் மிகவும் இன்றியமையாதனவாகும். சீனாவில் 1980இல் கிராமமக்கள் படிப்பதற்கேற்ற 21,000 நூல்களின் 460 கோடி படிகள் வெளியிடப்பட்டன. ஆனால், இவற்றுள் மிகக் குறைந்த சதவிகிதமே, புதிதாகக் கல்வியறிவு பெற்றவர்கள் படிப்பதற்கு ஏற்றவை.

தான்சானியாவில் புதிதாகக் கல்வி கற்றவர்களுக்காக நான்கு நிலைகளில் பலபாடநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், இவை முறை சார்ந்த பள்ளிகளுக்கான பாடநூல்களிலிருந்து வேறுபட்டவை. சுமார் 50 இலட்சம் மக்களுக்குப் படிப்படியான நிலைகளில் படிக்கும் ஏடுகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த 50 இலட்சம் பேரில் சுமார் 10 இலட்சம் பேர், எழுத்தறிவுக்கு மேற்பட்ட வகுப்புகளுக்குச் செல்கின்றவர்கள். ஒவ்வொரு படிநிலை ஏட்டுக்கும் ஆசிரியர் வழிகாட்டுதலும் உண்டு. திட்டமிட்டு முறையாகச்சேகரிக்கப்பட்டு ஏட்டில் எழுதப் பெற்ற மரபுவழி வாய்மொழி இலக்கியங்கள் இந்த ஏடுகளில் முக்கியமாக இடம்பெறுகின்றன.

இந்தோனேசியாவில், மேம்பாட்டுக்கான கல்விக் கொள்கை செயற்படுத்துவதையொட்டி. வேலை வாய்ப்பு நோக்குடைய பெரிய கல்வித்திட்டம் ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது. அங்கு சமுதாயக் கல்வி ஆணைக் குழுவின் சார்பில் ஒருங்கிணைந்த புறப்பள்ளிக் கல்வித்திட்டம் வகுக்கப் பெற்றுள்ளது. இந்த ஆணைக்குழு 1977இல் புதிதாக விரிவானதொரு படிப்பறிவுத் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறது. புதுமையான போதனை முறைகள் அடங்கிய நூறு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அன்றாட வாழ்வின் அனைத்து அம்சங்களையும் தழுவிய பல்வேறு தகவல்களும் இந்நூல்களில் அடங்கியுள்ளன.

மிக இளமையிலேயே பள்ளியிலிருந்து நின்றுவிட்டவர்களுக்கும் பள்ளிக்கே செல்லாதவர்களுக்கும் இந்நூல்கள் பெரிதும் பயன்படும்.

பிரேசிலில் மிகப்பெரிய எழுத்தறிவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பயன்படுத்தப்படும் கற்பிக்கும் சாதனத்திற்கு "கம்பி இலக்கியம்" என்று பெயர். இதில், படிப்பதற்கான ஏடுகள், கல்வி மையங்களின் சுவர்களில் கம்பிகளில் தொங்கவிடப்பட்டிருக்கும். இந்த ஏடுகளில் பெரும்பாலானவை, வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டவை; வேளாண்மை, பொதுச் சுகாதாரம், உள்நாட்டுத் தொழில் நுட்பங்கள் பற்றி தொடக்கநிலை எழுத்தறிவாளர்களுக்கு ஏற்ற எளிய நடையில் தொழில் முறை எழுத்தாளர்கள் இவற்றை எழுதியுள்ளனர்.

மாலியிலும் எழுத்தறிவுக்குப் பிந்திய படிப்புக்காகப் பல்வேறு ஏடுகள் வெளியிடப்படுகின்றன. தேசியச் செயல்முறை எழுத்தறிவு மற்றும் பயன்முறை மொழியியல் ஆணைக் குழுவும், மற்ற மேம்பாட்டு அமைவனங்களும் இணைந்து இந்த ஏடுகளை வெளியிடுகின்றன. பொதுச் சுகாதாரம், வேளாண்மை, கூட்டுறவு, நீர்மற்றும் வனவளம் போன்ற தனித்துறைகள் குறித்து அவற்றில் தனித்திறன் வாய்ந்தவர்கள் எழுதுகின்றார்கள். இந்த ஏடுகளில் வாய்மொழி மரபுகளுக்கும், வட்டாரக்கதைகளுக்கும் சிறப்பிடமளிக்கப்படுகிறது.

இந்தக் கற்பிக்கும் சாதனங்கள் வெளியிடப்படும் முறை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. ஃபிரெஞ்சு மொழி பேசப்படும் நாடுகளில் குறிப்பிட்ட பாடங்களில் குறைந்த எண்ணிக்கையில் இந்நூல்கள் வெளியிடப்படுகின்றன, புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் தாங்களே இவற்றை வெளிக் கொணர்வதில் பங்கு கொள்கின்றார்கள். சில சமயம். படி பெருக்கி மூலம் படிகள் எடுத்தல் போன்ற தொழில்நுட்பப் பணிகளையும் அவர்கள் செய்கின்றார்கள். இந்த ஏடுகள் பொதுவாக முறை சார்ந்த கல்வியில் பயன்படுத்தப்படுவதில்லை. முறை சார்ந்து கற்பிக்கும் முறைகளிலிருந்து இவை ஓரளவு வேறுபட்டுத் தனித்தன்மையுடன் விளங்குகின்றன. மற்ற நாடுகளில், புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்கான ஏடுகள் எழுத்தறிவுக்குப் பிந்திய நிலைகளுடன் கவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

ஆசியாவிலும், ஆஃப்ரிக்காவிலும் இவற்றைத் தயாரிப்பதற்கு இருவேறு முறைகள் கையாளப்படுகின்றன. இவற்றுள், மரபுவழி வாய்மொழி இலக்கியங்களைப் பெருமளவில் சேகரிப்பது ஒன்று. இன்னொன்று, முதியோர் கல்விக்கு உகந்த பாடநூல்களை எழுதுவதற்கு எழுத்தாளர்களுக்குத் தக்க பயிற்சியளிப்பதற்காக எழுத்தாளர் பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதாகும். பெரும்பாலான நாடுகளில், இத்துறையில் திறன்வாய்ந்தவர்களை ஊக்குவிப்பதற்காகப் போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவில், இந்த வகையில் 800 நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

பலமொழிகள் வழங்கும் ஆசிய, ஆஃப்ரிக்க நாடுகளில், வீட்டில் பேசும் மொழி ஒன்றாகவும், சமூக வாழ்விலும், ஆட்சியிலும் அதிகார முறைக் கல்வியிலும் பயன்படுத்தப்படும் மொழி வேறொன்றாகவும் இருக்கின்றன. அங்கு எழுத்தறிவைப் பெறுதல் என்பது சொந்த மொழியில் மட்டுமின்றி, செய்தித் தொடர்பு மொழிகளிலும் அறிவு பெறுதலாகும். இந்த மொழிகளில் பெரும்பாலானவற்றுக்கு மிக அண்மையில் தான் வரிவடிமே கிடைத்தது. இங்கு எழுத்தறிவு பெறுவதென்பது, வாய்மொழி மரபுகளைக் கற்றுக் கொண்டு, பின்னர் எழுத்து மொழிகளையும் கற்றுக் கொள்வதாகும்.

எனவேதான், இங்கு சில நாடுகள் எழுத்து மொழிக்குச் சாதகமாக சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சூழலை உருவாக்குவதில் தீவிரம் காட்டுகின்றன. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் எழுத்து மொழியின் நிரந்தர அறைகூவலை எதிர் நோக்குவதற்குரிய சூழலை உருவாக்கிக் கொடுப்பதே இம்முயற்சிகளின் நோக்கமாகும். இதற்கு எழுத்துமொழி ஏடுகள் மட்டுமே போதுமானவையல்ல. நினைவாற்றலை மட்டுமே நம்பியிராமல், எழுத்து வழிச் செய்தித் தொடர்பு முறைகளையும் பயன்படுத்திக் கொள்வதற்குப் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும.

இந்த வகையில் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்கு மிகவும் பயனுடையனவாக விளங்குவது ஊரகச் செய்தியிதழ்களாகும். இவை அவர்கள் செய்திகளை எளிதில் அறிந்து கொள்ள உதவுவதுடன், அடிப்படை அறிவினைப் பரப்புவதற்குச் சிறந்த சாதனமாகவும் அமைந்துள்ளன. அயல்நாட்டு, உள்நாட்டுச் செய்திகளை அறிந்துகொள்ள உடனடியாகவும், எளிதாகவும், மலிவாகவும் கிடைக்கும் சாதனமாகவும் செய்தியிதழ்கள் விளங்குகின்றன.

மேல் வால்ட்டா, இந்தோனேசியா, மாலி, செனிகால் போன்ற சில நாடுகளில் தேசிய அளவில் மட்டுமே செய்தியிதழ்கள் வெளியிடப்படுகின்றன,

கீழே: ஓர் இந்திய உடல்நலக் கல்வியாளர் இலைநிறை காய்களையும் கனிகளையும் பற்றி ஒரு நாட்டுப்புற அன்னைக்கு கூறும்போது, படங்களிலும் விளக்கங்களுமுள்ள சுவரொட்டிகளைப் பயன்படுத்துகிறார். எழுத்தறிவு வழங்கும்போது அதன் பிறகும் தேவைப்படும் நூல்களைத் தயாரிப்பதற்கு எழுத்தாளரும் உடல் நலம், உழவு, பெண்கல்வி போன்ற துறைகளில் வல்லுநரும் ஒத்துழைக்குமாறு ஊக்கமளிக்கப்படுகின்றது.

இதற்கு மாறாக, நைஜரில் தேசிய அளவிலிருந்து கிராமங்கள் வரைப் பல்வேறு நிலைகளில் செய்தியிதழ்கள் வெளியாகின்றன.

இந்தியாவில், கிராமப்புற மக்களுக்காக கிராமப் பகுதிகளில் சுமார் 8,000 வார இதழ்களும். மாத இதழ்களும் வெளிவருகின்றன. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்காகவும், குறைந்த அளவு படிப்பறிவுடையவர்களுக்காகவும் பல்வேறு செய்தியிதழ்களும், வெளியீடுகளும் வெளியிடப்படுகின்றன.

அச்சிடும் முறைகள் மிக எளிமையாக இருக்கின்றன. கிராம நாளிதழ்களை அச்சிடுவதற்கு முக்கியமாக வரி உருக்கு அச்சுமுறை பயன்படுத்தப்படுகிறது. இந்த முறை நைஜரில் பெரிதும் பயனாகின்றது. அங்கு, கிராம நாளிதழ்களைப் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களே வெளியிடுகிறார்கள். உள்ளூர் எழுத்தறிவிப்பு ஆசியர்களின் உதவியுடன், இவர்கள் ஆசிரியர் குழாம் ஒன்றை அமைத்துக்கொண்டு, நாளிதழை அச்சிடுவதற்கு தேவையான மூலப் பொருள்களைத் தயாரிப்பது முதல் கட்டுரை எழுதுவது வரை அனைத்துப் பணிகளையும் தாங்களே செய்கிறார்கள்.

எழுத்தறிவிப்பு இயக்கங்களில் நூலகங்களும் முக்கியப் பங்கு கொள்கின்றன. கிர்ாமங்களில் நூல்களை வழங்குவதில் மிகுந்த இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. எழுத்தறிவுப் பயிற்சிக்குப் பிந்திய காலத்தில் கிராம நூலகத்தின் பணி மிகவும் இன்றியமையாததாகும். தான்சானியாக் குடியரசிலுள்ள 2000 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு கிராம நூலகம் இருக்கிறது. நாடு முழுவதிலும் 8000 கிராம நூலகங்கள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது 2781 நூலகங்கள் நிறுவப் பெற்றுள்ளன.

இந்தியாவில் கிராம நூலகங்களில் பெருமளவில் ஆர்வம் பிறந்துள்ளது. எனினும், எழுத்தறிவுப் பயிற்சிக்குப் பிந்திய காலத்தில் இவற்றின் முக்கியத்துவம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. பல நூலகங்கள், படிப்பதற்கு நூல்களை வழங்குவதுடன், வேறு பல சமூக—பண்பாட்டுப் பணிகளையும் செய்கின்றன. முதியோர், கல்வி கற்றவர்களைச் சந்திக்கவும், கலந்துரையாடவும், வானொலி கேட்கவும் உதவும் ஓரிடமாகவும் கிராம நூலகங்கள் விளங்குகின்றன.

இந்த நூலகங்களில் பெரும்பாலானவை ஊர்தி நூலகங்களாகும். இவை மிதிவண்டிகளிலோ குதிரை வண்டிகளிலோ, படகுகளிலோ இடத்திற்கு இடம் கொண்டு செல்லப்படுகின்றன. ஆனால், இந்த நூலகங்களிலுள்ள நூல்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கு மேல் இருப்பதில்லை. மேலும், இந்த நூல்கள் பெரும்பாலும் புதிதாக எழுதப் படிக்கக் கற்றவர்களின் கல்வியறிவை மேலும் வளர்க்கவும், நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவிபுரியவும் பயன்படுவனவாகவே உள்ளன. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் ஆர்வத்துடன் படிக்க விரும்பும் காவியங்களும், நாவல்களும், கதைகளும் இவற்றில் இருப்பதில்லை.

கியூபாவில், எழுத்தறிவு இயக்கங்களால் புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களை நாட்டின் முறை சார்ந்த கல்வி முறையுடன் ஒருங்கிணைப்பதற்கான பெரிய திட்டம் ஒன்று தொடக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோரின் எழுத்தறிவைத் தொடர்ந்து வளர்ப்பதில் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் முக்கிய பணி அளிக்கப்பட்டிருக்கிறது. தொழில் முறையில் அல்லாத பல்லாயிரம் ஆசிரியர்களின் போதனை முறைகளின் தரத்தை உயர்த்துவதற்கும் வானொலியையும் தொலைக்காட்சியையும் பயன்படுத்துகிறார்கள்.

வெனிசூலாவில், மிக முக்கியமான தொலைக்காட்சிக் கல்வி நிகழ்ச்சியை கத்தோலிக்க ஒளி—ஒலி நிலையம் நடத்துகிறது. இந்நிகழ்ச்சி, இந்நாட்டின் பெரிய நகரங்களில் நான்கு நகரங்களை எட்டுகிறது. மற்ற நகரங்களுக்கு இதை எட்டும்படி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரேசிலில். ஆயுட்காலக் கல்வித் திட்டத்திற்கும், எழுத்தறிவுக்குப் பிந்தித் காலப் பயிற்சிக்குமான இயக்கத்தில் தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், மற்றும் நவீன தொழில் நுட்பங்கள் அனைத்தும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் சமுதாயச் சுகாதாரக் கல்வி நிகழ்ச்சி முக்கியமானதாகும். இந்நிகழ்ச்சி. 25 மாநிலங்களிலும், 3 மண்டலங்களிலும் உள்ள 3000 வானொலி நிலையங்கள் மூலம் ஒலி பரப்பாகின்றது.

தான்சானியாக் குடியரசில் வானொலி நேயர்கள் குழுமங்களுக்காக 7,000 வானொலிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மாலியில், 1,444 வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன; இவை ஒவ்வொன்றுக்கும் இலவசமாக வானொலிகள் உள்ளன. மேல் வால்ட்டாவில் எழுத்தறிவு மையங்களில் கல்வி நோக்கங்களுக்காக வானொலி மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. இங்குக் கூட்டாக நிகழ்ச்சிகளைக் கேட்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

இலத்தீன் அமெரிக்காவிலும், பிரேசில் கியூபா, வெனிசூலா ஆகிய நாடுகளிலும் வானொலி வாயிலாக வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இது, முறை சார்ந்த கல்வியை நேயர்கள் அறிந்து கொள்ள வழி செய்கிறது. இந்நிகழ்ச்சிகளைக் கேட்டுத் தேர்வு பெறுபவர்களுக்கு, பல்வேறு வகுப்புத் தேர்ச்சிக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

கல்வி கற்பிக்கும் முறைகளும், வீடியோ பதிவுகள் வாயிலாக வெகுவாக முன்னேறியுள்ளன. எழுத்தறிவைப் பெருக்குவதற்கு இன்று புதிய வாய்ப்புகள் பெருகியுள்ளன. கல்விக்கும், நடைமுறை நடவடிக்கைக்குமிடையே ஒரு தொடர்பினை ஏற்படுத்த வேண்டுமெனில், எழுத்தறிவுச் சாதனங்களை வழங்குவதற்கான நடவடிக்கை மட்டும் போதாது. பல்வேறு உத்திகளையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவதன் மூலம்தான் இந்நோக்கம் ஈடேற முடியும்.

தமிழில்: இரா. நடராசன்

தென் மொராக்கோவில் திறந்தவெளிப் பள்ளித் திரையரங்கில் பாடம் தொடங்குவதற்காகச் சிறுவர் காத்திருக்கின்றனர். பல நாடுகளில் எழுத்தறிவின்மையை ஒழிக்க, பழைய முறைகளுக்குத் துணையாகத் திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவை கற்பனைத் திறத்துடன் பயன்படுத்தப் பெறுகின்றன.



நிழற்படம் சொர்லஸ் ஜெனைக்கீன், மார்சினெல்,— பெல்ஜியம்.

எழுத்தறிவுப் பயிற்சியின் அரசியல் பொருளாதாரம்



நிழற்படம்: © போல் அல்மாசி, பாரிஸ்

இந்த ஃபிரெஞ்சு அறிவியலார் தம் நாட்டு இயக்க இயற்பியல் துறை ஆராய்ச்சியாளருள் மிகச் சிறந்தவருள் ஒருவர்; முன்னாள் உழவுத் தொழிலாளராக இருந்தார். ஏழை உழவர் குடும்பத்தில் பல குழந்தைகளுள் ஒருவரான இவர் தொடக்கப்பள்ளியை விட்ட பின் வேலைக்குச் சென்றார் (வலப்புறம்); படைத்துறையில் பதிவு செய்து பல அறிவுத் தேர்வுகளில் தேறியபோது இவருடைய அரிய அறிவுத் திறமை வெளிப்பட்டது. அறிவியலில் 'டாக்டர்' பட்டம் பெற்று லயன்ஸ் நகரில் ஃபிரெஞ்சு தேசிய செயல்முறை அறிவியல் நிலையத்தில் பேராசிரியரானார்.

ஹெர்பர்ட் கின்டிஸ்

எழுத்தறிவுப் பயிற்சி ஒரு பொருளாதாரச் சிக்கல் என்பது எல்லோருக்கும் தெரியும். எழுத்தறிவிப்பில் தனி நபருக்கான செலவுகள் உண்டு; உயர் அழைப்பு உற்பத்தித்திறன் உண்டு; பொருளீட்டும் திறன் உண்டு; எழுத்தறிவுடன் இணைந்த வேறு பல நலன்களும் உண்டு. ஆனால், எழுத்தறிவுப் பயிற்சியின் நலன்களைப் பொருளாதார நோக்கில் கருதாமல், அரசியல் நோக்குடன் அணுகுவதால்தான் பெரும்பாலும் சிக்கல்கள் உண்டாகின்றன.

முதலில், எழுத்தறிவைப் பெறுவதை ஓர் அடிப்படை உரிமையாகக் கருத வேண்டும். ஏனெனில் சமூக வாழ்வில் அரசியல் பங்குப் பணியேற்பதற்கு இன்றியமையாத முதல் தேவை எழுத்தறிவாகும். ஒரு நாட்டில், அரசியல் உரிமைகளும், சமுதாய அதிகாரங்களும் பறிக்கப்பட்டுள்ள மக்கள் குழுமங்களிடையில்தான் படிப்பறிவின்மை அதிகமாக நிலவுவதைக் காண்கின்றோம். மக்களை விழிப்புணர்ச்சிக் கொள்ளச் செய்து, ஒற்றுமையை ஏற்படுத்நி மக்கன் கருத்தைத் திரட்டி அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் எழுத்தறிவுதான் தலையாய சக்தியாகப் பயன்பட்டிருக்கிறது என்பதை வரலாறு காட்டுகிறது. கல்வியறிவினால் ஒரு குழுமம் அரசியல் வலிமை பெற்றுத் தங்கள் ஆதிக்கத்திற்குப் போட்டியாக எழுவதை விரும்பாதவர்கள் தாம் எழுத்தறிவிப்புத் திட்டங்களை எதிர்க்கிறார்கள் என்பதை கல்வித் திட்டவல்லுநர்கள் நன்கறிவார்கள்.

இரண்டாவதாக, எழுத்தறிவு பெறுவதையும், பெற்ற எழுத்தறிவைப் பேணிக் காப்பதையும் ஊக்குவிக்க அளிக்கபடும் சமூக நலன்கள், பொருளாதாரத்பதை விட அரசியல் சார்புடையதாக இருக்கின்றன. அன்றாட இல்வாழ்வுக்கும், வேலைக்கும் எழுத்தறிவும் படிப்பறிவும் மிகத் குறைந்த அளவே தேவைப்படும். பல குழுமங்களும் தனி நபர்களும் உள்ளனர். இந்தக் குழுமங்களுக்கும் தனிநபர்களுக்குங்கூட சமுதாய வாழ்விலும், வேலையிலும், தேசிய அரசியலிலும் பங்கு கொள்வதற்கு எழுத்தறிவு அடிப்படைச் சாதனமாக விளங்குகிநது. மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மக்களாட்சி அமைவனங்கள் சீராக அமைந்துள்ள ஒரு சமுதாயத்தில் எழுத்தறிவுப் பயிற்சித் திட்டங்கள் வெற்றி பெறுகின்றன.

இவ்வாறு, எழுத்தறிவும் மக்களாட்சியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்குகின்றன. தனி நபர்கள் தங்கள் வாழ்வைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கவேண்டியிருக்கும் போதும், முடிவுகளை சமூக நிலைமைகள், பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் எடுக்க வேண்டியிருக்கும்போதும், எழுத்தறிவும் அதன் வளர்ச்சியும் தலையாய இடம் பெறுகின்றன. இதற்கான வாய்ப்புகள் இல்லாதிருக்கும்போது, திறன் வளர்ச்சிக்கும் வாய்ப்பில்லாமற் போகிறது.

"வேலையில் பயன்படுத்துவதற்கு

ஹெர்பர்ட் கின்டிஸ், அமெரிக்கர்; மசாசுசெட்ஸ் பல்கலைக் கழகத்தில் பொருளியல், கல்விப் பொருளாதராப் பேராசிரியர்; உலக வங்கியின் முன்னாள் கல்வி அறிவுரையாளர். சாமுவெல் பௌல்ஸுடன் சேர்ந்து 'ஸ்கூலிங் இன் கேப்பிட்டலிஸ்ட் அமெரிக்கா' எனும் நூலை (பேசிக் புக்ஸ், 1976) எழுதினார். இது ஸ்பானிய, ஃபிரெஞ்சு, இத்தாலிய, ஜப்பானிய, போர்ச்சுக்கீசிய மொழிகளில் வெளிவந்துள்ளது.

எழுத்தறிவு இன்றியமையாததாக இருக்கும்போது, எழுத்தறிவிப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டால் நீடித்த வெற்றி பெறுமா?'' என்பதைத் தீர்மானிப்பதில் தனிநபர்களையும் குழுமங்களையும் எதிர்நோக்கும் அரசியல் வாழ்வின் தன்மை முக்கிய இடம் பெறுகிறது. எழுத்தறிவுப் பயிற்சித் திட்டங்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? திறன் வளர்ச்சிக்குப் பயன்படும் நுட்பமான கற்பிக்கும் முறைகளே அவசியம் என்பது எல்லோரும் அறிந்துள்ளனர். எனினும், அரசியல் மற்றும் அதிகாரப் பற்றிய சிக்கல்களே எப்பொழுதும் கல்விமுறையில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

முற்போக்கான சமுதாயத்தில் எழுத்தறிவுப் பயிற்சியின் அரசியல் அம்சங்கள் உணரப்படக் கூடும். இந்தச் சமுதாயம், தங்களுடைய தலைவிதிகளைத் தாங்களே நிருணயித்துக் கொள்ளும் வகையில் குடிமக்களின் சொந்தத்திறன்கள் முழு அளவில் வளர்வது கண்டு அஞ்சுவதில்லை. எழுத்தறிவு பெற்ற குடிமக்களின் அறிவையும் ஆற்றலையும் கண்டும் இச்சமுதாயம் அச்சங் கொள்வதில்லை. மக்களின் வலிமை கண்டு அஞ்சுகின்ற பிற்போக்கான மேட்டுக்குடியினரின் ஆதிக்க வலிமையைக் குறைப்பதுதான் எழுத்தறிவிப்புத்திட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்கான முதல் நடவடிக்கையாகும்.

கல்விக் கோட்பாட்டில், மேல்மட்டத்தினருக்கு மட்டுமே பயன்படக்கூடிய பெரும்பான்மையினரின் தேவைகளுக்கு உகந்ததாக இல்லாத பல கொள்கைகள் நிலவுகின்றன. இக்கொள்கைகளைப் பயன் முறை எழுத்தறிவுப் பயிற்சி ஒதுக்கிவிடவேண்டும். எடுத்துக்காட்டாக இன்றையக் கல்வி முறையில் ஆசிரியர்கள் செயற்படுபவர்களாகவும். மாணவர்கள் செயலற்றவர்களாகவும் இருக்கும் முறைதான் பயன்படுத்தப்படுகிறது. இந்த முறையில், திறன்கள் கற்பிப்பவரிடமிருந்து கற்பவருக்குச் செல்வதாக கருதப்படுகிறது. இதனால், பொதுவாக கல்வி நிறுவனங்களிலும், குறிப்பாக எழுத்தறிவுப் பயிற்சித் திட்டங்களிலும் மக்கள் பங்கு கொள்வது திட்டமிட்டு விலக்கப்படுகிறது. இந்த முறையானது, இரு முக்கிய காரணங்களினால், எழுத்தறிவுப் பயிற்சியில் தோல்வியுறுகின்றது.

முதலாவது, ஒரு தனி நபர் தனது சுற்றுப்புறச் சூழலைத் தன்வயப்படுத்திச் சொந்தத் திறனை வளர்த்துக் கொள்ளும் போதுதான், அவருக்கு உண்மையில் கல்வியறிவு ஏற்படுகிறது. கல்வி முறையுல் கற்பவரின்—முக்கியமாகக் கல்வி கற்கும் முதியோரின் — பங்குப் பணி குறையும்போது திறனைப் பெறுவதற்குரிய அடிப்படை வாய்ப்பும் குறைந்து விடுகிறது. கற்பவர்கள் தங்களுடைய சொந்தத் திறன்களையும் ஆற்றல்களையும் பயன்படுத்துவதற்கு இயல்விக்கும் கல்விச் சூழலை உருவாக்கும் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தது கல்வியின் அரசியல் பொருளாதாரமாகும்.

இரண்டாவதாக, மக்கள் வாழ்வின் சமூக அமைப்புடன் எழுத்தறிவிப்புத் திட்டத்தைத் ஒருங்கிணைப்பதாகும். கல்வியானது (முக்கிய எழுத்தறிவுப் பயிற்சி) சமூக வாழ்விலிருந்து வேறுபட்ட தனித்துறை என்றும் 'வீடு, சமுதாயம், பணி இவற்றிலிருந்து வேறுபட்ட ஒரு தனிச் சமூகச் சூழலில் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்றும் பொதுவாகக் கருதப்படுகிறது. இது தவறான கருத்தாகும். கல்வி என்பது ஒரு பழக்க முறை; அது ஓர் இடமன்று. தனிநபர்களின் சொந்தத் திறன்களையும் அத்திறன்களை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு பழக்கமுறையே கல்வியாகும். மற்ற சமூகப் பழக்கங்களைப் போலவே, கல்விப் பழக்கங்களும் எல்லா இடங்களிலும் வளர்கின்றன. அரசியல் பணி போன்ற சமூக நிறுவனங்களுக்கு மக்களைத் தயார் செய்யும் தனிநிறுவனங்களில் கற்கப்படுவது தான் கல்வி என்று பொதுவாகக் கருதுகின்றனர். ஆனால், உண்மையில், மக்களையே உருவாக்கும் ஒரு பழக்க முறையே கல்வியாகும்.

மக்கள் உருவாக்கப்படுவது எங்கே? மக்கள் பங்குப் பணியேற்கும் சமூகச் சூழல் ஒவ்வொன்றிலும் மக்கள் உருவாக்கப்படுகின்றார்கள். குறிப்பாக அரசியலிலும், பணியிலும் மக்கள் உருவாக்கப்படுகின்றார்கள். தலைவர்களையும், அரசியல் முடிவுகளையும் மட்டுமே அரசியல் உருவாக்கவில்லை; கல்வி கற்ற குடிமக்களையும் அரசியல் உருவாக்குகிறது. பொருளாதாரம், சரக்குகளையும் ஊழியங்களையும் மட்டும் உற்பத்தி செய்யவில்லை; மக்களையும் உருவாக்குகிறது. சுருங்கக்கூறின் கல்வியானது, அறிந்தோ அறியாமலோ, திட்டமிட்டோ திட்டமிடாமலோ மக்களாட்சி அரசியல் வளர்ச்சியின்—சமதர்மப் பொருளாதார மேம்பாட்டின் ஓர் அம்சமாக அமைந்துவிட்ட ஒரு பழக்க முறையாக அமைந்துள்ளது.

இந்த அடிப்படை உண்மையைப் புறக்கணிப்பதால், கல்விக்கும் திட்டமிடுபவர்கள் இருவகையில் தவறுகள் செய்கின்றனர். முதலாவதாக, சிறப்புமுறைக் கல்வி நிறுவனங்கள் பெரும்பாலும் இளைஞர்களுக்காகவே அமைக்கப்பட்டிருப்பதால், கல்வியானது குழந்தைகளுக்குத்தான் உரியது எனக் கருதுவதாகும். இங்கு, கல்வி என்பது வாழ்நாள் முழுவதும் கற்கவேண்டிய ஒன்று என்பதையும், குழந்தைப் பருவக் கல்வியைப் போலவே, முதியோர் கல்வியின் அரசியல்—பொருளாதார நலன்களும் முக்கியமானவை என்பதையும் மறந்து விடுகின்றனர். இரண்டாவதாக, அரசியல், சமுதாய விவகாரங்கள், பொருளாதார உற்பத்தி ஆகியவை சார்ந்த அன்றாட நிறுவனங்களுக்குப் புறம்பான நிலையில், எழுத்தறிவிப்புக்கான முதியோர் கல்வித் திட்டங்களை வகுப்பதாகும்.

எழுத்தறிவுப் பயிற்சியையும், முதியோர்களுக்கான மற்றத் திறன் வளர்ப்பு மற்றும் தொழிற்பயிற்சித் திட்டங்களையும் அன்றாடப் பணியோடும் சமுதாய வாழ்வோடும் ஒருங்கிணைப்பதுதான் எழுத்தறிவுப் பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்குச் சிறந்த வழி என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். வேளாண்மை மற்றும் தொழில் உற்பத்தியில் எழுத்தறிவுத் திட்டங்களும் தொழிலாளரின் உரிமையாக அமைய வேண்டும். தொழிலாளர்களின் பணி நலன்களின் ஒரு பகுதியாக வேலை நேரத்தின்போதே அவர்களுக்கு எழுத்தறிவு கற்பிப்பதற்கு வகை செய்யப்படவேண்டும். தொழிலாளர்கள் எழுத்தறிவு பெறுவதால், முதலாளிகளுக்கு உடனடியாகப் பலன் கிடைக்காவிடினும், நாளடைவில் அவர்களுடைய உற்பத்தித்திறன் பெருகி, தங்களுக்கும் சமுதாயத்திற்கு பயன்விளையும் என்பதை முதலாளிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எழுத்தறிவுப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர், எழுத்தறிவைத் தொடர்ந்து வளர்ப்பது கல்விக்கொள்கை வகுப்பவர்களுக்குப் பெருஞ்சிக்கலாக இருந்து வருகிறது. பொருளாதார மற்றும் அரசியல் ஊக்குவிப்புகளை இத்திட்டத்தில் முறையாக இணைத்துவிட்டால், எழுத்தறிவைத் தொடர்ந்து வளர்க்க இயலாது. எழுத்தறிவுப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் சமுதாய வாழ்வுடனும், பணியுடனும் இணைக்கப்படும் போது, எழுத்தறிவுக்குப் பிந்திய திட்டங்களுக்குத் தேவையில்லாமற் போகும். எழுத்தறிவைக் கற்பது தனிநபருடைய அன்றாட வாழ்விலும் பணியிலும் ஓர் அங்கமாகி விடுவதால், கல்வியைத் தொடர்ந்து கற்கும் பொறுப்பை அவர் தாமே ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்கிறார்.

விவசாயத்திலும் தொழில்துறையிலும் எழுத்தறிவுத் திட்டம் என்பது தொழிலாளியின் உரிமையாகும். உழைக்கும் நாளில், உழைப்பாளியின் வேலை நலன்களில் ஒரு பகுதியாக எழுத்தறிவுப் பயிற்சி வழங்கப்படவேண்டும். கீழே: காமரூன் டீ தோட்டம்

நிழற்படம்: எம். ஷ்லேவ; © ஜோனவா ஜுங்; பாரிஸ்

உலக முழுவதுமிருந்து அறிக்கைகள்



எழுத்தறிவின்மைக்கு எதிராக உண்மையில் என்ன முயற்சி நடைபெற்று வருகின்றது? உலகின் முக்கிய பகுதிகளில் நடைபெறும் எழுத்தறிவு நடவடிக்கைகளின் இன்றைய நிலையையும் வருங்கால நிலையையும் புள்ளி விவரங்களுடனும் குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளுடனும் இங்கு தந்திருக்கிறோம். இங்கு தரப்பட்டுள்ள செய்திகள் "யுனெஸ்கோ கூரிய'ருக்கு நேராக வந்த தகவலிலிருந்தோ யுனெஸ்கோ செயலக ஆவணங்களிலிருந்தோ எடுக்கப்பெற்றவை, இதிலுள்ள சித்திரங்கள் உலகின் ஒவ்வொரு பகுதியையும் சார்ந்த எழுத்தறிவு இயக்கச் சுவரொட்டிகளிலுள்ளவை. (மேலே: சுரினாம் நாட்டுச் சுவரொட்டி). அடுத்த இரு பக்கங்களிலுள்ள கட்டங்களில் கனடா, எத்தியோப்பியா, தான்ஸானிய ஐக்கிய குடியரசு ஆகியவற்றில் புதிதாக எழுத்தறிவு பெற்ற வயது வந்த மூவர் எழுத்தறிவு பெற்றதால் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் பற்றிக் கூறுகின்றனர்.

எத்தியோப்பியா: 1976இல் தொடங்கப்பெற்ற எழுத்தறிவிப்பு இயக்கம் இன்னும் தீவிரமாக நடைபெறுகிறது. தேசிய ஒருங்கிணைப்புக் குழு இதனை ஊக்குவிக்கிறது. இப்பொழுது இந்த இயக்கத்தில் வேளாண்மைத் தொழிலாளர் சங்கங்கள், குடிமக்கள் சங்கங்கள் போன்ற நாட்டிலுள்ள மக்கள் அமைவனங்கள் அனைத்தும் பங்குகொள்கின்றன. தவிர, மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றத் தொண்டர்கள் அடங்கிய 9,84,700 எழுத்தறிவிப்புத் தொண்டர்களும் இதில் பங்கு பெறுகின்றார்கள். இந்நாட்டிலுள்ள 10 வயதுக்கு மேற்பட்ட 2.2 கோடிப் பேரில், 1.41 கோடிப் பேர் எழுத்தறிவிப்பு வகுப்புகளில் பயின்றார்கள்; இவர்கள் 1.28 கோடிப் பேர் இறுதி வகுப்பு வரைப் படித்துத் தேர்வு எழுதினார்கள். இதனால், எழுத்தறிவு விகிதம் நகர்ப்புறங்களில் 90 சதவிகிதமாகவும், கிராமப்புறங்களில் 49 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. (1974இல் எத்தியோப்பிய மக்கள் தொகையில் 7% பேர் மட்டுமே எழுதப்படிக்க அறிந்திருந்தனர்.) இந் நாட்டில் மொத்தம் 80 மொழிகள் வழங்குகின்றன. இவற்றுள் 15 முக்கிய மொழிகளில் எழுத்தறிவிப்பு இயக்கம் நடத்தப்பெற்றது. நாட்டு மக்களில் 90% பேர் இந்த 15 மொழிகளையும் பேசுகின்றனர்.

மத்திய ஆஃப்ரிக்கக் குடியரசு: மிகவும் கடினமான சூழலில் இங்கு கிராம மக்களுக்காக எழுத்தறிவிப்பு இயக்கம் ஒன்று தொடங்கப்பெற்றது (15—35 வயதுள்ள பருத்தித்தொழிலாளர்களுக்காக 61 எழுத்தறிவிப்பு மையங்களில் இந்த வகுப்புகள் நடந்தன. 122 எழுத்தறிவிப்புத் தொண்டர்கள் இங்கு கற்பித்தார்கள். புதிதாக எழுத்தறிவுபெற்றவர்கள் தொடர்ந்து படித்துத் தங்கள் எழுத்தறிவைப் பெருக்கிக் கொள்வதற்காக இங்கு இரண்டு செய்தியிதழ்களில் தனிப்பகுதிகள் வெளியிடப்படுகின்றன.

லெசொத்தோ: இங்கு எழுத்தறிவுக்குப் பிந்திய காலப் பயிற்சிக்காக, கிராமச் செய்தி இதழ் பயன்படுத்தப்படுகிறது. "*மாய்தூதி*" என்னும் நாளிதழ் இதற்கெனத் தனிச்சிறப்பிதழ்களை வெளியிடுகிறது. இங்கு எழுத்தறிவுப்பு இயக்கம் தொடங்குவதற்கு முன்பு, மொத்த மக்கள் 12 இலட்சம் பேரில் 55%பேர் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தனர். எழுத்தறிவு இயக்கம் தொடங்கி ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இன்று எழுத்தறிவற்றவர்கள் 6,000 பேரும், அரைகுறையாக எழுத்தறிவுடையவர்கள் 20,000 பேரும் எழுத்தறிவிப்பு இயக்கத்தினால் பயனடைந்துள்ளனர். இந்த இயக்கத்தினால் பயன் பெற்றவர்களில் மாடு

வெர்டு முனைக் குடியரசின் சுவரொட்டி

மேய்க்கும் 600 சிறுவர்களும் சிறுமிகளும், லெசொத்தோவிலிருந்து தென் ஆஃப்ரிக்கச் சுரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்களும், சிறைக் கைதிகளும் அடங்குவர். லெசொத்தோ தொலைதூரப் பயிற்சி மையத்தின் ஒத்துழைப்புடன், வானொலியும், கிராமச் செய்திஇதழ்களும், கிராமத் தொழில் பயிற்சி மையங்களும் அளிக்கும் வசதிகளும் இந்த எழுத்தறிவிப்பு இயக்கத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. மொழி ஒற்றுமை காரணமாக, லெசத்தோவின் எழுத்தறிவிப்பு இயக்கத்தினால் போட்ஸ்வானாவிலும், சுவாசிலாந்திலுங்கூட நற்பலன் விளைந்துள்ளது.

மாலி: இங்கு எழுத்தறிவிப்புக்குப் பிந்திய காலப் பயிற்சியில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதற்கென, மாலியில் "செய்தி" என்னும் மாத இதழ் வெளியிடப்படுகிறது. இந்த இதழ் 20,000 படிகள் விற்பனையாகிறது.

தன்சானியாக் குடியரசு: இங்கு 8 கிராம நாளிதழ்கள் வெளியாகின்றன. இவற்றின் மொத்த விற்பனை 4,50,000 படிகள். இந்நாளிதழ்கள், புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்கு செய்திகளைத் தெரிவிப்பதுடன் பாடங்களையும் கற்பிக்கின்றன. இந்நாளிதழ்களில் மிகுந்த செல்வாக்குப் பெற்றது.

பெருமையும் தன்னம்பிக்கையும் அடைகிறேன்...

உழவுத் தொழில் செய்யும் என்டுகு ருக்கியா ஒக்காஷி எனும் 53 வயதுள்ள பெண் தான்ஸானியாவிலுள்ள அருஷாவில் வாழ்கிறாள். இவள் சோளம், அவரை, காய்கறி பயிரிடுகிறாள். இவளுக்கு 7 குழந்தைகள். 10 ஆண்டுகளுக்கு முன் எழுத்தறிவு பெற்றாள். அவள் கூறுவதாவது.

"எனது முந்திய நிலைக்கும் இன்றைய நிலைக்கும் பெரும் வேறுபாடு இருக்கினறது. பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பல்வேறு ஆவணங்களில் கையொப்பமிடத் தேவை ஏற்பட்ட போது, பெருவிரலைத்தான் அடையாளமாகப் பதிப்பேன். எதற்கு கையொப்பமிடுகிறேன் என்று எனக்கே தெரியாது. அதனால் சிலவேளை அநீதியும் சுரண்டலும் விளையலாம். இப்போது நான் எழுத்தறிவு பெற்றிருப்பதால், கண்மூடித்தளமாக கையொப்பமிடுமாறு யாரும் என்னைக் கேட்க முடியாது. அது எதைப்பற்றியது என்று கேட்டு, ஆவணங்களை நானே படித்து, திருப்தியடைந்த பிறகு தான் கையொப்பமிட இசைகிறேன்.

வேறு வகைகளிலும் எழுத்தறிவு எனக்கு உதவியுள்ளது. எழுத்தறிவினால் பல்வேறு உணவுகளின் ஊட்ட இயல்புபற்றியும் அறிந்து கொண்டேன். எது உடலை வளர்க்கும், எது நோயைத் தடுக்க உதவும் என்று தெரிந்து கொண்டேன். சரிவிகித உணவுபற்றியும் இப்போது எனக்குத் தெரியும்.

முன்னால், தெருவில் போகும்போது எந்த அடையாளத்தையும் வாசிக்க முடியாது. "அபாய" அறிக்கையைப் பார்த்தாலும்கூட, "அம்மா, அம்மா, அம்மா, நில்லுங்கள்" என்று யாராவது கூறும்வரை, தொடர்ந்து போய் கொண்டிருப்பேன். ஆனால் இன்று "இங்கே கடக்கக் கூடாது" "புல்லின்மேல் நடக்கக் கூடாது" போன்ற எல்லா அறிக்கைகளையும் வாசிக்க முடிகின்றது.

ஆகவே இப்போது பெருமையும் தன்னம்பிக்கையும் அடைகிறேன்.

ஆதாரம்: *'கன்வெர்ஜென்ஸ்'*; முதியோர் கல்விப் பன்னாட்டு அவை, டொரன்டோ. கனடா, தொகுதி 10, எண் 3, 1977)

எழுத்தறிவு இல்லையெனில், ஏழைதான்..

கனடாவில் பெம்பிரோக்கைச் சேர்ந்த ஜானிஸ் டெய்லர் 30 வயது வரை முற்றிலும் எழுத்தறிவற்றவளாக இருந்தாள். 5ஆம் ஆண்டுக்குப் பிறகு படிப்பைத் தொடரவில்லை. எழுதப்படிக்கத் தெரியாததால் சாதாரண சமூக வாழ்வில் பங்கு பெற முடியவில்லை.

எழுத்தறிவற்றோர்க்கு உதவும் 'ஏஎல்எஸ்ஓ' எனும் நிறுவனம்பற்றித் தன் வீட்டினருகில் சிலர் பேசுவதைக் கேட்டாள்.

"முதலில் எலலாம் கடினமாக இருந்தது. ஆனால் தொடர்ந்து படிக்க முடிவுசெய்தேன். ஏனெனில், கல்லூரிக்குச் சென்று தொழில் கற்க விரும்பினேன். எழுத்தறிவு இல்லையெனில், வேலை கிடைக்காது. ஏழையாக இருக்க வேண்டும்.

கடந்த மே மாதம் இவள் வணிக, தொழில் நுட்பத் துறையின் அல் கோன்குவின் கல்லூரியின் தகுதிச் சான்றிதழ் பெற்றாள். இப்போது தட்டெழுத்துப் பொறி, வானொலிப் பெட்டி, எளிதான மின் அமைப்புகள் போன்றவற்றை பழுது பார்ப்பதில் தேர்ச்சி பெற்றிருக்கிறாள்.

"படிப்பைத் தொடங்கும்போது என் வயது பற்றித் தயங்கினேன். ஆனால் அவர்களும் அவ்வாறே உணர்வதை விரைவில் அறிந்தேன்."

(ஆதாரம்: 'லே த்ருவா'வில் ஃப்ரான்ஸ் பிலோன் எழுதிய கட்டுரை. ஆட்டாவா, செப்டம்பர் 9, 1983)

"*இடையறாக் கல்வி*" என்னும் பெயர் கொண்டதாகும். இதன் விற்பனை 1,00,000 படிகளாகும். தான்சானியாவில் எழுத்தறிவிப்பு இயக்கம் தொடங்கிய சில ஆண்டுகளிலேயே முதியோர் எழுத்தறிவின்மை 75 சதவிகிதத்திலிருந்து 21 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. மேற்சொன்ன நாளிதழ்கள் தவிர, புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அன்றாட வாழ்வில் எழுத்தறிவு பெற்றவர்கள் எழுதவும், படிக்கவும், கணக்கிடவும் திறன்களை வளர்ப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. அங்கு சுமார் 3,200 கிராம நூலகங்கள் உள்ளன; இவை ஒவ்வொன்றிலும் சராசரியாக 400 நூல்கள் இருக்கின்றன. 1976-க்கும் 1982-க்குமிடையில் 52 நாட்டுப்புற மேம்பாட்டுக் கல்லூரிகள், 38,000 மரணவர்களுக்கு மேம்பாட்டு நோக்குடைய பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளன.

மேலும், வானொலிச் சிறப்புக் கல்வி நிகழ்ச்சி ஒலிபரப்புகள் பல இலட்சம் மக்களை எட்டியுள்ளன. இந்நிகழ்ச்சிகளில் சுகாதாரம், ஊட்டச்சத்து போன்ற பயனுள்ள பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இறுதியாக, முதியோருக்கும், எதிர்கால ஆசிரியர்களுக்கும் பயனளிக்கும் வகையில், தொடக்க மற்றும் உயர்நிலைக் கல்விக்கான அஞ்சல் வழி வகுப்புகளும் நடைபெறுகின்றன.

அங்கோலா: எழுத்தறிவிப்பு இயக்கம் நாட்டு மக்கள் அனைவரையும் எட்டும் வகையில் வானொலி, தொலைக்காட்சி, செய்தி இதழ்கள் ஆகிய அனைத்தும் திறம்படப் பயன்படுத்தப்படுகின்றன. ஆசிரியத் தொண்டர்கள், முக்கியமாக இளைஞர்கள் இவ்வியக்கத்தில் தீவிரப் பங்கு பெறுகிறார்கள். பாடநூல்கள் ஆறு தேசிய மொழிகளிலும், போர்ச்சுகீசிய மொழியிலும் வெளியிடப்படுகின்றன.

சிரியா: இங்கு 1958இல் எழுத்தறிவிப்பு இயக்கம் தீவிரமாகத் தொடங்கப்பெற்றது. 10,766 வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன; 2,63,318 மாணவர்கள் இவ்வகுப்புகளில் சேர்ந்துள்ளனர்; இதுவரை, 1,30,000 பேர் இவ்வகுப்பினை முடித்துள்ளனர். 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஓரளவு கல்வி பெற்றவர்கள், பெருமளவில் எழுத்தறிவிப்பு இயக்கத் தொண்டர்களாகப் பணியாற்ற முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குவைத்: இங்கு 1981இல் எழுத்தறிவிப்பு இயக்கம் தொடங்குவதற்கு முன்பு, ஆண்களில் 32% பேரும், பெண்களில் 52% பேரும் எழுத்தறிவில்லாதவர்களாக இருந்தனர். அதுமுதல் 07,076 மாணவர்களுக்கு எழுதப்படிக்கக் கற்பிக்கப்பட்டுள்ளது. 66 எழுத்தறிவிப்பு மையங்களில் எட்டு மாதக் கால வகுப்புகள் நடைபெற்றன. வாரத்தில் ஐந்து நாட்கள், நாளும் மூன்று மணி நேரம் தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்குப் பாடநூல்களுக்குக் குறைவில்லை; சுவரொட்டிச் செய்தியிதழ்கள், திரைப்படங்கள், காட்சி வில்லைகள் ஆகியவற்றையும் பயன்படுத்தி வருகின்றனர்.

ஏமன்: இங்கு 1925இல் ஆண்களில் 74% பேரும், பெண்களில் 97% பேரும் எழுத்தறிவில்லாதவர்களாக இருந்தனர். 1982–க்கும் 1986–க்குமிடையில் 7,00,000 பேருக்கு எழுதப்படிக்கக் கற்பிக்கும் நோக்குடன் எழுத்தறிவிப்பு இயக்கம் அண்மையில் தொடங்கப் பெற்றுள்ளது.

ஈராக்: கட்டாய எழுத்தறிவிப்புக்கான இயக்கம் 1978இல் இங்கு தொடங்கப்பெற்றது. எழுத்தறிவின்மையை ஒழிப்பதில் இது ஒரு முக்கிய முயற்சியாகும். புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் நாட்டின் வளர்ச்சிப் பணியில் முக்கியப் பங்கு கொள்வதற்கேற்ற கல்வியையும் பயிற்சியையும் அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பிரேசில்: இங்கு 1967-லேயே பொதுமக்கள் எழுத்தறிவிப்பு இயக்கம் தொடங்கப்பெற்றது. 1,141 எழுத்தறிவிப்பு மையங்கள் வாயிலாகவும், 1,157 செய்தியிதழ்கள், 650 வானொலி நிகழ்ச்சிகள், 1,414 பொது நிகழ்ச்சிகள் மூலமாகவும் செயல்முறை எழுத்தறிவிப்புத் திட்டத்தின் கூட்டுறவுடன் இந்த இயக்கம் நடத்தப்படுகிறது. பண்பாட்டு நிகழ்ச்சிகள், தொழிற்பயிற்சி, சமுதாயச் சுகதாரக் கல்வி, எழுத்தறிவிப்புப் போதனை ஆகியவையும் அண்மையில் இந்த இயக்கத்தின் கீழ் தொடங்கப்பெற்றுள்ளன. எழுதப்படிக்கக் கற்றவர்கள் தாங்களே படிப்பினை தொடர்வதற்கு உதவுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஈக்குவடார்:— இங்கு எழுத்தறிவிப்புப் பயிற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நாட்டில் 1974இல் 9,65,000 எழுத்தறிவில்லாதவர்கள் இருந்தார்கள். அதன்பிறகு 5,36,000 பேர் எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். 7,562 பள்ளிகளிலும், எழுதப்படிக்கக் கற்றுக் கொள்கின்றவர்கள் தாங்களே கட்டிய கட்டிடங்களிலும் இந்த வகுப்புகள் நடைபெறுகின்றன.

சூரினாம்: இங்கு 1984 ஆகஸ்ட் முதல் 1985 மார்ச் வரையில் "அல்ஃபா—84" என்ற பெயரில் எழுத்தறிவிப்பு இயக்கம் தொடங்கப்படவிருக்கிறது. இங்கு தற்போதுள்ள மொத்த மக்கட்தொகையான 3,60,000 பேரில் 60,000 பேர் (35%) எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் தொடக்கப்பள்ளிகளில் சேர்ந்து பாதியிலேயே படிப்பை விட்டுவிட்டவர்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர்.

மறு பிறப்புபோல் இருக்கிறது . . .

27 வயதுள்ள பெர்க் எனும் பெண் எத்தியோப்பியாவிலுள்ள சிடாமோ மாநிலத்தைச் சேர்ந்தவள். இப்போதுதான் 6 மாத எழுத்தறிவுக் கல்வி பெற்றிருக்கிறாள். அவள் தனது கதையைச் சொல்கிறாள்

"பெண்ணைப் பள்ளிக்கு அனுப்புதல் என்பது எங்கள் சமூகத்தில் முன்பு தீ நெறியாகக் கருதப்பட்டது. கல்வி வாய்ப்பு இருக்குமெனில் ஆண்களே அவ்வுரிமையைப் பெற்றனர். பெண் திருமணம் வரை வீட்டிலே இருக்கவேண்டும். திருமணம் (தான் விரும்பியவனை அல்ல அதிக பணம் கொடுத்தவனையே திருமணம்) செய்த பிறகு, பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பே இல்லை. இப்புதிய வாழ்க்கையில் வேறு பல அநீதிகளும் துன்பங்களும் அவளுக்கு ஏற்படும். நாள்தோறும் தண்ணீர் எடுக்க ஆற்றுக்குப் போகவேண்டும்; விறகு பொறுக்கவேண்டும், உணவு சமைக்க வேண்டும். வீட்டையும் கால்நடையையும் கவனிக்கவேண்டும். இவ்வாறே வாழ்நாளைக் கழிக்க வேண்டும்.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. எங்கள் கிராமத்தில் சிறிய வாசக நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே வாசிக்கத் தெரிந்தவர்கள் செய்தித்தாள்களைப் பிறருக்காக வாசிப்பார்கள். எழுத்தறிவு வகுப்புக்கு நான் சென்றபோது, வருந்திப் படித்தேன். 6 மாதங்களில் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டேன். இப்போது செய்திதாள்கள் கிடைத்தபோதெல்லாம் அவற்றைப் படித்து இன்புறுகிறேன். எல்லாம் எனக்கு இப்போது புரிகின்றன.

(ஆதாரம் ஃபிக்கிர் மரியாம் ட்ஸெஹாய் எழுதிய 'கம்யூனிக்கேஷன் மீடியா அண்டு எஜுகேஷன் ஃபார் டெவலப்மெண்ட்—தி ஆஃப் எத்தியோப்பியா)

எழுத்தறிவில்லாதவர்களின் எண்ணிக்கையை இயன்ற வரையில் குறைப்பது இந்த இயக்கத்தின் நோக்கமாகும். இங்குள்ள மக்கள் 20 மொழிகளைப் பேசுகிறார்கள். இது எழுத்தறிவிப்பு இயக்கத்திற்கு முக்கிய சிக்கலாக அமைந்துள்ளது. நாட்டு மக்களின் ஆட்சி மொழியாகிய சூரினாம் டச்சு மொழியை எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 40% பேர்களே. இந்த இயக்கத்திற்கு மகளிர் சங்கங்கள், இளைஞர் அமைவனங்கள், தொழிற்சங்கங்கள், உழவர் சங்கங்கள், சமய நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த தொண்டர்கள் உட்பட 22,000 எழுத்தறிவிப்பு ஊழியர்களும், தொழில்முறை ஆசிரியர்களும் தேவைப்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த இயக்கத்திற்கு 15,4,00,000 அமெரிக்க டாலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையில் பாதி பன்னாட்டு ஒத்துழைப்பின் மூலம் கிடைக்கும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

டொமினிக்கன் குடியரசு;—இங்கு 15 வயதுக்கு மேற்பட்ட எழுத்தறிவில்லாதவர்கள் 10 இலட்சம் பேர் இருந்தனர்,

யுனெஸ்கோ, அமெரிக்க நாடுகள் அமைவனம், அமெரிக்க நாடுகள் வங்கி ஆகியவற்றின் உதவியுடன் 1982இல் எழுத்தறிவிப்பு இயக்கம் தொடங்கிய பிறகு, 12,523 அடிப்படைக் கல்வி மையங்களில் 79.833 எழுத்தறிவில்லாதவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பணியில் 31,331 ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர் 17,77,703 பாடநூல்களும் கல்வி கற்பிக்கும் சாதனங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பெரு:— இங்கு 1981இல் 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் 17.4% பேர், அதாவது, 17,00,000 பேர் எழுத்தறிவில்லாதவர்களாக இருந்தார்கள். அதன் பிறகு 4,99,000 முதியோருக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது அல்லது எழுத்தறிவு பெற்று வருகிறார்கள். 2,74,000 தொடக்கநிலைப் பாட நூல்களும் அதே எண்ணிக்கையிலான குறிப்பேடுகளும் 200,000 அடிப்படைக் கணிதப் பாட நூல்களும், 2000 எண் விளக்குகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன- எழுத்தறிவிப்புக்கும் பிந்திய காலப் பயிற்சி அளிக்கவும், தொழிற்பயிற்சி அளிக்கவும் கல்வித் துறையின் பிற பிரிவுகளுடன் இணைந்து திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

நிக்காரகுவா—இங்கு 1979ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தீவிர எழுத்தறிவிப்பு இயக்கத்தின் காரணமாக எழுத்தறிவின்மை



சுவரொட்டிகள்: மேலே: கட்டலோனியா
கீழே: ஐக்கிய அராபிய அரசு
இடப்புறம்: பங்களாதேஷ்

50 சதவிகிதத்திலிருந்து 13 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. இந்தப் பாணியில் 1,20,000 ஆசிரியர் தொண்டர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள் ஐந்தே மாதங்களில் 4,00,000 எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளில படிக்கும் மாணவர்கள் குறைந்தது 6 மாத காலம் முதியோர் கல்வித் திட்டத்தின் ஆசிரியர்களாகப் பணிபுரிய வேண்டும் என்று இங்கு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

செயல்முறை எழுத்தறிவின்மை உலகிலுள்ள தொழில் வளமடைந்த நாடுகள் அனைத்திலும் இன்னும் முற்றிலுமாக மறைந்து விடுவதில்லை.

கனடா: இங்குள்ள 15 வயதிற்கு மேற்பட்டவர்களில் 8,56,060 பேர் (5.5%) தொடக்கக் கல்வியை முடிக்காமல் இருக்கிறார்கள். இவர்களை எழுத்தறிவில்லாதவர்கள் என்றே கருதலாம். இங்கு எழுத்தறிவின்மையின் விகிதம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது; கியூபெக்கில் 7.5%; நியூ பவுன்ட்லாந்தில் 11.9%; வடமேற்கு மண்டலங்களில் 23.3% 1979-க்கும் 1980-க்குமிடையில் எழுத்தறிவிப்புக்காக 7 கோடி டாலருக்கு

துருக்கியின் சுவரொட்டி

செலவிடப்பட்டுள்ளதெனினும், இச்சிக்கலின் முழுப் பரிமாணமும் அண்மையில்தான் உணரப்பட்டுள்ளது. 1983 செப்டம்பர் 8இல் பன்னாட்டு எழுத்தறிவிப்பு நாள் மிகப் பெருமளவில் கொண்டாடபட்டதிலிருந்து இது தெரியவருகிறது. கனடாவில் கல்வி அமைச்சகத்தைச் சேர்ந்த முதியோர் கல்வித்துறை மட்டுமின்றி, தனியார் தொண்டு நிறுவனங்களும் எழுத்தறிவிப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

போலந்து: உலகப் போருக்கு அடுத்துப் பிந்திய ஆண்டுகளில் இங்கு எழுத்தறிவின்மை விகிதம் மிக அதிகமாக இருந்தது. 1951இல் அரசு தொடங்கிய எழுத்தறிவிப்பு மற்றும் பள்ளிக் கல்வி இயக்கத்தின் பலனாக எழுத்தறிவின்மை விகிதம் வெகுவாகக் குறைந்தது. 1981இல் 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் 27 இலட்சம் பேர் தொடக்கக் கல்வியை முடிக்காமலிருந்தார்கள். இந்த விகிதம் 1982—83இல் பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகளில் 0.34% பேர் மட்டுமே பள்ளியில் சேராமல் இருந்தனர்.

துருக்கி: இங்கு மிக அண்மையில்தான் (1981) தேசிய எழுத்தறிவிப்பு இயக்கம் தொடங்கப்பட்டிருந்தபோதிலும், இதனால் கணிசமான பலன்கள் விளைந்துள்ளன. 31,56,799 பேர் புதிதாக எழுத்தறிவு பெற்றுள்ளனர். இவர்களுள் ஏராளமான பெண்களும், வேளாண்மைத் தொழிலாளர்களும் சந்தை நகரக் குடிகளும் ஆதரவற்றவர்களும் அடங்குவர். எழுத்தறிவிப்பு இயக்கம் தொடங்குவதற்கு முன்பு 6 வயதுக்கு மேற்பட்டவர்களில் 69% பேர் எழுத்தறிவு பெற்றிருந்தனர். இன்று இந்த விகிதம் 74.8 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. பெண்களில் எழுத்தறிவு பெற்றோர் விகிதம் 53.8 சதவிகிதத்திலிருந்து 61.2 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. 1995இல் எழுத்தறிவின்மையை அடியோடு ஒழித்துவிடாலமெனத் துருக்கி நம்புகிறது.

இந்தியா:— இந்தியா பெரிய நாடாக இருப்பதால், எழுத்தறிவிப்புப் பணிகள் நீண்ட காலத்திற்கு முன்பே பரவலாக்கப்பட்டுள்ளன. மகாராஷ்டிரத்தில் 1961-க்கும் 1972-க்குமிடையில் நிறைவேற்றப்பட்ட கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 36,693 கிராமங்களில் முதியோரிடையே எழுத்தறிவின்மை அடியோடு ஒழிக்கப்பட்டது. சுமார் ஒரு கோடி முதியவர்கள் கல்வியறிவு பெற்றனர். இவர்களில் பாதி பேர் பெண்கள். இந்திய தேசிய மகளிர் இணையம், 9 மாநிலங்களில் ஏழை எளியோர் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் 1,500 எழுத்தறிவிப்பு மையங்களைத் தொடங்கியுள்ளது. வங்காள சமூகத் தொண்டு நிறுவனம் 8,700 முதியோர் கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது. இவர்கள் 1961-க்கும் 1974-க்குமிடையில் 1,05,000 பேருக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். மைய அரசின் கல்வி மற்றும் சமூக நல அமைச்சகத்தின் முதியோர் கல்வி இயக்கம், 1975இல் 3,00,000 பேருக்கு எழுத்தறிவிக்கும் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறது. இறுதியாக, 1978இல் ஐந்தாண்டு முதியோர் கல்வித் திட்டம் ஒன்றை 22 மாநிலங்களில் மைய அரசு தொடங்கியிருக்கிறது. 15—35 வயதுப் பிரிவைச் சேர்ந்த ஒரு கோடிப் பேருக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராமப்புறங்களிலுள்ள பெண்களுக்கும், சில பழங்குடி மக்களுக்கும், நகரங்களிலும் கிராமங்களி வாழும் ஏழை எளியவர்களுக்கும் எழுத்தறிவிப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

வியட்னாம்:—இங்கு 1945இல் எழுத்தறிவிப்பு இயக்கம் தொடங்கியபோது இங்குள்ள 2 கோடி மக்களில் 95% பேர் எழுத்தறிவற்றவர்களாயிருந்தனர். இவ்வியக்கம் தொடங்கியதுமே இதில் மக்கள் போரார்வம் காட்டலானார்கள். முதல் ஆண்டிலேயே 25 இலட்சம் பேருக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டது. அடுத்த 9 ஆண்டுகளில் மேலும் ஒரு கோடிப் பேர் எழுத்தறிவுபெற்றனர். 1950-க்குள் 12—50 வயது பிரிவைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலும் அனைவரும் எழுத்தறிவு பெற்றுவிட்டனர். நாட்டின் தென் பகுதியில் 1975இல் 40 இலட்சம் பேர் ஓழுக்கறிவில்லாதவர்களாக இருந்தனர். இவர்களுக்கு 1977-க்குள் எழுதப் படிக்கக் கறபிக்கப்பட்டது. இன்று பழங்குடிச் சிறுபான்மையினரிடையே எழுத்தறிவின்மையை ஒழிக்கத் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது,

சீனா: இந்நாட்டில், 1949இல் மக்கள் தொகையில் 80%பேர் எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர். கடந்த 32 ஆண்டுகளில் மேற்கொண்ட எழுத்தறிவிப்பு இயக்கத்தின் காரணமாக 12—40 வயதினரில் 12.8 கோடிப் பேர் எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டிருக்கின்றனர். இன்று நாட்டின் தொழிலாளர்களிலும் சுரங்கத் தொழிலாளர்களிலும் 90% பேர் தொடக்கப் பள்ளிக் கல்வியின் அளவுக்குக் கல்வி கற்றுள்ளனர். இந்தப் பிரிவினரில் 5%—7% பேர் மட்டுமே இன்று எழுத்தறிவின்றி இருக்கின்றனர். கிராமப் புறங்களில் வேளாண்மைத் தொழிலாளர்களில் இளந்தலை முறையினரில் 70% பேர் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டிருக்கின்றனர். தொழிலாளர்களுக்கும், உழவர்களுக்கும் அவர்களது பணி நேரத்திற்குப் பிறகு உயர் நிலைக் கல்வி போதிக்கப்படுகிறது.

தாய்லாந்து: இங்கு 1981இல் மக்கள் தொகையில் 14.5% பேர் எழுத்தறிவின்றி இருந்தனர். இவர்களில், தொடக்கப் பள்ளியில் நான்காண்டுகள் பயின்று பின்னர் எழுத்தறிவின்மையில் வீழ்ந்துபட்ட ஏராளமான மாணவர்களும் அடங்குவர். 1982இல் தொடங்கப்பெற்ற ஐந்தாவது தேசிய மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், எழுத்தறிவின்மையை 1986-க்குள் 10 சதவிகிதமாகக் குறைத்துவிட அரசு குடியிலக்கு நிருணயித்துள்ளது. 1986இலிருந்து தொடக்கக் கல்வியைக் கட்டாயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, ஆசிரியத் தொண்டர்கள், ஆசிரியர் ப்யிற்சி நிறுவன மாணவர்கள், பௌத்த பிக்குகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன், ஆறு புறப்பள்ளி எழுத்தறிவிப்புத் திட்டங்களும் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள், இந்நாட்டின் பெரிய சிறுபான்மைக் குழுமங்களுக்குப் பயனளிக்கக் கூடியனவாகும்.

தமிழில்: இரா. நடராசன்

'நான்காம் உலகி'ல் எழுத்தறிவின்மை

செல்வ நாடுகள் கவலைதரும் ஒரு நிலையை உணர்கின்றன

அலி ஹமதாஷ்

மூன்றாம் உலகில் மட்டும்தான் எழுத்தறிவின்மை நிலவுகிறது எனக் கருதுவது தவறு. பல தலைமுறைகளுக்கு அனைவருக்கும் கல்வி அளித்துவரும் பல நாடுகள், தாங்கள் அடியோடு ஒழித்து விட்டதாக கருதிவரும் இந்தப் பிரச்சினை, பல ஆண்டுகளாக வளங்கொழிக்கும் நாடுகளில்கூட அபாயகரமான அளவுக்குப் பரவி வருவது கண்டு அதிர்ச்சியடைந்துள்ளன.

தொழில் வளமடைந்த நாடுகளிலுள்ள எழுத்தறிவில்லாதவர்களின் இன்னல்கள், மூன்றாம் உலகிலுள்ளவர்களின் இன்னல்களைவிட அதிகம்; சில இடங்களில் பல மடங்கு மிகுதி. மூன்றாம் உலக நாடுகளில், எழுத்தறிவு குறைவாக இருந்தாலும், அங்குள்ள மக்கள் நினைவாற்றலைப் பெருக்குவதற்கு வாய்மொழி மரபினை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திறன் எழுத்தறிவு அதிகம் உள்ள நாடுகளில் இல்லை. எழுத்தறிவு மிகுதியாகவுள்ள நாடுகளில், எழுத்தறிவில்லாதவர்கள் யாருடனும் இணைந்து வாழ முடியாமல் தனித்து ஒதுங்கியிருக்க வேண்டியிருக்கிறது. இதனால் ஏற்படும் இடர்ப்பாடுகள் ஏராளம்.

பொருளாதாரத்திலும் தொழில்நுட்பத்திலும் முன்னேறியுள்ள ஒரு சமுதாயத்தில். எழுத்து வழிச் செய்தித் தொடர்பு மேலோங்கியிருக்கிறது. அங்கு அச்சடித்த சொற்கள்தாம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. எனவே, அங்குஎழுதப் படிக்கவும் கணக்கிடவும் தெரிந்திராத ஒருவர் அன்றாட வாழ்வில் எல்லா இடங்களிலும் தாழ்வு நிலையை அடைகின்றார். கடைகளிலும், பேருந்துகளிலும், வங்கியிலும், அஞ்சலகத்திலும் அவர்கள் படும் இடர்ப்பாடு அளவிறந்தது. இதனாலேயே அவர்கள் தங்கள் குடியியல் உரிமைகளைப் பயன்படுத்தவோ கடமைகளை ஆற்றவோ முடிவதில்லை; வேலை வாய்ப்புக் கிடைப்பதும் அரிதாக இருக்கிறது. எழுத்தறிவில்லாமல் வேலையின்றி இருக்கும் ஒருவர், வேலை தேடித் தரும் நிலையத்திற்கு விண்ணப்பிக்கக்கூட விரும்புவதில்லை. ஏனெனில், அவருக்கு அதற்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதற்குக்கூடத் தெரியாது. எழுத்தறிவில்லாத் தொழிலாளர், தொழிற்சங்க நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட முடிவதில்லை.

தொழில் வளமடைந்த நாடுகளில், வாழ்வில் சிக்கல்கள் எதிர்ப்படும்போது அதனால் பாதிக்கப்படுவதும் எழுத்தறிவில்லாதவர்கள்தாம். தெருக்களின் பெயர்களையும், பாதாள இரயில் நிலையங்களின் பெயர்களையும், பேருந்தும், டிராம் வண்டிகளும் செல்லும் இடங்களின் பெயர்களையும் இவர்களால் படித்தறிந்து கொள்ள முடியாததால், இவர்கள் நகருக்குள்ளேயே பல்வேறு இடங்களுக்குச் செல்ல இயலவில்லை; பண்டகசாலைகளில் விலைச் சீட்டுகளைப் படித்தறிய முடியவில்லை; மளிகைக் கடையிலும், இறைச்சிக் கடையிலும் உணவுப் பொருள்களின் விலைகளைக் கண்க்கிட முடியவில்லை;

நிழற்படம்: © ஃப்ரான்சுவா காஃப்னர், பாரிஸ்



நிழற்படம்: ஐ.எல்.ஓ. ஜெனிவா

அலி ஹமதாஷ் எழுத்தறிவுப் பணி வல்லுநர்; யுனெஸ்கோவின் எழுத்தறிவு, முதியோர் கல்வி, கிராம வளர்ச்சிப் பிரிவின் அலுவலர். அல்ஜீரியாவின் முன்னாள் அரசாங்க முதுநிலைப் பணியாளர் (1962--1968). இப்போது லாவோ மக்கள் குடியாட்சிக் குடியரசு எனப்படும் நாட்டின் எழுத்தறிவு வல்லுநராகவும், ஐவரி கோஸ்டின் தொலைக்காட்சிக் கல்வி நிகழ்ச்சி அறிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

எழுத்தறிவின்மை மூன்றாம் உலகில் பரவலாக இருப்பினும், உலகின் செல்வமிகு நாடுகளிலும் இப்பிரச்சினை வளர்ந்து வருகின்றது. அங்கு "நான்காம் உலகம்" எனப்படும் தாழ்நிலைச் சமூகப் பிரிவுகளிலும், பின்தங்கிய உள்நகர மாவட்டங்களிலும், இடம்பெயர்ந்து , செல்லும் தொழிலாளரிடையேயும் அவர்கள் குடும்பங்களிலும், குறைந்த வருமானமுள்ள கிராமவாசிகளிடையேயும் இது பரவலாகக் காணப்படுகின்றது.

ஆட்சியாளர்களுடனும், பள்ளி அதிகாரிகளுடனும், சட்டத் துறையினருடனும் எவ்விதத் தொடர்பும் கொள்ள இயலவில்லை. பள்ளியில் குழந்தையைச் சேர்ப்பதும், மருத்துமனையில் நோயாளியைச் சேர்ப்பதும், அதிகாரிகளுக்குச் சலுகை கோரி விண்ணப்பிப்பதும் இவர்களுக்கு இயலாத ஒரு பணி.

எழுத்தறிவில்லாதவர், மதிக்கப்படுவதில்லை. அவருடைய குடும்பத்தினர்கூட அவரை மதிப்பதில்லை. தங்களுடைய பள்ளிப்பணிகளில் தங்களுக்கு உதவி புரியாத எழுத்தறிவில்லாத பெற்றோர்களை, அவர்களின் குழந்தைகள்கூட இழிவாகக் கருதுகிறார்கள்; அவர்களுக்குச் கீழ்படிவதுமில்லை. எழுத்தறிவில்லாதவர்களில் பலர். தாங்கள் எழுத்தறிவில்லாதிருப்பதற்காக வெட்கப்படுகிறார்கள்; அதனால், தாங்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் என்ற உண்மையை மூடி மறைக்கிறார்கள். இந்த வெட்கம், எழுதப்படிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும்போது கூட அவர்களை செயலிழக்கச் செய்கிறது. சில சமயம் எழுத்தறிவில்லாதவரின் இயற்கையான அறிவுத்திறன் பயன்பீடுத்தப்படாமல், வளர்க்கப்படாமல் போய் விடுகிறது. நவீனத் தொழில்நுட்பங்கள் , வந்த பிறகு, எழுத்தறிவில்லாதவர்கள் புறக்கணிக்கப்படுவது இன்னும் அதிகமாகிவிட்டது.

பணக்கார நாடுகளிலும், வளங்குன்றிய நாடுகளிலும், எழுத்தறிவின்மையும் வறுமையும் ஒன்றோடொன்று பிணைந்து, ஒன்று மன்றொன்றுக்குக் காரணமாக இருக்கின்றன. குறைந்த வருமானம், குறைந்த கல்வி, குறைந்த பள்ளி வசதிகள், வறுமை நிறைந்த பண்பாட்டுச் சூழல், நோய், சீரற்ற வாழ்க்கை நிலைமைகள் ஆகிய காரணிகளும் எழுத்தறிவின்மையுடன் தொடர்புடையதாக இருக்கின்றன. சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்கள், குறிப்பாக, நகரங்களிலுள்ள சேரி வாசிகள், குடியேறிய தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பங்கள், சில சிறுபான்மையினர் ஆகியோர் "நான்காம் உலகத்தவர்" என அழைக்கப்படுகின்றனர். வேலையற்றவர்களும், எப்போதாவது வேலை செய்பவர்களும், தகுதிகள் எதுவும் தேவைப்படாத பணிகளில் இருப்பவர்களும், சமூகப் பாதுகாப்பு மூலம் வாழ்க்கை நடத்துபவர்களும் வாழ்க்கைத் தரம் மிகத் தாழ்ந்துள்ள சில ஊரக மக்கள் குழுமங்களும், குடும்பச் செலவைச் சரிகட்டுவதற்குக் குழந்தைகளின் சம்பாத்தியத்தை எதிர்பார்க்கும் குடும்பங்களும், சுருங்கக்கூறின், சமூக—பொருளாதார ஏணியில் அடிப்படியில் உள்ளவர்கள் அனைவரும் இந்த வகையில் அடங்குவர்.

இன்றையப் பொருளாதாரச் சூழ்நிலையில், வேலை வாய்ப்புக்கு உயர் கல்வி உத்தரவாதமளிக்கவில்லையென்றாலும், வேலையற்றவர்களில் பெரும்பாலானவர்கள் எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். கைதிகளிலும் எழுத்தறிவில்லாதவர்களே அதிகம். வெளியுலகுடன் தொடர்பு கொள்வதற்கு

நிழற்படம்: எச். டபிள்யூ சில்வெஸ்டர் ராஃபோ, பாரிஸ்

தொழில் மயமான நகரங்களில் சிறப்பங்காடிகளி 5 விலைச் சீட்டுகளை ஒப்பு நோக்குதல் அன்றாட அலுவல்களில் ஒன்றாக இருக்கிறது. இதற்கு எழுதிய அல்லது அச்சிடப்பட்ட எழுத்தை வாசிக்கத் தெரியவேண்டும்.

எழுத்தறிவு இன்றியமையாததாக இருப்பதால், எழுத்தறி வின்மையின் இடர்ப்பாடுகளை இவர்கள் அனுபவிக்கிறார்கள்.

நீண்டகாலத்திற்கு முன்பே கட்டாயக் கல்வியைப் புகுத்தி, அதனால் எழுத்தறிவின்மைச் சிக்கல் தீர்க்கப்பட்டுவிட்ட தாகக் கருதும் தொழில்வளமடைந்த நாடுகள் பல, மக்கள் தொகைக் கணிப்புப் படிவங்களிலிருந்து எழுத்தறிவின்மை பற்றிய வினாவையே நீக்கின. எழுத்தறிவின்மை பற்றிய வினா இப்படிவங்களில் இடம் பெற்றிருக்கும் நாடுகளில்கூட, இது குறித்து நம்பகமாகப் பதில்கள் கிடைப்பதில்லை. இதற்கு, எழுத்தறிவில்லாதவர்களில் பெரும்பாலோர் உளவியல் காரணத்தாலும், தங்களுடைய வேலை போய்விடுமோ என்ற அச்சத்தினாலும், தங்களுடைய எழுத்தறிவின்மையை மூடி மறைப்பதே காரணமாகும்.

கல்வி பற்றிய புள்ளிவிவரங்களை பன்னாட்டளவில் திடப் படுத்தும் நோக்கத்துடன், யுனெஸ்கோ பொதுப் பேரவையின் 10ஆவது கூட்டத்தில் எழுத்தறிவில்லாதவர் யார் என்பதற்குப் பொருள் வரையறை செய்யப்பட்டது. ''ஆள் எவரும், தமது அன்றாட வாழ்வு தொடர்பான உண்மைகள் பற்றிய சுருக்க மான, எளிய உரையினைப் புரிந்து கொள்ளவும், எழுதவும், படிக்கவும் இயலாதவராக இருக்கிறார் என்றார். அவர் எழுத் தறிவில்லாதவர் ஆவார்''. இந்த பொருள் வரையறை 1978இல் திருத்தியமைக்கப்பட்டது. இதன்படி ''தான் சார்ந்திருக்கும் குழுமத்தின் மற்றும் சமுதாயத்தின் சீரான இயக்கத்திற்கும் தன்னுடைய சொந்த முன்னேற்றத்திற்கும் சமுதாய மேம்பாட் டிற்கும் படிப்பறிவையும், எழுத்தறிவையும் கணித அறிவை யும் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு அவரை இயல்விப்பதற் கும், தேவையான நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதிருக்கிற ஆள் செயல்முறையில் எழுத்தறிவில்லாதவர் ஆவார்'.

செயல்முறைக்கான வகைமுறை நாட்டுக்கு நாடு வேறுபடு கிறது. ஓரிடத்தில், சில அறிவுரைகளை அல்லது ஒரு சுவ ரொட்டியைப் படிப்பதற்கு அறிந்திருந்தாலே போதும். இன் னொரு நாட்டில் சிக்கலான வினாக்களைக் கொண்ட ஒரு வினாத்தாளை நிரப்ப முடியாதவர் அல்லது ஓரளவு தொழில் நுட்ப இயல்புடைய எழுத்து வடிவிலான அறிவுரைகளைப் படித்து அறிந்துகொள்ள இயலாதவர். எழுத்தறிவில்லாதவராக கருதப்படுகிறார். சில நாடுகளில், தொடக்கக் கல்வியை ஐந்து ஆண்டுகள், ஏன் ஒன்பது ஆண்டுகள் படித்தவர்கூட எழுத்தறி வில்லாதவர் என்றே கருதப்படுகிறார். ஆய்விலுள்ள நாடுகளில் எழுத்தறிவுக்குக் தொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பொருள் வரையறைகளையும் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தேவைப் படும் கல்வித் தர அளவுகளையும் கருதும்போது புள்ளிவிவரங் கள் வெகுவாக மாறுபடுகின்றன.

யுனெஸ்கோ புள்ளிவிவர அலுவலகம், 1982 ஜூலை நில வரப்படி எழுத்தறிவில்லாதவர் பற்றிய புள்ளிவிவரங்களை எடுத்துள்ளது. தாங்கள் எழுத்தறிவில்லாதவர்கள் என்பதை ஒப்புக்கொண்டவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தப் புள்ளி விவரம் அமைந்துள்ளது. இந்த மதிப்பீடுகளின்

சோவியத் ரஷ்யாவில் 1917ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிறகு எழுத்தறிவை ஒழிக்கும் முயற்சி புதிய அரசின் ஒரு முக்கிய பணியாக இருந்தது. இந்த 1923ஆம் ஆண்டுச் சுவ ரொட்டி ''பெண்ணே' எழுத வாசிக்க கற்றுக் கொள்'' எனும் மேல் தலைப்புடையது. ''இளம் அன்னையே, நீ எழுத்தறிவு பெற்றிருந்தால், எனக்கு உதவி செய்'' என்பது கீழ் தலைப்பு.

படி, (சோவியத் ரஷ்யா நீங்கலாக) தொழில் வளமடைந்த ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா, ஜப்பான், தென் ஆஃப்ரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகியவற்றில் 1980இல், 15வயதுக்கு மேற்பட்ட மக்களில் 2.5% பேர்—அதாவது 2.25 கோடி பேர்—எழுத்தறிவில்லாதவர்கள். இவர் களில் பெரும்பாலோர் வயது முதிர்ந்தவர்கள். ஏனெனில், 3% பேர் மட்டுமே 15-19 வயது பிரிவைச் சேர்ந்தவர்கள்; 20% பேர் 20-44 வயது பிரிவைச் சேர்ந்தவர்கள்; 77% பேர் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள். எழுத்தறிவின் அளவும் நாட் டுக்கு நாடு வேறுபடுகிறது. மத்தியதரைக்கடல் வடிநிலப்பகுதி நாடுகளில் பெரும்பாலானவற்றில் எழுத்தறிவின்மை

விகிதம் தென் ஐரோப்பிய நாடுகளைவிட அதிகம். தென் ஐரோப்பிய நாடுகளில் எழுத்தறிவின்மை விகிதம் சராசரியாக 8.1%. இந்நாடுகளில் தனித்தனியே இவ்விகிதம் 4% முதல் 20% வரை வேறுபடுகிறது.

பெரும்பாலான நாடுகளில், எழுத்தறிவின்மை விகிதம் பெண்களிடையே அதிகமாக இருப்பது மற்றொரு முக்கிய அம்சமாகும். சில இடங்களில் ஆண்களைவிடப் பெண்களிடம் எழுத்தறிவின்மை இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகம் நிலவுகிறது.

எழுதவும் படிக்கவும் அடிப்படை அறிவைப் பெற்றிருந்து, அந்த அறிவைப் பயன்படுத்தாத காரணத்தாலும், மேலும் வளர்த்துக் கொள்ளாத காரணத்தாலும் கற்றதை மறந்துவிட்டு மீண்டும் ,எழுத்தறிவின்மைக்குச் சென்றுவிட்டவர்கள் இந்தக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

ஒவ்வொரு சமுதாயத்தின் பொருளாதார, தொழில் நுட்ப, பண்பாட்டுச் சூழலையும், அதற்குத் தேவைப்படும் அடிப்படை பகுப்பறிவின் அளவையும் பொறுத்து செயல்முறை எழுத்தறி

நிழற்படம்: ஐ. எல். ஓ. ஜெனீவா

''அய்த் ஆ துத் தேத்ரெஸ் கார் மோந்த' எனும் பன்னாட்டு இயக்கம் யுனெஸ்கோவின் ஆதரவுடன் நடத்திய ''தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளில் எழுத்தறிவின்மையும் 'வறுமையும்'' எனும் அண்மை ஆய்வின்போது பேசிய ஒரு சிறுவன் ''அப்பா என்னை அழைத்துச்செல்ல வந்தபோது அவரைப் பார்த்து எல்லோரும் கேலி செய்வார்கள. பள்ளிக்கூடத்தைப் பற்றி அதுதான் என் நினைவிலிருக்கிறது' என்றான்.

வின்மை வேறுபடுகிறது. உதாரணமாக, பிரிட்டனில் ஒன்பது வயதுக் குழந்தையின் கல்வி நிலைக்கும் குறைந்தவர்கள் எழுத்தறிவில்லாதவர்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி, அங்கு 1979 இல் எழுத்தறிவில்லாதவர்களின் எண்ணிக்கை 20 இலட்சம். கனடாவில், ஆங்கிலம் பேசும் பகுதிகளில், எட்டாம் வகுப்புக்குக் குறைந்த கல்வியுள்ளவர்கள் அனைவரும் எழுத்தறிவில்லாதவர்களாகக் கருதப்படுகின்றனர்; கியூபெக்கில் ஐந்தாம் வகுப்புக்குக் குறைவாகப் படித்தவர்கள் எழுத்தறிவில்லாதவர்கள். யுனெஸ்கோவிற்கான கனடா தேசிய ஆணையம் 1983 இல் நடத்திய ஆய்வின்படி, கனடியர்களில் 5.5% பேர் (8,50,000) ஐந்தாம் வகுப்புக்குக் குறைவாகப் படித்தவர்கள்; 28.4% பேர் (44,00,000) ஒன்பதாம் வகுப்புக்குக் குறைவாகக் கல்வி கற்றவர்கள். இவர்கள் அனைவருமே தொழில் வளமடைந்த சமுதாயத்தில் வாழ்வதற்குத் தேவையான கல்வி பெறாதவர்கள் எனக் கருதப்படுகின்றனர். போலந்தில் மிக அதிக அளவு எழுத்தறிவின்மை நிலவியது. இந்த விகிதத்தைக் குறைப்பதற்காக 1951இல் தீவிர எழுத்தறிவிப்பு இயக்கம் தொடங்கப்பெற்றது. இதன் பிறகும் அங்கு 1981இல் 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் 27 இலட்சம் பேர் அடிப்படைக் கல்வியை முடிக்காதவர்களாக இருந்தனர்.

அமெரிக்காவில் 1970இல் 16 வயதுக்கு மேற்பட்ட 1.85 கோடி அமெரிக்கர்கள் செயல்முறை எழுத்தறிவில்லாதவர்களாக இருந்தனர். அங்கு நாளிதழ்களைப் படித்தல், அதன் உள்ளடக்கம் பற்றிய வினாக்களுக்கு விடையளித்தல், தொலைபேசித் தகவல் தொகுப்பைப் பயன்படுத்துதல், வேலை விண்ணப்பங்கள், சமூகப் பாதுகாப்பு விண்ணப்பங்கள், வங்கிக் கணக்குப் படிவங்கள் முதலியவற்றைச் சரியாக நிரப்புதல், காசோலை எழுதுதல், பேருந்துக் கால அட்டவணையைப் படித்தறிந்து கொள்ளுதல் ஆகிய திறன்கள் இல்லாதவர்கள் செயல்முறை எழுத்தறிவில்லாதவர்களாகக் கருதப்படுகின்றனர். 1976இல் நடத்திய ஆய்வின்படி ஆங்கிலம் பேசும் அமெரிக்கர்களில் 15%—20% பேர் எழுத்தறிவில்லாதவர்களாக இருந்தனர். செயல் முறை எழுத்தறிவில்லாதவர்களின் எண்ணிக்கை 2.3 கோடியை எட்டியதும், இந்தச் சிக்கல் செய்தித்தொடர்புச் சாதனங்கள் மற்றும், அமெரிக்க மக்களின் கவனத்தைக் கவரலாயிற்று. இந்தத் தொகை ஆண்டுக்கு 23 இலட்சம் என்ற விகிதத்தில் அதிகரித்து வருவதாக இப்பொழுது கணக்கிடப்பட்டுள்ளது.

ஃபிரான்சில் தேசிய அளவில் இது குறித்து ஆய்வு எதுவும் நடத்தப்படவில்லை. எனினும், அண்மை ஆண்டுகளில் சில தொழிலாளர் குழுமங்களிடையே சில ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. பாரிசின் புறநகர்ப்பகுதியாகிய எஸ்ஸனில் 1976இல் 6000 குழுமங்களிடையே நடத்திய ஆய்வில் ஆண்களில் 47% பேரும். பெண்களில் 51% பேரும் எழுத்தறிவிலலாதவர்களாக இருப்பது தெரிய வந்துள்ளது. 78 தொழிலாளர் குடும்பங்களிடையே நடத்திய ஆய்வில், ஆண்களில் 27% பேரும், பெண்களில் 30% பேரும் எழுத்தறிவில்லாதவர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஆணையம் வெளியிட்டுள்ள மற்றொரு ஆய்வில் பெல்ஜியத்திலும், லக்சம்பர்கிலும் சில நகர்ப்புறங்களில் எழுத்தறிவின்மை நிலவுவது தெரிய வந்துள்ளது. லீகிலுள்ள பெல்ஜியர்களில 5% பேரும். எழுத்தறிவில்லாதவர்கள். இவ்விரு நகரங்களிலுமுள்ள குடியேறியவர்களில் 20%பேர் எழுத்தறிவற்றவர்கள். பெல்ஜியத்தில் 1979இல் 0.4%பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர்; 15%பேர் விடுப்பு விண்ணப்பத்தைக் கூடச் சரியாக நிரப்ப முடியாதிருந்தனர். ஃபிரான்சில் படைக்கு ஆளெடுக்கப்பட்டவர்களில் 0-7%—0.9% பேர் எழுத்தறிவில்லாதவர்கள்; டென்மார்க்கிலும் சுவீடனிலும் 10%—20% பேரும் எழுத்தறிவற்றவர்கள் ஒரே நாட்டிலுங்கூட இந்த விகிதம் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. ஏழை எளியவர்கள் வாழும் பகுதிகள்தாம் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கிரீசில் ஏதென்சில் எழுத்தறிவில்லாதவர்களின் விகிதம் 7.6%; திரேசில் இந்த விகிதம் 27.4% ஸ்பெயினிலுள்ள பர்காஸ் பகுதியில் வயது வந்தவர்களில் 2.5%பேர் எழுத்தறிவில்லாதவர்கள்; அங்கேயே கிரேனடா பகுதியில் இந்த விகிதம் 13.5%(1975), அமெரிக்காவில் 5000 டாலருக்குக் குறைவாக வருமானம் உடைய மக்கள் தொகையில் 40% பேர் செயல்முறை எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள்; 15,000 டாலருக்குக் மேல் வருமானமுடையவர்களிடையே இந்த விகிதம் 8% மட்டுமே.

தொழில் வளமடைந்த நாடுகள் சிலவற்றில் மட்டுமே உள்நாட்டு மக்களுக்கும், குடியேறிய மக்களுக்குமான விரிவான எழுத்தறிவிப்பு மற்றும் கல்விக்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் உறுதிப்பாடு வேண்டும். பெரும்பாலான திட்டங்கள், அவை எந்த அளவில் இருந்தாலும், தனிப்பட்ட அமைவனங்களால் தொடங்கப்பட்டுள்ளன. சில நேர்வுகளில், இவை தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்டாலும், பெரும்பாலும் குறிப்பிட்ட வட்டாரங்களிலேயே செயற்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களுக்குப் பெரும்பாலும் ஆட்சியாளர்களின் ஆதரவு கிடைப்பதில்லை. எழுத்தறிவின்மையை ஒழிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை ஆட்சியாளர்கள் உணர்வார்களாயின், அவர்கள் இத்திட்டங்களுக்கு முன்னுரிமையளிப்பார்கள். இதற்கு எழுத்தறிவற்றவர்களைக் கண்டறிவதும்; அவர்களின் சூழ்நிலைகளை அறிந்துகொள்வதும், எழுத்தறிவின்மையின் பல்வேறு வடிவங்களை நன்கு அறிவதும் இன்றியமையாததாகும். இறுதியாக இதற்கென சட்ட, நிருவாக, கல்விமுறை நடவடிக்கைகளை எடுப்பதற்கும், பொருள், நிதி மற்றும் ஆள்பல வசதிகளைப் பெருக்குவதற்கும் அரசியல் முடிவுகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

தமிழில்: இரா. நடராசன்

அயல் நிலத்தில் சிறுவர்

குடிபுகுந்த இரண்டாம் தலைமுறையினரின் பிரச்சினை

குடிபுகுந்த இரண்டாம் தலைமுறையினர் பலர் வாழும் பண்பாட்டு அயல் நிலத்தை ஒழிப்பதற்குச் சில நாடுகள் முயன்று வருகின்றன. மேலே: லியோன் நகரின் (ஃபிரான்ஸ்) அருகிலுள்ள ஊலின் பள்ளியில் இளம் இசைவாணர்கள் ஆக்கத்திறன் பயிற்சியில் பங்கு பெறுகின்றனர். 1983இல் அந்நகரின் பள்ளிகளில் கலையையும் கலைஞரையும் அறியும் நிகழ்ச்சிகளின்போது இது நடைபெற்றது. இங்குகாணப்படும் பள்ளியில் 97% மாணவர், குடிபுகுந்தோரின் குழந்தைகள்

நிழற்படம்: © பாப்புலார், ஊலின், ஃபிரான்ஸ்

நிழற்படம்: © பதிப்புரிமை பெற்றது

"குடிபுகுந்தோரின் குழந்தையைப் பொருளாதாரக் கொள் கையின் விளைவாகக் கருதாமல், ஓர் ஆளாகச் சமூகம் கருத வேண்டும். அவன் உண்மையிலேயே ஓர் ஆள். அவனுக்குத் திறமைகள் உண்டு. அவன் ஒரு ஆளாக இருக்கும் உரிமை பெற்றிருப்பதுபோல் கல்வியும் பயிற்சியும் பெறும் உரிமையும் பெறவேண்டும்".



நிழற்படம்: © எ. மூனோ தெ பார்ப்லே, பாரிஸ்

"எழுத்தறிவற்றோர் ஒதுக்கப்படுகின்றனர்; ஏனெனில் அவர்களால் வாசிக்க முடியவில்லை. அதுபோல் அவர்கள் ஒதுக்கப்படுகின்றனர்," என்று அண்மையில் வெளியான 'பிரான்ஸில் எழுத்தறிவற்றோர்' எனும் ஃபிரெஞ்சு அரசாங்க அறிக்கை கூறுகின்றது. மேலே: பாரிஸில் எழுத்தறிவுப் பாடம்.

சோனியா அபதிர் ரம்ஸி

ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில், பல்வேறு நாடுகளிலிருந்து வந்து குடியேறிய பல்வேறு பண்பாடுகளைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் இருக்கிறார்கள். ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் இவர்களின் தொகை 7% ஃபிரான்சில் 8%. எனவே அயல்நாட்டு மக்களை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகளில் வேறுபாடுகள் நிரந்தரமாகச் சகவாழ்வு நடத்த வேண்டியுள்ளது. கூடிவாழவேண்டிய குழுமங்கள் ஒன்றையொன்று புறக்கணிக்கவோ எதிர்க்கவோ செய்யும்போது இந்தச் சகவாழ்வில் பூசல்கள் தோன்றுகின்றன.

குடியேறியுள்ளவர்களில் 85% பேர் தொழிலாளர்களேயாகும். இவர்களுடைய பணி நிலைமைகள் மிகவும் கடுமையாக உள்ளன. இவர்களில் பெரும்பான்மையோர் எழுத்தறிவில்லாதவர்கள். மேலும், இவர்கள் தங்களுடைய சொந்தப் பண்பாட்டுச் சூழலிலிருந்து வெளியேறி, முற்றிலும் புதிய பண்பாட்டுச் சூழலில் வாழ்கின்றவர்கள். 75%பேர் குடியேறியவர்களேயாவர். இவர்கள் மோசமான பொருளாதார நிலையில் எப்பொழுதும் சட்டப் பாதுகாப்பின்றி வாழவேண்டியிருக்கிறது. தொழில் வளமடைந்த நாகரிகம், குடியேறியவர்களை உற்பத்திக்கான சாதனங்களாகவே கருதுகின்றது. வேறுபட்ட வாழ்க்கை நடத்த அவர்களுக்குள்ள உரிமை மறுக்கப்படுகிறது; அவர்களுடைய பண்பாடுகளும் புறக்கணிக்கப்படுகின்றன. இதனால், குடியேறியவர்களும் அவர்களும் சமூக வாழ்வில் மிகவும் அடிமட்டத்திற்குத் தள்ளப்படுகின்றனர். எனினும், இரண்டாம் தலைமுறைக் "குடியேறியவர்கள்" எங்கிருந்தும் வந்து குடியேறியவர்கள் அல்லர்;

சில நாடுகளில், குடியேறியவர்க்ளுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு குடியுரிமை அளிக்கப்படுகிறது. ஆனால், மற்ற நாடுகள், குடியேறியவர்கள் எவ்வளவு நீண்டகாலம் எவ்வளவு நீண்டகாலம் வசித்து வந்தாலும் அவர்களுக்கு குடியுரிமையோ, சமூகப் பாதுகாப்போ வழங்குவதில்லை. அங்கு அவர்களின் நிலைமை எப்போதுமே நிலையற்றதாகவே உள்ளது. இதனால் இரண்டாம் தலைமுறையினரிடத்தில் பல விளைவுகள் ஏற்படுகின்றன. பெல்ஜியம், ஃபிரான்ஸ், ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு, சுவீடன், சுவிட்சர்லாந்து ஆகிய ஐந்து ஐரோப்பிய நாடுகளிலும் 25 வயதுக்குட்பட்ட 38,00,000 பேர் குடியுரிமை பெறாமலிருக்கின்றார்கள்.

முன்பு குடியேற்றங்களாக இருந்த நாடுகளின் மக்களுடைய பண்பாடுகளை செய்தித் தொடர்புச் சாதனங்கள் இனவெறி காரணமாக இழிவு படுத்துவதால், குடியேறியவர்கள் மேலும் ஒதுக்கப்படுகின்றார்கள். இத்தாலி, போர்ச்சுகல், ஸ்பெயின் போன்ற நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களின் பண்பாடு ஓரளவு பொதுவானதாக இருப்பதால் அவர்கள் அதிகமாக ஒதுக்கப்படுவதில்லை.

இஸ்லாமிய நாடுகளிலிருந்துவந்து குடியேறியவர்கள், தங்களுடைய தாயகப் பண்பாட்டிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள், இவர்களில் முதல் தலைமுறையினர். தங்களுடைய தனிப்பண்பாட்டுக்கும், நெறிமுறைகளுக்கும, சமய நம்பிக்கைகளுக்கும் பழக்கப்பட்டுவிட்டதால் புதிய

சோனியா அபதிர் ரம்ஸி எகிப்திய அம்மையார். இவர் அல்ஜியர்ஸ் பல்கலைக்கழக ஆசிரியர். 'லா ஃபாம் ஆராப் ஒ மாக்ரெப் எத்தோ மாஷ்ரெக்' எனும் (அச்சிலுள்ள) நூலை எழுதியுள்ளார். யுனெஸ்கோ வெளியிட இருக்கும் 'லா ஃபாம் எலா போலித்திக்' எனும் தொகுப்பு நூலை எழுதுவதிலும் பங்கு பெற்றுள்ளார்.

சூழலில் ஏற்படும் ''அபாயங்களை'' ஓரளவு எதிர்த்து நிற்கின்றார்கள். ஆனால், இரண்டாம் தலைமுறையினர் இரட்டைப் பண்பாட்டு வாழ்வுக்கு உள்ளாக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதனால், குடியேறிய மக்கள் அச்சமும், குழப்பமும் அடைந்திருக்கிறார்கள். பாதுகாப்பின்மையும். ஏற்றத்தாழ்வுகளும் எழுத்தறிவைப் பெறுவதில் இவர்களுக்கு ஆர்வத்தைக் குன்றச் செய்கிறது. இதனால், குடியேறியவர்களிடையே படிப்பறிவின்மை பெருகி, அவர்ளுடைய வேலை வாய்ப்புகள் குறைகின்றன.



குடிபுகுந்த தொழிலாளரின் நாடக விழா பாரிஸில் நிகழ்ந்தபோது காட்டப்பெற்ற நாடகக் காட்சி.

நிழற்படம்: சால்காடோ © மாக்னம், பாரிஸ்

யுனெஸ்கோவின் சார்பில் 1982மே 45-இல் லக்சம்பர்கில் நடந்த குடியேறியோர் சிக்கல் பற்றிய கருத்தரங்கில் பங்குகொண்ட ஐரோப்பிய சமுதாயங்களின் சார்பாளர், ''குடியேறியோர் குழந்தைகளில் 60% பேர் பள்ளிகளிலிருந்து நின்று விடுகின்றனர்'' என்றார்.

இந்தச் சிக்கலுக்குத் தீர்வுகாண அண்மை ஆண்டுகளில் பல நாடுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெல்ஜியத்தில் லிம்பர்க் மாநிலத்தில் ஐரோப்பிய சமுதாயத்தின் ஆதரவில் கடந்த ஆறு ஆண்டுகளாகக் குடியேறிய குழந்தைகளுக்கு அவர்கள் சொந்த மொழியும் பண்பாடும் கற்பிக்கப்படுகிறது. உள்நாட்டு ஆசிரியர்களுக்கும், அயல் நாட்டு ஆசிரியர்களுக்குமிடையே ஒத்துழைப்பும் ஏற்படுத்தப்படுகிறது. இவர்கள் சந்தித்து, பள்ளிக் கல்வித் திட்டங்களை வகுக்கிறார்கள். இந்தத் திட்டம், குடியேறியவர்களின் குழந்தைகள் பெருமளவு கல்வியறிவு பெறுவதற்கு துணை செய்கிறது. ஆனால், இந்தப் பரிசோதனை இன்னும் பெல்ஜியம் முழுவதற்கும் விரிவுப்படுத்தப்படவில்லை. குடியேறியவர்களின் குழந்தைகளில் 10%—16% பேர் மட்டுமே இதனால் பயனடைந்து வருகிறார்கள்.

நெதர்லாந்தில் அயல்நாட்டினருக்காக டச்சு மொழியில் தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு அவர்களுடைய சொந்தப் பண்பாடு குறித்தும் கற்பிக்கப்படுகிறது. குடியேறியவர்கள் மிகுதியாக வாழும் பகுதிகளில், பள்ளிகளில் இவர்களுக்கெனத் தனி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்த ஆசிரியர்களில் 80% பேர் குடியேறியவர்களிலிருந்தே நியமிக்கப்படுகின்றனர்.

ஃபிரான்சில், குடியேறியவர்களின் குழந்தைகளின் கல்விக்காக 11 பயிற்சி மற்றும் தகவல் மையங்களைக் கல்வி அமைச்சகம நடத்தி வருகிறது. இந்த மையங்கள். பெரிய நகரங்களிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் ஆண்டுதோறும் 1000 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. தொடக்கப்பள்ளிகளில், குடியேறிவர்களின் குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழியைக் கற்பிக்கவும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த வகுப்புகளில் 1979—80இல் 33,600 மாணவர்கள் கல்வி பயின்றார்கள்; அதே ஆண்டில் தொடக்கப் பள்ளிகளில் பயின்ற அயல்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை 4,00,791.

ஃபிரான்சுக்கும் அல்ஜீரியவுக்கும் இடையே 1981 டிசம்பரில் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கை, தொடக்கப்பள்ளிகளில் அரபு மொழியும் பண்பாடும் கற்பிப்பதற்கு வகை செய்கிறது. உயர்நிலைக் கல்வி நிலையில் அல்ஜீரிய மாணவர்கள் தங்கள் தாய்மொழியை முதலாவது அல்லது இரண்டாவது மொழியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தற்போது இங்குள்ள அல்ஜீரிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 150. இது இருமடங்காக்கப்படும்.

இருமொழி நாடாகிய லக்சம்பர்கில் அயல்நாட்டு மாணவர்கள் ஃபிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் போதிய புலமை பெறும் வகையில் தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன; சுவிட்சர்லாந்திலும் இது போன்ற வகுப்புகள் 1960களில் நடத்தப்பட்டன. பின்னர் இதற்கென ஆதாரத் திட்டங்கள் செயற்படுத்தப்படலாயின. பிரிட்டனில் 1966இல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி, ஒரு பகுதியில் வாழும் மக்களில் 2 சதவிகிதத்திற்கு அதிகமானவர்கள் வெளிநாட்டிலிருந்து குடியேறிவர்களாக இருந்தால், அவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், சமூகத் தொண்டர்கள் ஆகியோருக்கான ஊதியங்களில் 75% பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்படுகிறது. குடியேறியவர்களையும் கவனத்திற்கொண்டு பிரிட்டிஷ் கல்வி முறையில் தக்க திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற இயக்கத்தை பன்முகப் பண்பாட்டுக் கல்விக்கான தேசியச் சங்கம் நடத்தி வருகிறது.

சுவீடன் நாட்டில் மட்டுமே சிறுபான்மையினருக்குச் சாதகமாகப் பெரியதொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 1976இல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி, குடியேறியவர்கள் அவைருக்கும்—இளைஞர், முதியோர் இருவர்க்கும்—இருமொழிக் கல்விக்கு பொறுப்புறுதி யளிக்கப் பட்டிருக்கிறது. இங்கு குடியேறியவர்களின் குழந்தைகளுக்கு 20 தாய்மொழிகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களின் எண்ணிக்கை 1974இல் 835இலிருந்து 1977இல் 2000 ஆக உயர்ந்திருக்கிறது.

குடியேறிய நாட்டின் சமுதாயம், குடியேறியவர்களின் முக்கியத்துவத்தையும்' அவர்களின் உழைப்பினால் கிட்டும் வளத்தையும் உணர்ந்து கொள்ளாத வரையில், இந்த முன்னேற்றங்களினால் எல்லாச் சிக்கல்களுக் தீர்ந்துவிடாது. பள்ளிகளிலும், பணிகளிலும், சமுதாய வாழ்விலும், சட்டங்களிலும், செய்தித் தொடர்புச் சாதனங்களிலும், பொழுதுபோக்குகளிலும் பன்முகப் பண்பாட்டு பன்முகச் சமுதாய நோக்குடன் செயற்படுவதற்கான மனப்பான்மையை உருவாக்குவதற்குப் பெரும் இயக்கங்கள் நடத்தப்படவேண்டும். அயல்நாட்டவர் குடியேறிய பெரும்பாலான நாடுகளில் கடந்த 20 ஆண்டுகளில் மக்களில் வயது முதிர்வு வேகம் குறைந்திருப்பதையும் இந்த இயக்கங்கள் வலியுறுத்த வேண்டும்.

குடியேறியவரின் குழந்தையை ஒரு பொருளாதாரக் கொள்கையின் விளை பொருளாகக்' கருதுவதை விடுத்து, ஒரு மனிதப் பிறவியாகச் சமுதாயம் கருத வேண்டும். இக்குழந்தைக்குத் தனித் திறன்களும், சொந்த ஆற்றல்களும் உண்டு; வேறுபட்டு வாழ உரிமை இருப்பது போலவே, கல்வி பெறவும் பயிற்சி பெறவும் இதற்கு உரிமை உண்டு.

தமிழில்: இரா. நடராசன்

உலகினுள்ளே உள்ள சொல்

அனைத்துலகை ஆய்ந்து படித்தல்

சொல்லைப் படிக்கு முன் அனைத்துலகைப் படிக்கவேண்டும். பிந்தியதைப் படிப்பதென், றால் முந்தியதை இடையறாது படிப்பதாகும்'' கீழே: பிரேசிலில் விக்டோரியா தெ சான்டோ அன்டாவோவின் அருகிலுள்ள தொடக்கப் பள்ளிச் சிறுவர்.

நிழற்படம்: கிளாட் ஜேகோபி © பாரிமாஷ், பாரிஸ்



பாவ்லோ ஃப்ரேர்

படிக்கும் செயலினை நுட்பமாக ஆராய்ந்தால், அது எழுதிய சொற்களை அல்லது மொழியை மறைவான பொருளை புரிந்துகொள்ளும் ஒரு செயல் மட்டுமன்று; இந்த உலகையே அறிந்து கொள்வதற்கான ஒரு முன்னோடிச் செயல் என்பது தெளிவாகும்.

மொழியும், மெய்யியல்பும் இயங்காற்றலுடன் இணைந்தவை. ஆய்வு நோக்குடன் படித்து ஒரு வாசகத்தைப் புரிந்து கொள்கிறோம்என்றுபொருளாகும். படிக்கும் செயலின் முக்கியத்துவம் குறித்து நான் எழுத முனையும்போது, எனது குழந்தைப்பருவத்திலும், குமரப்பருவத்திலும், இளமைம்பருவத்திலும் என்னுள்ளே வளர்ந்து வந்த படிக்கும் செயலின் முக்கியத்துவம் பற்றிய அனுபவங்களை நான் மீண்டும் ''படித்துப் பார்க்க' வேண்டியிருக்கிறது.

'நான் இந்தக் கட்டுரையை எழுதுங்கால்; எனது நடைமுறை அனுபவத்தில் படிக்கும் செயல் நிகழ்ந்த பல்வேறு தருணங்களிலிருந்து நான் ''விலகிச்'' செல்கிறேன். முதலாவதாக, சொற்களைப் ''படிப்பது'' என்பது, எனது பள்ளி நாட்களில் எப்பொழுதும் ''சொல் உலகை'' படிப்பதாக இருந்ததில்லை. என்னைப் பொருத்தவரையில், எனது கடந்காலக் குழந்தைப் பருவத்தை நினைவு கூர்வதும், எனது படிக்கும் செயலைப் புரிந்து கொள்வதும், நான் வாழ்ந்த தனி உலகை அறிந்து கொள்வதும் மிக முக்கியமானதாகும்.

ரெசிஃப் என்னும் சிற்றூர். அடர்ந்த மரங்களுக்கிடையில் ஓர் எளிமையான பழைய வீடு. நான் பிறந்தது இங்குதான். இதன் அறைகளும், முற்றங்களும் நிலவறையும் அகன்ற உள்முற்றமும் நான் அறிந்த முதல் உலகம். இங்குதான் தவழ்ந்தேன்: மழலை மொழி பேசினேன். தளர் நடை பயின்றேன்: நடந்தேன்; பேசினேன். எனது தொடக்க காலப் படிப்புக்கான உலகமாக அமைந்தது இதுதான். இங்கு நான் கற்ற ''பாடங்கள்'', 'சொற்கள்', ''எழுத்துகள்'' என்பவை பல பொருள்களிலும் சைகைகளிலும் அடங்கியிருந்தன. இவற்றை அறிந்ததாலும், எனது பெற்றோருடனும் தமையன் தமக்கையருடனும் என்னுடைய உறவுகளாலும், எனது அறிவுத்திறன் விரிவடைந்தது.

இந்தச் சூழலில் குயிலின் பாடலை,

பாவ்லோ ஃப்ரேர் புகழ்மிகு பிரேசில் கல்வியாளர்; பலரைக் கவர்ந்துள்ள புதிய முறை எழுத்தறிவுக் கல்வியைத் தொடங்கியவர்; பிரேசில், சிலி, பிற லத்தீன் அமெரிக்க நாடுகளில் தம் சூழலை ''ஆய்ந்து அறியும்'' வகையில் வயதுவந்தோரைத் தூண்டும் இம்முறையை இவர் வகுத்தார். முன்னால் ரெசிஃப் (பிரேசில்) பல்கலைக்கழக கல்வி வரலாற்று, தத்துவப் பேராசிரியராகவும், ஹார்வர்டு வருகைப் பேராசிரியராவுமிருந்த இவர் ஐ. நா., யுனெஸ்கோ ஆகியவற்றிலும் பணி புரிந்துள்ளார். பெடகோஜி ஆஃப் தி அப்ரஸ்ட்'' (பெங்குவின், லண்டன், 1972) ''எஜூகேஷன் ஃபார் கிரிட்டிக்கல் கான்ஷியஸ்னஸ்'' ஷீட் அண்டு வார்டு, லண்டன், 1974) ''எஜுகேஷன் அண்டு தி ப்ராக்டிஸ் ஆஃப் ஃப்ரீடம்'' (எழுத்தாளர், வாசகர் வெளியீட்டுக் கூட்டுறவு, லண்டன்) ஆகியவை இவருடைய ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களுள் சில.

புயலை, முன்னறிவிக்கும் வேகமான காற்றில் அலைப்புறும் மரங்களின் உச்சிகளும், இடியும், மின்னலும், ஆற்று நீரின் சலசலப்பும் ஏரி நீரின் அலையும், தீவுகளும், சிற்றோடைகளும் எனக்குத் தொடக்க நிலைப் பாடங்களாகவும், சொற்களாகவும், எழுத்துகளாகவும் அமைந்தன. காற்றின் சீழ்க்கையொளியும், முகிற் கூட்டங்களும் அவற்றின் வண்ணங்களும், அசைவும், இலைகளின் வண்ணமும், தழைகளின் வடிவழகும், மலர்களின் நறுமணமும். அடிமரங்களும் பழத் தோலுங்கூட எனக்குப் பாடநூல்களாக. எழுத்துகளாக, சொற்களாக இருந்ததுண்டு.

வீட்டு விலங்குகள் கூட எனக்குப் பாடங் கற்பித்ததுண்டு. காலைச் சுற்றி வந்து அன்பு காட்டி, 'மியாவ்' ஒலியால் சீற்றங் காட்டும் பூனைகளும், வாலைக் குழைத்து வந்து நன்றி காட்டும் நாயும் எனக்கு ஒருவகையில் பாடங் கற்பித்த ஆசிரியர்கள். முதியவர்கள் தங்கள் நம்பிக்கைகளையும், விருப்பங்களையும், அச்சங்களையும், நெறிமுறைகளையும் இயம்பிய மொழிகளும்எனக்குப் பாடங்களாகின. நான் நேரில் அறிந்திருந்த குறுகிய உலகிலிருந்து, அறிந்திராத அகன்ற வெளியுலகுடன் நான் தொடர்பு கொள்வதற்கு இவையெல்லாம் உதவின.

எனது குழந்தைப் பருவத்திற்குச் செல்லும் இந்த முயற்சியில், சொற்களைப் படிக்கக் கற்றுக்கொள்வதற்கு முன்பு எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை மீண்டும் உருவாக்கி வாழ்ந்து காட்ட முயல்கின்றேன். எனது உலகைப் 'படிப்பது' மிகவும் இன்றியமையாதது எனக் கருதினேன். இந்த 'படிப்பு'' என்னை உரிய வயதை அடையும் முன்பே ஒரு மனிதனாக — அரைக் கால் சட்டை அணிந்த ஒரு பகுத்தறிவு வாதியாக ஆக்கிவிடவில்லை. எனது பயிற்சியின் காரணமாக என் குழந்தைப் பருவ ஆர்வங்கள் குன்றிவிடவில்லை. இதிலும் எனக்கு என் பெற்றோர்கள் உதவினார்கள். உண்மையைக் கூறின், அவர்களுடன் சேர்ந்துதான் நான் படிக்கும் சொற்களுக்கு அறிமுகமானேன். அதன்மூலம் நான் வாழும் உலகை அறிந்துகொள்ளும் அரிய அனுபவத்தைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றேன்.

சொற்களுக்கும் பொருள் கண்டுணர்தல் என்பது, எனது தனியுலகை ''படித்தறியும்'' திறனில் மேற்சுமத்தீடு செய்யப்பட்டிருக்கவில்லை; அது இயல்பாகவே வந்தது. உள்முற்றத் தரையிலும், மாமர நிழலிலும், என்னுடைய உலகின் சொற்களை — முதியோர் உலகின் சொற்களை அல்ல - படிக்கவும் எழுதவும் நான் கற்றுக் கொண்டேன். தரைதான் எனது கரும்பலகை; குச்சிகள்தான் எனது எழுதுகோல்கள்.

படிக்கும் பழக்கத்தின் மூலமாக படிக்கும் செயலின் முக்கியத்துவத்தை உணரும் திறன் எனது குமரப்பருவத்திலும், இளமைப் பருவத்திலும் வளர்ந்து வந்தது. அப்போது எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை 'மீண்டும் படிக்கும்'' முயற்சியிலிருந்து, எனது இளங்கலைஞர் பட்ட படிப்புக் காலத்திற்குச் செல்ல விரும்புகிறேன். அப்போது, எனது போர்க்சுகீசிய மொழி ஆசிரியரின் உதவியுடன் பாடங்களை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் படிக்கும் பயிற்சியைப் பெற்றேன்.

படிக்கும் செயல் குறித்து சில ஆசிரியர்கள் ஒரு தவறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்; பாடநூல்களின் பெருமளவு அத்தியாயங்களை ஒரே அரையாண்டுப் பருவத்தில் மாணவர்கள் படிக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம். நான் உலகப் பயணங்கள் மேற்கொண்டபோது, ஏராளமான நூல்களை ஆய்வு நோக்குடன் அல்லாமல் தேர்வுக்காகத் தாங்கள் படிக்கவேண்டியிருப்பது குறித்து இளம் மாணவர்கள் என்னிடம் குறை கூறினார்கள். ஒரு குறிப்பிட்ட நூலில் குறிப்பிட்ட பக்கங்களைப் படிக்கவேண்டும் எனக் குறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

பாடங்களைப் புரிந்துகொள்வதற்கு ஆழ்ந்து படிக்காமல், எந்திரம் போல் மனப்பாடம் செய்வதற்கு வழி செய்யும் வகையில் படிக்கவேண்டிய பாடங்களை அளவில் பெருக்குவது தவறான அணுகுமுறையாகும், இதனை ஏற்கலாகாது. ஒரு எழுத்தாளருடைய நூலின் தரத்தை மதிப்படுவதற்கு அவர் எழுதிய பக்கங்களின் எண்ணிக்கை இந்த அணுகுமுறைக்கு உகந்ததாகஇருக்கலாம். இதற்குக்கூட, அதிகப் பக்கங்கள் தேவையில்லை என மெய்ப்பிக்கப்பட்டுள்ளது, துறையில் தலைசிறந்த் இலக்கியமாகக் கருதப்படும் ''*பாயஸ்பாக் ஆய்வு நூல்*'' இரண்டரைப் பக்கங்களை மட்டுமே கொண்டிருக்கிறது. இவ்வாற கூறுவதால், நிறையப் படிக்கக் கூடாது என நான் கூறுவதாகக் கருதவேண்டாம். ஆசிரியர்களும், மாணவர்களும் தங்கள் அறிவை ஆழமாகவும் அகலமாகவும் வளர்த்துக் கொள்வதற்கு இலக்கியங்களை நிறையப் படிக்க வேண்டியதன் அவசியத்தை நான் இங்குமறுக்கவில்லை.

போர்ச்சுகீசிய மொழி ஆசிரியர் என்ற முறையில் எனக்கு நிறைய அனுபவம் உண்டு. கில்பர்ட்டோ பிரேர், லின்ஸ் டோ ரேகோ, கிரேசிலியானோ ராமோஸ், ஜார்ஜ் ஆமடோ போன்றவர்களின் எழுத்துக்களை எத்தனையோ முறை ஆழ்ந்து படித்திருக்கிறேன். இந்நூல்களை நான் வகுப்புகளில் மாணவர்களுக்குப் படித்துக் காட்டுவேன். அவர்கள் கையாண்டுள்ள மொழி நடையின் சிறப்பியல்புகளை விளக்கிக் கூறுவேன். போர்ச்சுகலிலும் பிரேசிலிலும் வழங்கும் போர்ச்சுகீசிய மொழியில் காணப்படும் வேறுபாடுகளை எடுத்துக்காட்டுவேன். எனது இந்தப் பழைய அனுபவங்களை நினைவு கூர்வது, எனது இளமைக் காலத்தைத் ''தொல்பொருளாய்வு'' செய்வதுபோல் இருக்கிறது. இந்த அனுபவங்களின் அடிப்படையில், சில ஆண்டுகளுக்கு முன்பு முதியோர் கல்வி கற்பித்தல் குறித்து நான் கூறிய திட்டத்தின் சில முக்கிய் அம்சங்களை இங்கு விளக்குகிறேன்.



''என் வீட்டின் உள் முற்றத்தின் தரையில், மாமரங்களின் நிழலில் என் பெற்றோரின் முதிர்ந்த உலகின்சொற்களையல்ல, எனது உலகின் சொற்களையே எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டேன். தரையே எனது கரும்பலகை, குச்சுகளே எழுது கோல்'' வலப்புறம்: இந்தியக் கிராமத்தில் ஒரு இளம் பெண்

நிழற்படம்: ஜோதி பட், பரோடா' இந்தியா © ஏசிசியூ, டோக்கியோ

முதியோர் கல்வி போதனையை ஓர் அரசியல் நடவடிக்கையாகவும், அதே சமயம் ஒரு படைப்பாற்றல் நடவடிக்கையாகவும் நான் எப்பொழுதும் கருதி வந்துள்ளேன். பா—பி—பீ—பொ—போ அல்லது லா—லி—லீ—லொ—சொ என்று எந்திரம்போல் மனப்பாடம் செய்யும் முறையைக் கொண்ட ஒரு பணியில் பங்கு பெறுவது என்னைப் பொறுத்த வரையில் இயலாத காரியம். இந்தக் காரணத்தாலேயே, மாணவர்களின் வெற்றுத் தலைகளில் சொற்களை ஆசிரியர் 'நிரப்புகிற' ஒரு முறையாக எழுத்தறிவுப் பயிற்சியை மாற்ற என்னால் இயலாது. மாறாக, மாணவர்களின் சொந்தத் திறனையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் வகையில் எழுத்தறிவுப் பயிற்சித் திட்டம் அமையவேண்டும்.

எழுத்தறிவுப் பயிற்சியில், ஆசிரியரின் உதவியானது, மாணவர்களின் படைப்பாற்றலையும், மொழியை எழுதிப்படிப்பதில் அவர்களுக்குள்ள பொறுப்பினையும் அழித்துவிடுகிறது என்பது சரியல்ல. எடுத்துக்காட்டாக, ஆசிரியர், மாணவர் இருவரும் ஒரு பொருள் கையில் பட்டதும், அதனைத் தொட்டு, உணர்ந்து பார்த்து அது என்ன பொருள் என்று சொற்களால் கூறுகிறார்கள். அந்தப் பொருள் ஒரு பேனாவாக இருந்தால், எழுத்தறிவில்லாதவர் அதனைப் பேனா என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். அதே சமயம் ஆசிரியர் 'பேனா' என்று சொல்லிக் காட்டுவதுடன் நிற்காமல், எழுத்தால் எழுதியம், எழுதியதையும் படித்துக் காட்டுகிறார், வாய்மொழியின் எழுத்து வடிவத்தை உள்ளடக்கியதே எழுத்தறிவாகும். இந்த எழுத்து வடிவத்தை மாணவருக்காக ஆசிரியர் செய்ய முடியாது. இங்குதான் மாணவர் தனது படைப்பாற்றலைக் காட்டவேண்டும்.

நான் ஏற்கெனவே கூறிய ஒரு கருத்தினை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். சொற்களைப் படிப்பதற்கு முன்னால் உலகைப் பகுத்தல் நடைபெறவேண்டும்; உலகைப் படிப்பதன் தொடர் நிகழ்ச்சியே சொற்களைப் படிப்பதாகும். உலகிலிருந்து சொல்லுலகுக்குச் செல்வதும், அங்கிருந்து மீண்டும் உலகுக்குச் செல்வதும் எழுத்தறிவுப் பயிற்சியில் எப்போதுமே இருந்து வருகிறது. இன்னும் சொல்வதாயின், சொற்களைப் படிப்பதற்கு முன்பு உலகைப் படிப்பது மட்டுமின்றி, அதனை எழுத்தில் எழுதும் முறையும் கற்கப்படவேண்டும். அதாவது, உலகைப் படிப்பது, எழுத்துப் பயிற்சியாக மாறவேண்டும்.

இந்த இயங்காற்றல் மிக்க இயக்கம், எழுத்தறிவிப்பு முறையின் தலையாய அம்சங்களில் ஒன்று. எனவேதான் எழுத்தறிவுப் பயிற்சியைத் தொடங்குவதற்கான சொற்கள், தொடர்புடைய தனிமனிதர்களின் உலகியல் சொற்கள் தாம். அவர்களுடைய உண்மையான மொழியையும், விருப்பங்களையும், கவலைகளையும், கோரிக்கைகளையும், கனவுகளையும் பிரதிபலிப்பனவாகும். இச்சொற்கள், கற்பவர்களுடைய வாழ்க்கை அனுபவப் பொருளை உள்ளடக்கியிருக்கவேண்டுமேயொழிய ஆசிரியரின் அனுபவத்தைக் கொண்டிருக்கலாகாது.

உதாரணமாக, 'செங்கல்' என்ற சொல், வீடுகட்டிக் கொண்டிருக்கும் கட்டுமானத் தொழிலாளர் குழு ஒன்றையும் குறிக்கும். ஆனால், ஒரு மக்கள் குழுமத்தின் வாய்மொழி எந்திரம்போல் மனப்பாடம் செய்வதற்காக அல்லாமல், புரிந்துகொள்ளப்படுவதற்காக எழுத்து வடிவில் அவர்களுக்கு மீண்டும் அளிக்கப்படும்போதுமலைறகண்டுணர்ந்த நிலைமைகளின் தொகுதியென்றுடன் நாம் மாணவர்களை எதிர் நோக்குவோம். உலகையே மாற்றுகின்ற மனித வழக்கத்தை அல்லது பணி முறையைப் புரிந்து கொள்வதன் வாயிலாகப் பண்பாடு என்றால் என்ன என்பதைக் கண்டுணர அல்லது ''படித்தறிய'' இந் நிலைமைகள் வழிகாட்டுகின்றன. உருப்படியான இந்த நிலைமைகளின் குறியீடுகள் காரணமாக, சொற்களைப் படித்தறிவதற்கு முன்னர், உலகம்பற்றிய முந்திய படிப்பினை ஒரு குழுமம் படித்தறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

உலகைப் பற்றிய நுட்பமில்லாத முந்திய படிப்பினை நுட்பமாகப் படித்தறியும் இந்தப் படிப்பு அநீதிகள் விதிவசமானவை எனச் சிலசமயம் கருதிவரும் மக்கள் குழுமங்கள், தங்கள் தேவைகள் பற்றி வேறுவிதமாக அறிந்து கொள்ள இயல்விக்கின்றது.

தமிழில்; இரா, நடராசன்

இச்சூழலின் ''வாசகங்கள்''. ''சொற்கள்'', ''எழுத்துக்கள்'' எல்லாம் நிலத்தில் ஓடிய மழைநீர் உண்டாக்கிய ஏரிகள், தீவுகள், சிற்றாறுகள் ஆகியவற்றிலும், இவைகளின் வண்ணத்திலும் வடிவங்களிலும், மலர்களின் மணத்திலும் அடங்கியிருந்தன....'' கீழே: பிரேசில் ஆற்றில் மாபெரும் அலைகளினிடையே ஒரு சிறுவன் மீன்பிடிக்கிறான்.

நிழற்படம் ப்ருனோ பார்பே ©மாக்னம், பாரிஸ்

நிழற்படம்: ஜே.பி. லாஃபோன் ஐ. எல். ஓ.
© சிக்மா, பாரிஸ்





நிழற்படம்: லெயோனார்டு ஃப்ரீட் ©
மாக்னம், பாரிஸ்

நிழற்படம்: ஜோசே மாயான், பாரிஸ்

நான்கு தடைகள்

1980இல் 82.4 கோடி பேர் எழுத்தறிவற்றோர் என மதிப்பிடப்பட்டது. உலகில் எழுத்தறிவற்றோரின் தொகையை வளர்க்கும் காரணங்களுள் கீழ்க்கண்ட நான்கு முக்கியமானவை: (1) மக்கள்தொகை பெருக்குடன் தொடக்கப் பள்ளியில் சேர்வோரின் தொகையும் குறைகின்றது. (வலப்புறம்) இதனால் மிகுதியான சிறுவர் பள்ளிக்குச் செல்வதில்லை. (2) இவர்களில் பலர் விரைவில் பள்ளியைவிட்டு விலகுவதால் (மேலே) கல்விப் பயனைப் பெறாமல் மீண்டும் ஏறக்குறைய எழுத்தறிவற்றோராகின்றனர். (3) இவ்வாறு திரும்பவும் எழுத்தறிவு இழப்பதால் தொழில்மயமான நாடுகளும் பாதிக்கப்படுகின்றன. அங்கு, வேலையில்லாதோர் (மேலே வலப்புறம்) போன்று தாழ்நிலையிலுள்ளோரிடையே இதுமிகுதியாக காணப்படுகிறது. (4) அகதிகள், குடிபுகுவோர் (கீழே) ஆகியோரின் எண்ணிக்கை பெருகுவதால் எழுத்தறிவற்றோரின் தொகை மேலும் உயர்கின்றது.

நிழற்படம்: எல். டெனிசோ, யு. என். சி. ஆர்., ஜெனிவா,

யுனெஸ்கோவும், எழுத்தறிவின்மைக்கு எதிரான போராட்டமும்

கல்வி வளர்ச்சிக்கான மாபெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், கல்வி பெறும் உரிமை அனைத்துலகளவில் இன்னமும் முழுமையாக பரவவில்லை. மிக அதிக அளவில் மனித இனத்தையும் நாடுகளையும் பாதிக்கும் இப்பிரச்சினையின் வெளிப்படையான அடையாளம்—எழுத்தறிவின்மையாகும்.

1980ஆம் ஆண்டில் ஆஃப்ரிக்காவில் வயது வந்தோரின் மொத்த எண்ணிக்கையில்60.3சதவீதமும் ஆசியாவில் 37.4 சதவீதமும் இலத்தீன் அமெரிக்காவில் 20.2 சதவீதமும் எழுதம் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர். 1970இல் 32.9 சதவீதமாக இருந்த எழுத்தறியாதோரின் எண்ணிக்கை விகிதம்1980இல் 28.6 சதவீதமாகக் குறைந்தாலும் இவர்களின் மொத்த எண்ணிக்கை அதிகமாகி வருவதற்குக் காரணம் மக்கள் தொகைப் பெருக்கமே. 1970ஆம் ஆண்டில் 76 கோடியும் — 1980இல் 82.4 கோடி பேர் எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர். இந்நிலை தொடர்ந்தால் இந்நூற்றாண்டின் இறுதியில் கோடியாக இத்தொகை உயர்ந்துவிடும்.

1980 செப்டம்பர்-அக்டோபரில், பெல்கிரேடில் நடைபெற்ற யுனெஸ்கோவின் இருபத்து ஒன்றாவது பொது மாநாட்டில் எழுத்றிவின்மைய்யை ஒழிப்பது மிகமிக அவசரமாக, முன்னுரிமை அளித்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணி என்பது வலியுறுத்தப்பட்டது. இதற்கென இரு வழிகளில் செயல்படவேண்டும் என இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டட்டது. துவக்கக் கல்வியை பொதுவாக அறிமுகப் படுத்துவது ஒருவழி. அதே சமயம் இன்னொரு முனையில், முதியோர் கல்வியையும், முதியோருக்கு எழுத்தறிவிப்பதையும் விரிவு படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இனிவரும் பத்தாண்டுகளில், ஆரம்பக் கல்வியை வளர்ப்பதும் எழுத்தறிவின்மையை ஒழிப்பதும் யுனெஸ்கோவின் முக்கியப் பணிகளில் ஒன்றாக இருக்கும். 1984-89-க்கும் யுனெஸ்கோவின் இடைக் காலத்திட்டத்தில் ஒரு பொருள் ''அனைவருக்கும் கல்வி'' என்ற பெரும் திட்டம் ஒன்று இடம் பெறுகிறது. இத்திட்டத்தில் ஒரு புதிய அணுகுமுறை அறிமுகமாகிறது. பள்ளிக்குச் செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து இளைஞரிடையேயும் வயது வந்தோரிடையேயும் எழுத்தறிவுடையோரின் எண்ணிக்கை விகிதத்தை அதிகரித்து எழுத்தறிவின்மையின் வேரினையே அழிப்பதற்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. தேசிய ஆராய்ச்சித் திட்டம் பயிற்சித்திறன் இவற்றுக்கு வலுவூட்டுவதும், ஒருங்கிணைந்த பள்ளிப் பதிவு மற்றும் கல்விப் பயிற்சி முறைகளைச் செயலாக்குவதற்காக வட்டார அளவில் ஒத்துழைப்புத் திட்டங்களை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இந்த இடைக்கால திட்ட காலத்தில், எழுத்தறிவிலார் எண்ணிக்கையைக் குறைத்துவிடுவதே இதன் முக்கிய நோக்கம். யுனெஸ்கோவை பொறுத்தவரை, நான்கு குறிக்கோள்களை நோக்கி அது செயல்படும்.

- தனிப்பட்டோர், குழுவினர் என இவர்களிடையே எழுத்தறிவின்மைப் பிரச்சினையையும், ஒவ்வொரு நிலையிலும் அதற்கான காரணங்களையும், விளைவுகளையும் அதனை அகற்றுவதற்கான வழிமுறைகலளயும் புரிந்து கொள்வது.

- ஆரம்பக் கல்வி அனைவருக்கும் வழங்கி எழுத்தறிவின்மையை ஒழிக்க, கிராமப்புறங்களில் சிறப்பாக கவனம் செலுத்துவது; இங்கே குறிப்பாக பெண்டிருக்கும் சிறுமியருக்கும் அதிக கவனம் செலுத்துவது; இதற்கென தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் வட்டார அளவிலும் புதிய உத்திகளை மேற்கொள்ளும் பணியில் உதவி தருதல்.

- சிறுவர்களுக்கும் பெரியோருக்கும் கற்பிக்கவும் வயது வந்தோருக்கு எழுத்தறிவிக்கும் பணியில் ஈடுபடவும் பணியாளருக்குப் பயிற்சியும், மறு பயிற்சியும் அளிப்பது.

கல்வியறிவின்மைக்கு எதிரான போராட்டத்தை வலுவாக்குதல் பள்ளியைப் விட்டுச் செல்லும் சிறுவர்கள் பள்ளியில் பெற்ற அறிவையும் திறமையையும் மேலும் வளர்த்துக் கொள்ள வழி செய்தல்—இவர்கள் பயிர்த் தொழிலிலும் கைத் தொழிலிலும் ஈடுபட வழிசெய்யும் வகையில் — வழிமுறைகளை வகுத்துத் தருதல்.

கல்வித்துறைப் பணியாளருக்கும் வல்லுநருக்கும் யுனெஸ்கோ ஏற்கெனவே பயிற்சித் திட்டங்களை வகுத்துள்ளது. பல நாடுகளில் வட்டாரக் கூட்டுறவினையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்த மாநாடுகளைக் கூட்டியுள்ளது. கூட்டங்களுக்கும் கருத்தரங்குக்கும் ஏற்பாடு செய்துள்ளது. செய்தி அனுபவம் பற்றிய கருத்துப் பரவலுக்கும், பரிமாற்றத்துக்கும் ஏற்பாடு செய்துள்ளது. இதற்கான தொழில்நுட்பக் கருத்துக்களைப் பதிப்பித்து, மற்ற கருவிகளை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளது. நாட்டளவில் மேற்கொள்ளப்படும் திட்டங்களும் ஆதரவும் ஊக்கமும் அதிகரித்து வருகின்றன. சர்வதேச அளவில் ஆதரவு தேடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அறியாமையை ஒழிக்கும் பணியில் வளர்ந்து வரும் நாடுகள் மேற்கொண்டுள்ள முயற்சி வலுவடைய, யுனெஸ்கோ பொதுவான பிரச்சினை உள்ள நாடுகளிடையே நேரடியான ஒத்துழைப்பு ஏற்படுத்த யுனெஸ்கோ முயன்று வருகிறது. அப்பாற்பட்ட பல தரப்பட்ட பரஸ்பர உதவியினால் கல்வித் துறையில் பலன் ஏற்படத் தொடங்கியுள்ளது. இலத்தீன் அமெரிக்க நாடுகள் கரீபியன் நாடுகள் இவற்றுக்கான கல்வித் திட்டமும் ஆஃப்ரிக்காவுக்கான வட்டாரத் திட்டமும் பயன்தரத் தொடங்கியுள்ளன,

இத்துறையில் நாடுகளுடைய முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற கருத்துடனேயே யுனெஸ்கோ அன்றும், இன்றும் செயல்பட்டு வருகிறது. நாடுகளின் உண்மை நிலலயை உணர்ந்து, அந்நாட்டின் பிரச்சினையின் தனித்தன்மைக்கு ஏற்ப தீர்வு காணும் திட்டங்களை ஊக்குவிப்பதில் யுனெஸ்கோவுக்குப் பெரும் பங்கு உண்டு.

தமிழில்: எஸ்- சம்பத் குமார்

எழுத்தறிவுப்பணி விருதுகள்—1983

1983ஆம் ஆண்டின் எழுத்தறிவு நாளைக் கொண்டாடும் வகையில் செப்டம்பர் 8ஆம் தேதி யுனெஸ்கோவின் தலைமையகமான பாரிஸில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பத்து நிறுவனங்களும் கல்வியறிவின்மையை ஒழிக்கும் பணியில் சிறந்த தொண்டாற்றியதற்காக இரண்டு பேரும் விருதுகளையும் நற்சான்றிதழ்களையும் பெற்றனர். இந்தியாவைச் சேர்ந்த திரு. மால்கம் ஆதிசேஷய்யா தலைமையில், நடுவர் குழு இப்பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தது.

■ நோடஷ்டா க்ருப்ஸ்காயா பரிசு

1969இல் சோவியத் யூனியனால் நிறுவப்பட்ட இப்பரிசு **லெசாத்தோ கல்விப் பயிற்சி நிறுவனத்திற்கு** கிடைத்துள்ளது. வானொலி மற்றும் தனக்குச் சொந்தமான "மொய்துதி" என்ற செய்தித்தாள் இதற்கெனத் தனியே உருவாக்கப்பட்ட புதிய பயிற்சி சாதனங்கள், 28 "அறிவூட்டும் மையங்கள்" இவற்றின் உதவியுடன், இந்நிறுவனம் ஆண்டுக்கு ஆயிரம் பேருக்குக் கடந்த ஆறு ஆண்டுகளில் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்துள்ளது." அறிவு மையங்கள் இந்நாட்டின் பத்து மாவட்டங்களில் மூன்று மாவட்டங்களில் 3,000 மாணவர்களுக்கு உதவுகிறது. இவை துவக்கப் பள்ளிகளிலோ அல்லது குடிசைகளிலோ இயங்குகின்றன. 1974இல் தோன்றிய இந்நிறுவனம், 1,200,000 பேர்கள் கொண்ட மக்கள் தொகையில் 55 சதவீதமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

நற்சான்று

(1) ஜமெய்க்காவைச் சேர்ந்த திருமதி. **ஜாய்ஸ் ராபின்சன்** ஒரு தேசியப் பொது நூலக அமைப்பை நிறுவுவதற்கு உதவிய பின்னர், ஜமெய்க்கா, நாட்டின் சிறந்த இலக்கிய அமைப்பான 'ஜமால்' என்ற நிறுவனத்தின் தலைவரானார்.

(2) **வுவாங் சீயெம் டோன்**—வியட்நாம் சோஷலிஸ்ட் குடியரசைச் சேர்ந்தவர். 81 வயதான இவர் தம் நாட்டின் எழுத்தறிவின்மையை ஒழிக்க 44 ஆண்டுகள் பாடுபட்டார். போர்க்களத்தில், காகிதம், மை, சாக் இவற்றுக்குப் பதில் உள்நாட்டில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தியவர் — எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கான வியட்நாம் குழுவின் தலைவர்.

■ நோமா பரிசு

ஜப்பானியர், திரு. ஷோயிஷி நோமோ நிறுவியது. **பர்மாவின் கல்விப் பணி இயக்கத்திற்கு** அளிக்கப்பட்டது. 1964இல் தொடங்கிய இந்த இயக்கம் உள்நாட்டு வசதிகளின் அடிப்படையில், தாமாக முன்வந்து சேவை செய்வோரின் உதவியுடன், சமூக ஈடுபாட்டுடன், எழுத்தறிவின்மையை எதிர்த்துப் போராடியது. சிறு நகரக் குடியிருப்பில் திட்டத்தைத் தொடங்கி, அங்குள்ளோர் அனைவரும் கல்வியறிவு பெறும்வரை செயல்படும் இத்திட்டத்தால் 18 இலட்சம் மக்கள் எழுத்தறிவு பெற்றனர். இதற்கென 231 குழுக்கள் 1964 முதல் பணியாற்றின.

நற் சான்றிதழ்

(1) **மலேசியாவைச் சேர்ந்த தேசிய மொழி இலக்கிய வளர்ச்சி நிறுவனம்** தேசிய மொழியில் கல்வியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, குறைந்த விலையில் பாடநூல்களை வெளியிடுகிறது.

(2) **வானொலி மூலம் கல்வி கற்பிக்கும் இலத்தீன் அமெரிக்க சங்கம்**—க்விடோ ஈக்வேடர். இந்நிறுவனம் 41 அமைப்புகளுக்கு வானொலி மூலம் கல்வியைப் பரப்புகிறது. 17 இலத்தீன் அமெரிக்க நாடுகள் பயனடைகின்றன.

■ சர்வதேச படிப்போர் சங்க விருது

5000 டாலர் மதிப்புள்ள இவ்விருது. **கென்யா அரசின் முதியோர் கல்விப் பிரிவுக்கு** வழங்கப்படுகிறது. 1979இல் துவக்கப்பட்ட இத்திட்டங்கள் இந்நாட்டின் 50 இலட்சத்திற்கும் மேற்பட்டோரைப் பயனடையச் செய்துள்ளன. இத்திட்டத்தில் 3,000 முழுநேர ஆசிரியரும் 5,000 பகுதி நேரப் பயிற்சியாளரும் 6,000 "தன்னுதவி" ஆசிரியரும் ஈடுபட்டுள்ளனர். 3,50 000 மாணவர்களைக் கொண்ட 18,000 வகுப்புகளின் அனுபவம் வயது வந்த ஒருவர் ஆறு முதல் ஒன்பது மாதத்திற்குள் எழுத்தறிவு பெற்றுவிட முடியும் என்பதைக் காட்டியுள்ளது.

நற்சான்று

(1) பிரேசிலின் கல்வி அறிவுப்பணி இயக்கம் மோப்ரால். இதன் திட்டம் **பேரைஹோ திட்டம் ஆகும்.** எழுத்தறிவுப் பணியையும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் கல்விப் பணியையும் சமுதாயத்தின் கலாச்சாரத்துடன் ஒருங்கிணைக்க இந்நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகளை நடுவர் குழு பாராட்டுகிறது.

(2) **இராக் பெண்கள் பொதுக் கூட்டமைப்பு,** இவ்வமைப்பு எழுத்தறிவித்தலை முன்னுரிமைக் குறிக்கோளாகக் கொண்டு, ஈராக் நாட்டின் தேசியக் கல்வித் திட்டத்திற்குப் பெரும் தொண்டாற்றியுள்ளது.

■ ஈராக் கல்வியறிவுப் பரிசு

ஈராக் அரசு வழங்கும் இப்பரிசு பெரு நாட்டின் **அல்பெலிட்** என்ற நிறுவனம் பெற்றது. இது ஒரு சேவை நிறுவனம். நகரக் குடிசைப் பகுதிகளிலும் கிராமத்தின் வளர்ச்சி குன்றிய பகுதிகளிலும் பணியாற்றுகிற்து. பயில்வோரின் வாழ்க்கை முறையைக் கருத்தில் கொண்டு, தனியே கல்விச் சாதனங்களையும், தொடர்ந்து செயல்படுவதற்கான கருவிகளையும் உருவாக்கியுள்ளது. இதன் ஒவ்வொரு மையத்திலும் நான்கு பேர், உள்ளூர் மக்களின் உதவியுடன் பணி புரிகிறார்கள். அல்பெல்ட் 117 எழுத்தறிவுப் பாடத்திட்டங்களை உருவாக்கி, 1979 முதல் 1982 வரை, 9,557 பேருக்கு எழுதப் படிக்கக் கற்பித்துள்ளது.

நற்சான்று

(1) **பங்களா தேசத்தின் கிராமப்புறக் கல்வி சாதன மையம்.** இம் மையம் கிராம வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது. இதன் புதிய திட்டம் முறை சாராக் கல்வியையும், பள்ளிக்கு வெளியேயுள்ள கல்வியையும் இணைக்கிறது.

(2) **மக்க்ள் கல்விக்கான கானோ அரசு அமைப்பு**-நைஜீரியா 1981இல் இதன் அடிப்படைக் கல்வித் திட்டப்படி, 100,000 மக்கள் பயனடைந்தார்கள். இது 1982இல் மேற்கொள்ளப்பட்ட தேசிய எழுத்தறிவு இயக்கத்திற்கு வலுவான அடித்தளமாக அமைந்தது.

யுனெஸ்கோ கூரியர், அக்டோபர்- நவம்பர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது அக்டோபர்-நவம்பரில் ஒரே இதழாக வெளிவரும் [ஆண்டுக்கு 11 இதழ்கள் பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும் கட்டுரைகளையும் 'யுனெஸ்கோ' கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும் போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும் பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

துணை தலைமை ஆசிரியர்: ஓல்கா ரோடல்
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலம்: ஹோவார்ட் ப்ராபின் (பாரிஸ்)
ஸ்பானிஷ்: ஃபெர்ணன்டெஸ்-ஸாண்டேஸ் (பாரிஸ்)
ரஷ்யன்: விக்டர் கோ லியச்கோவ்
ஜெர்மன்: வெர்னர் மெர்க்ளி (பெர்ன்)
அராபிக்: அப்தல் மேனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ்: கஸுவோ அகவோ (டோக்கியோ)
இத்தலியன்: மரியோ கெய்டேட்டி (ரோம்)
ஹிந்தி: கிருஷ்ண கோபால் (டெல்லி)
ஹீப்ரு அலெக்ஸாண்டர் ப்ரோய்டே (டெல்-அவிவ்
பெர்சியன்: சமத் நௌரினஜத் (டெஹ்ரான்
டச்சு: பல் மோரென் (அண்ட்வெர்ப்)
போர்த்துக்கீஸ்: பெனடிக்டோ சில்வா (ரியோ டி ஜெனீரோ)
துர்க்கியஷ்: மெஃப்ர இல்கசர் (இஸ்தாம்புல்)
உருது: ஹக்கீம் முஹம்மது சையத் (கராச்சி)
கட்டலான்: ஜோன் கார்ரெராஸ் மார்ட்டி (பார்சிலோனா)
மலேசியா: பகதூர் ஷா (கோலலம்பூர்)
கொரியன்: லீ குவாங் யங் (சியோல்)
சுவாஹிலி: டெமிஞோ ருத்தாயேபெசிப்வா (தார்-எஸ். ஸலாம்)
ஃபிரெய்லி: ஃப்ரெடிரிக் போட்டர் (பாரிஸ்)
கிரேரடோ-செர்ப், மாசிடோனியன், செர்போகிராட்
ஸ்லோவேன்: புனிசா பாவ்லோவிக் (பெல்கிரேட்)
சீனம்: ஷென் குவேஃபென் (பீகிங்)
பல்கேரியன்: பவல் பிஷரெவ் சோஃபிய
கிரீக்: அல்கிஸ் ஆஞ்செலோ
அமைப்பு வடிவம்: ராபர்ட் ஜாகுமின்
...ரக் கடிதங்களும் பிரதம ஆசிரியருக்கே எழுதப்படவேண்டும்.

Edited and Published by M. Mohammed Mustafa for the Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras - 600 031 and Printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras - 600 026.

நட்புக்கரம்

யுனெஸ்கோ தலைமை இயக்குநர்

அச்சமூட்டும் உறுதியின்மையும் மாபெரும் நம்பிக்கையும் மிகுந்த காலத்தில் வாழ்கிறோம். இது முதல் முறையாக உலக நாடுகள் அளவளாவி உறவு கொண்டாடும் ஒரே அமைப்பாக இணையும் காலம். இனிமேல் அவற்றின் எதிர்காலம் ஒன்றையொன்று சார்ந்திருக்கும். அவை பெற்றுள்ள அறிவியல் தொழில் நுட்ப வளங்கள் தம் உடனடியான பிரச்னைகள் பலவற்றைத் தீர்க்க உதவும்.

ஆனால் இதைச்செய்வதற்கு அவை தம் நோக்கத்தில் ஒன்றுபட்டு, பொதுவான ஓர் எதிர்காலத்தை எதிர்நோக்கியிருப்பதால் தம் முயற்சிகளிலும் ஒன்றுபடவேண்டும். அதாவது, ஒன்றையொன்று சார்ந்திருப்பதைவிட ஒன்றுபட்டுச் செயல்பட முடியுமென மனுக்குலம் எண்பிக்க வேண்டும்.

எவ்வளவு தொலைவிலிருந்தாலும், அவர்களையும் அருகிலிருப்பவராகக் கருதி உதவுவதே ஒன்றுபடும் பழக்கமாகும்.

இவ்வொற்றுமையைத் திணிக்க முடியாது; அதை வாழ்ந்துகாட்டவேண்டும். ஒற்றுமையைச் செயல்படுத்துவதே யுனெஸ்கோவின் முக்கிய பணிகளுள் ஒன்று. ஒற்றுமையினால்தான் பல்வேறு நகர்கள், நாடுகள், கண்டங்கள் ஆகியவற்றிலுள்ள மக்களையும் தனிமனிதரையும் இணைக்கவல்ல நட்பை உருவாக்கமுடியும்.

ஆகவே, 'யுனெஸ்கோ கூரியர்' ஈடுபட்டுள்ள ஒற்றுமை இயக்கத்தில் பங்கு பெறுமாறு இன்று உங்கள் ஒவ்வொருவரையும் வேண்டுகிறேன்.

'யுனெஸ்கோ கூரியர்' வாசகரான நீங்கள், உங்களுக்குத் தெரியாத ஆனால் உங்கள் உடன்பிறப்பான ஒருவரை, வாழ்க்கை நிலைமையின் காரணமாக உங்களுக்கு அந்நியராகத் தோன்றும் ஒருவரை, உங்களை ஒன்றாக இணைக்கும் பிணைப்புகளை எல்லாம் 'யுனெஸ்கோ கூரியர்' வாயிலாகக் காட்டக் கூடிய ஒருவரை நினைத்துக் கொள்ளுங்கள். அவருக்காகச் சந்தா செலுத்தி, மனிதரிடையே அமைதியையும் நட்பையும் வளர்க்க முயலும் யுனெஸ்கோவிற்கு உதவுங்கள்.

இவ்வாறு செய்வதன் மூலம் 'யுனெஸ்கோ கூரிய'ரை அனைத்துலக ஒற்றுமையின் உண்மையான குரலாக்க உதவ முடியும்.

அமது மஹ்தார் எம்'போ

('நட்புச்' சந்தா அனுப்பும் விவரங்களுக்கு எதிர்ப்பீறச் சீட்டைப் பார்க்கவும்)

நட்புக்கரம்

''நட்புக்கரம்'' இயக்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, நான் அறிந்திராத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நண்பர்களுக்கு ''யுனெஸ்கோ கூரியர்'' அனுப்புவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஓராண்டுச் சந்தாக்கள் அளிக்க விரும்புகிறேன்.

ஒருமைப்பாட்டு இயக்க சிறப்பு விகிதம்

- ☐ 1 ஓராண்டுச் சந்தா :ரூ 21
- ☐ 2 ஓராண்டுச் சந்தாக்கள்:ரூ 42
- ☐ 3 ஓராண்டுச் சந்தாக்கள்:ரூ 63
- ☐ 4 ஓராண்டுச் சந்தாக்கள்:ரூ 84
- ☐ 5 ஓராண்டுச் சந்தாக்கள்:ரூ105
- ☐ 10 ஓராண்டுச் சந்தாக்கள்:ரூ210
- ☐ 20 ஓராண்டுச் சந்தாக்கள்:ரூ420

'நேசக்கரம்' சந்தாத் திட்டத்தில் ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ் அராபிக் இதழ்களுக்கு சந்தாச் செலுத்த விரும்புவோர் 'நேசக்கரம்' 7, பிளேஸ் தெ ஃபோந்தனோ, பாரிஸ், ஃபிரான்ஸ் என்ற முகவரிக்கு எழுதுக.

பெரிய எழுத்துகளில் எழுதுக.

என் பெயர்

என் முகவரி

பின்கோடு நகரம்

நாடு

☐ நான் 'யுனெஸ்கோ கூரியர்' சந்தாதாரர் அல்லன்.

☐ நான் ஒரு சந்தாதாரர்; எனது எண்: ____________

நீங்கள் அளிக்கும் சந்தா அல்லது சந்தாக்கள் முடிவுறும்போது, சந்தாவைப் புதுப்பிப்பதற்கான வேண்டுகோள் உங்களுக்கு அனுப்பப்படவேண்டுமா எனக் குறிப்பிடுக.

☐ ஆம் ☐ வேண்டாம்.

உரிய செலுத்தம் இன்றிவரும் வேண்டுகோள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

ரூபாயில் அல்லது மாற்றக்கூடிய மற்றொரு செலாவணியில் அல்லது பன்னாட்டு பணவிடை மூலம் செலுத்தம் செய்ததற்கான செலுத்துச் சீட்டினை இத்துடன் இணைத்துள்ளேன்.

அனுப்பவேண்டிய முகவரி :
'யுனெஸ்கோகூரியர்'—தமிழ்ப்பதிப்பு
18 கிழக்கு ஸ்பர்டாங் சாலை,
சேத்துப்பட்டு, சென்னை-600 040
தமிழ்நாடு, இந்தியா

உங்களுடைய நன்கொடையைப் பெற்ற மூன்று மாதங்களுக்குள், உங்களுடைய பெயரையும் முகவரியையும் யுனெஸ்கோ மன்றங்கள் மற்றும் சங்கங்களின் இணையம் உங்கள் எதிர்கால நண்பருக்கு அல்லது நண்பர்களுக்குத் தெரிவிக்கும்.



மிகுதியாக விற்பனையாகும் யுனெஸ்கோ நூல்

உலகின் எல்லாப் பகுதிகளிலும் பெறக்கூடிய மேல் படிப்பு, பயிற்சி பற்றிய வாய்ப்புகளைக் காட்டும் யுனெஸ்கோ பார்வை நூலின் அண்மை (24ஆம்) பதிப்பு.

■ 115 நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள், அரசாங்கங்கள், பல்கலைக் கழகங்கள், பிற நிலையங்கள் வழங்கும் 2,00,000-க்கு மேற்பட்ட கல்வி உதவி, பயண நிதியுதவி, பிற வகை நிதியுதவிகள் பற்றிய பட்டியல் அடங்கியது.

■ எங்கு, யார், என்ன படிப்பது, எங்கு எப்படி விண்ணப்பம் அனுப்புவது போன்ற செய்திகளை எளிதில் தருகின்றது.

■ எல்லா கல்வி, தொழிற்கல்வித் துறைகளிலும், உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கு மேற்பட்ட கல்வியும், பயிற்சியும், யுனெஸ்கோ வழங்கும் பட்ட மேற்படிப்பு உதவியும் உட்பட்ட உதவிகள் அளிக்கப்படும்.

1104 பக்கம்
ஆங்கில, ஃபிரெஞ்சு ஸ்பானிய மொழிகளில்
55 ஃபிரெஞ்சு ஃபிராங்க்.

'யுனெஸ்கோ கூரியர்'

'தமிழ்ப் பண்பாடு' சிறப்பிதழ்

உலகின் 27 முக்கிய மொழிகளில் வெளிவருகிறது

உலக கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு சிறப்பம்சங்களை விளக்கும் சிறப்பு மலராக தனது சர்வதேச மாத இதழாகிய 'யுனெஸ்கோ கூரியர்' இதழைத் தமிழ்ப் புத்தாண்டு (ஏப்ரல் '84) அன்று வெளியிடவிருக்கிறது.

உலகத்தின் மிக மூத்த பண்பாடுகளில் ஒன்றாக உலக ஆராய்ச்சியாளர்களால் கணிக்கப்படும் தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு சிறப்பம்சங்களை உலக மக்களுக்கு ஆதாரபூர்வமான தகவல்களோடு படவிளக்கங்களுடன் வெளியிடவிருக்கிறது.

உலகப் புகழ்பெற்ற தொல்பொருளாய்வாளர்களும் தமிழறிஞர்களும் எழுதும் ஆய்வுக் கட்டுரைகளின் மூலம் தமிழரின் பெருமையை, தமிழ்மொழியின் சிறப்பை, தமிழ்ப் பண்பாடு, கலை, இலக்கியத் தனித்தன்மைகளை, உலக நாகரிக வளர்ச்சியில் தமிழரின் பங்கு பணிகளை ஆதாரபூர்வமாக உலகம் முழுமையும் அறிந்து கொள்ள 'யுனெஸ்கோ கூரியர்' அரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆண்டுச் சந்தா தனிப்பட்டவர்களுக்கு ரூ. 21/-
கல்வி நிலையங்கள், பொது நூலகங்களுக்குச் சலுகைச் சந்தா ரூ. 19/-

சந்தாதாரராக விரும்புவோர் தொடர்பு கொள்க :

'யுனெஸ்கோ கூரியர்'
தென் மொழிகள் புத்தக டிரஸ்ட்,
18, கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை, சென்னை-600 031.

REGD. NO. M. 8276



நிழற்படம் : ஃப்ரான்ஸே ராய் டுட்ரைய்ட், ஆட்டாவா

உலக எழுத்தறிவு நாள்

17ஆம் உலக எழுத்தறிவு நாளாகிய செப்டம்பர் 8, 1983இல் ஆட்டாவாவில் ஒரு பூங்காவில் வைக்கப்பெற்ற இச்சித்திரங்கள், கனடா நாட்டவர் சிலர் தமது இயலாமையாகிய எழுத்தறியாமையை உணர்த்துவதைக் காட்டுகின்றன. இந்த ஓவியர் எல்லாரும், எழுத்தறிவற்றோருக்கு உதவுவதற்காக ஆட்டாவாவிலுள்ள ஒரு நிலையம் நடத்தும் எழுத்தறிவு வகுப்புகளில் பயில்கின்றனர். எழுத்தறிவின்மை, அதன் இயல்பு, சமூக விளைவுகள் பற்றி உலக சமுதாயத்திற்கு உணர்த்துவதற்காக 1966இல் நிகழ்ந்த யுனெஸ்கோ பொது மாநாடு செப்டம்பர் 8ஐ உலக எழுத்தறிவு நாளாக அறிவித்தது. உலக எழுத்தறிவு வளர்க்கும் போராட்டத்தில் ஒவ்வொரு நாடும் பெறும் பங்கைத் தெரிவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் இந் நாள் உலக முழுவதும் கொண்டாடப் பெறுகின்றது.